

கல்கி
KALKI 24-11-74 60



ASP/JIL-V-8/74-TAM

விவா

ஆரோக்கியம் கொழிக்கும் குடும்பங்களில் விரும்பப்படுவதற்கு சில சிறந்த காரணங்கள்

அதிக ஊட்டமளிக்கிறது:

தூய்மையான ஆடைப்பால் சத்தும் பார்லி மால்ட்டின் முழு ஊட்டச் சத்துக்களும், கோதுமை மால்ட்டின் அதிக வளமுள்ள ஊட்டச் சத்துக்களும் விவாவில் மட்டுமே கலந்துள்ளன. புரதம், கார்போஹைட்ரேட், வைட்டமின்கள் மற்றும் கனிம சத்துக்கள் கொண்ட இயற்கையின் வளமான ஊற்று இது.

விரைவில் சீரணிக்கக் கூடியது:

இதற்குக் காரணம் கோதுமை மால்ட். அதாவது மிக எளிதில் சீரணிக்கும் வடிவிலுள்ள கோதுமை ஊட்டச் சத்து. இதுவும் பால், பார்லி மால்ட், இயற்கையான பால் சர்க்கரைகள் மற்றும் கனிம சத்துக்களும் விசேஷமாகப் பதப்படுத்தப் பட்டிருப்பதால், விவா எளிதில் சீரணிக்கப்படுகிறது; உடனடியாக உட்கிரகிக்கப்படுகிறது; விரைவில் பயனளிக்கிறது.

கலப்பது எளிது:

விசேஷ பதமாக்கும் முறையும், வாக்குவம் ட்ரையிங் முறையும் காரணமாக விவா உடனடியாகக் கரைகிறது. இதைக் கூழாக்க வேண்டிய அவசியமில்லை. விவா தண்ணீரிலும் பாலிலும் எளிதில் கரைகிறது; விநாடிகளில் பருகத் தயார்.

சுவையில் சிறந்தது:

விவாவிலுள்ள இரண்டு முக்கியமான சேர்க்கைப் பொருட்கள் மால்ட் மற்றும் பால். அவை விவாவிற்கு முற்றிலும் இசைவை வைத் தருகின்றன. குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் விரும்பும் வகையில் தனிப்பட்ட ருசியைத் தருகின்றன.

நவீன தொழில்நுட்ப முறை:

விவா அதிநவீன தொழில் நுட்ப முறையில், கடுமையான தரக் கட்டுப்பாட்டின் கீழ் தயாரிக்கப் படுகிறது.


இந்தியாவில் தயாரிப்போர்,
ஜகத்ஜித் இன்டஸ்ட்ரீஸ் லிட்.

தேர்ந்தெடுப்பீர் விவா

விவா

தருவது அதிக அளவில் அதிக ஊட்டம்




…எல்லாமே பாரி மிட்டாய்,  டாஃபிகளை சுற்றிலுமே.

Parry's

பாரிஸ் கன்பெக்ஷனரி லிமிடெட்,
பாரி ஹவுஸ், சென்னை.

ஆயிரக்கணக்கான நம் நாட்டு மக்கள் தங்களுடைய சேமிப்பை உங்கள் தொழிலில் முதலீடு செய்வதென்பதன்றோ நம்பிக்கைக்குச் சான்று!



இச்சம்பவம் பல வருடங்களுக்கு முன் நடந்தது—அதாவது டாடா அயர்ன் & ஸ்டீல் கம்பெனி துவங்கியபொழுது. ஆயிரக்கணக்கான மக்கள் 'அமருவதற்கு ஆசனமும், உண்பதற்கு உணவும்' உடன் எடுத்துச் சென்று டாடாவின் அலுவலகத்தின் முன் அவரது புது கம்பெனியில் பங்கு (ஷேர்) வாங்கக் காத்து நின்றனர்.

பணக்காரர், ஏழை. இரு சாராருமே ஒன்றுபோல் பணத்தை முதலீடு செய்தனர்.

மூன்றே வாரங்களில் சுமார் எட்டாயிரம் மக்கள் 230 லட்சம் ரூபாயை புதிய தொழில் துவக்கத்தில் முதலீடு செய்தபொழுது ஸ்ரீ தொராப்ஜீ டாடா அவர்கள் இச்சாதனையைப்பற்றி பெருமையுடன் எழுதியதாவது: 'அது ஒரு முற்றும் புதிய சுதேசி ஸ்தாபனமாக, சுதேசிகளின் பணத்தையும், சுதேசிகளின் ஆக்கத்திறனையும் கொண்டு உருவாக்கப்பட்டது'.

அது நடந்தது 1907ம் ஆண்டில். இன்றும் டாடா ஸ்டீலில் அதே பொறுப்புணர்ச்சி தலைதூக்கி நிற்கிறது. இந்திய மக்களில் சுமார் எழுபத்து ஐயாயிரம் பேர் டாடா அயர்ன் & ஸ்டீல் கம்பெனியில் பங்குதாரர்களாக இருக்கும் அதே பெருமிதம் இன்று ஒரு விதத்தில் டாடாவில் தலைமுறையாக வரும் சம்பிரதாயமாகவே ஆகிவிட்டதென்று கூறலாம்.


டாடா ஸ்டீல்

HT-TIS-7352


அடுத்த இதழில்.. கல்கி

ஆனந்த, கார்த்திகை 9 நவம்பர் 24, '74

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



அழகிய நகரம் சண்டிகருக்கு நமது தனி ஆசிரியர் நேரில் சென்று பெற்ற அனுபவங்கள், நகரின் வர்ணனைகள்.



சிருங்கேரி பீடாதிபதிகள் தமது வாரிசை ஸ்வீகாரம் செய்து கொண்ட புனித சம்பவம் பற்றிய படங்கள், செய்திகள்.



கல்பாக்கம் அணுமின் நிலையம் அடைந்து வரும் முன்னேற்றம், பௌதிக இயல் வல்லுநரின் சாதனைகள், ஒளிமிக்க எதிர்காலம்...



ஹென்ன

(ஆயூர்வேதிக்) ஹேர் ஆயில்


எமது அரிய புதிய தயாரிப்பு-ஹென்ன (ஆயுர்வேதிக்) ஹேர் ஆயில்

முற்றிலும் மருதாணியும்,
மற்றபச்சிலைகளையும்
கொண்டு தயாரிக்கப்பட்டது.
பொடுகை ஒழிக்கவும்,
கண்களுக்கு குளிர்ச்சியைக்
கொடுக்கவும், இள நரையை
போக்கவும் ஒரு அரிய தைலம்
தினசரி காலையும், மாலையும்
இதைத் தேய்த்து ஸ்நானம்
செய்தால் சுகமான நித்திரை
அளிக்கும். ஆண், பெண் இரு
பாலரும் இதை உபயோகித்துப்
பயன் அடையலாம்.
நீண்டடர்ந்த கரும் தலைமுடிக்கு
ஹென்ன (ஆயுர்வேதிக்)
ஹேர் ஆயில். ஒவ்வொரு
குடும்பத்திற்கும்
இன்றியமையாதது.




கேசவர்த்தினி பிராடக்ட்ஸ்,
ஆற்காடு சாலை, சென்னை-600087

KVP: 120/74



த.நா.கா.க. புதிய தலைமை
நவீன சாகுந்தலம்!



இனி நம்மையெல்லாம் மறந்துவிட மாட்டாங்களே!
சமூக பாதுகாப்புத் திட்டம்
ஊனமுற்றோர் மறுவாழ்வு
கண் ஒளி வழங்கும் திட்டம்
இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம்

கல்கி

மலர் 34

இதழ் 17

தமிழ்த் திருநாட்டைத் தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

தி.மு.க. அரசின் தனிப் பெருமை!

பாரதத்தில் வேறு எந்தக் கட்சியோ அல்லது ஆட்சியோ நினைத்துக்கூடப் பார்த்திராத அளவில் சமூக நலத் திட்டங்களை அமுல்படுத்திய பெருமை தி. மு. க. அரசுக்கு உண்டு. பிச்சைக்காரர் புனர்வாழ்வுத் திட்டம், கைரிக்ஷா ஒழிப்புத் திட்டம், ஊனமுற்றோருக்கு மறுவாழ்வுத் திட்டம், கண்ணொளி வழங்கும் திட்டம் முதலியன எல்லாம் பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் உரியன.

இப்போது புதிதாக இரண்டு சமூக நலத் திட்டங்களை அறிவித்திருக்கிறது தமிழக அரசு. ஒன்று அரசு ஊழியர்களின் குடும்ப நலத் திட்டம். மற்றது பொதுமக்களுக்கான தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம். இந்தத் திட்டங்களின்படி மாதாமாதம் தமது சக்திக்கு ஏற்பப் பத்து ரூபாய் முதல் அறுபது ரூபாய்வரை ஒருவர் பணம் செலுத்தி வருகிறார். தவணைக் காலமும் அவரவர் வயதுக்கு ஏற்பப் பத்து ஆண்டுகள் முதல் இருபத்தைந்து ஆண்டுகள் வரை வேறுபடுகிறது. தவணைக் காலத்துக்குப் பிறகு அடுத்த முப்பது ஆண்டுகளுக்கு அவர் கட்டிய பணத்துக்கு ஏற்ப மாதா மாதம் இருபது ரூபாய் முதல் நூறு ரூபாய்வரை கிடைத்து வரும். முப்பதாண்டுகளுக்குப் பிறகு ஒரு கணிசமான தொகையும் மொத்தமாய்க் கைக்கு வந்து சேருகிறது.

கொடுத்த பணத்தைத்தான் வட்டியுடன் திரும்பப் பெறுகிறோம் என்பதால் இதைப் பென்ஷன் திட்டம் என்று அழைப்பது சரியல்ல என்பதுடன் தன்மானத்துக்கும் ஏற்றதாயில்லை. மேலும் பாங்குகளில் ரிகரிங் டெபாஸிட்டில் பணம் செலுத்தி வந்து குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு கிடைக்கும் பணத்தை ஃபிக்ஸட் டெபாஸிட்டில் போட்டால் தற்போது தமிழக அரசு அறிவித்துள்ள தொகைக்கு அதிகமாகவே கிடைக்கும் என்று சிலர் எடுத்துக் காட்டியுள்ளனர்.


என்றாலும் தமிழக அரசின் திட்டத்தில் வேறு சில அனுகூலங்களும் உள்ளன. உதாரணமாக அரசாங்க ஊழியர் பதவிக் காலத்திலேயே உயிர் துறக்க நேரிட்டால் அவரது குடும்பத்துக்கு உடனடியாகப் பத்தாயிரம் ரூபாய் கிடைக்கிறது. அவ்விதத்தில் இது இன்ஷூரன்ஸ் திட்டமாகவும் செயல்படுகிறது.

ஆயுள் இன்ஷியூரன்ஸ் கார்ப்பரேஷனின் பணியும் தபால் நிலையங்களில் மத்திய அரசு அமுலுக்குக் கொண்டுவந்துள்ள பென்ஷன் திட்டமும் தமிழக அரசின் திட்டங்களால் ஓரளவு பாதிக்கப் படலாம் என்ற கவலை ஸி. 'சுப்பிரமணியத்துக்கு ஏற்பட்டுவிட்டது. எனவேதான் இத்திட்டங்களை அங்குரார்ப்பணம் செய்த அவர், மத்திய அரசின் திட்டங்களுக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் மாநில அரசின் திட்டங்கள் அமைய வேண்டும் என்று கூறியுள்ளார்.

எல்லா அரசாங்கங்களும் மக்களின் நலனைக் கவனிக்கவே ஏற்பட்டவை என்பதால் எந்த அரசுக்குப் பணம் போய்ச் சேருகிறது என்பதைப் பற்றி மக்களுக்கு அவ்வளவாக அக்கறையிராது. எந்த விதமாக அந்தப் பணம் செலவாகிறது என்பதைப் பற்றித்தான் அவர்கள் கவலையெல்லாம். எனவே, தமிழக அரசு சேமிப்பை ஊக்குவித்தால் மட்டும் போதாது. மக்களின் சேமிப்புப் பணம் குட்டி போட்டுப் பெருகும் விதத்தில் அரசு அதைத் திறம்பட முதலீடு செய்ய வேண்டும். அத்தகைய அரசே மக்களின் க்ஷேமநல அரசு பாராட்டுக்குரிய அரசு.

தமிழக அரசின் சமூகநலத் திட்டங்களில் குறைபாடுகளையும் நாம் காணாமல் இல்லை. முக்கியமாக இத்திட்டங்களுக்கு நன்கொடைகள் வசூலிக்கும் விஷயத்தில் பலர் வற்புறுத்தலுக்கும் அதிகாரிகளின் மிரட்டலுக்கும் ஆளாகிறார்கள். இதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். இப்போது ஆரம்பமாகியுள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டத்திலும் மக்கள் அதன் பயன் உணர்ந்து சேர வேண்டுமே ஒழிய அதிகாரிகளுக்கு இலக்கு நிர்ணயித்துக் கெடுபிடிகளுக்கு வழி வகுத்துவிடக் கூடாது.

சமூக நலத் திட்டம் சமூகக் கொடுமைத் திட்டமாக மாறிவிடாமல் தி. மு. க. அரசு கவனித்துக் கொள்ளட்டும்.



...அழகான ஆடைகளும் அதற்கு உதவின என்று !

MAFATLAL GROUP

நிச்சயமாக, மஃபத்லால் க்ரூப் அளிப்பவை நேர்த்தியான துணிமணிகள்தான் !

AIYARS-M. 458 TM

மலைவிழுங்கி மகாதேவன்!

பொக்காரோ என்ற மாற்றுப் பெயர் கொண்ட மலைவிழுங்கி மகாதேவனை நமது காருண்யம் மிக்க மத்திய அரசு ருஷ்ய ஒத்துழைப்புடன் வளர்த்து வருகிறது. அவனுக்கு எத்தனை பணம் தீனியாகப் போட்டாலும் போதவில்லை! ஏப்பம் விட்டு விட்டு மேலும் கொண்டா, கொண்டா என்கிறான்!

பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காய் முடிந்த கதையாக ஏன்னவோ திட்டம் போட்டார்கள்; ஏதோ நடக்கிறது! திட்டம் ஆரம்பமான 1965ம் ஆண்டில் 707 கோடி ரூபாய் செலவிட்டதும் பொக்காரோ எஃகு ஆலை செயல்படத் தொடங்கும் என்றார்கள். 1970ல் 1090 கோடி ரூபாய் செலவாகும் என்றார்கள். பிறகு, இரண்டாவது கட்டமான நாலு மில்லியன் டன் உற்பத்தி நடக்கும்போது 2500 கோடி செலவாகியிருக்கும் என்றார்கள். ஆனால் முதல் கட்டமான 1.7 மிலியன் டன் உற்பத்தி நடக்கும்போதே மலை விழுங்கி 4000 கோடி ரூபாயை ஏப்பம் விட்டிருப்பான் என்பது இப்போது சர்வ நிச்சயமாகி விட்டது! இந்த லட்சணத்தில் இந்த எஃகு ஆலை எப்படி லாபகரமாகச் செயல்பட முடியும்?

ஆண்டொன்றுக்கு இருபது கோடி ரூபாய் நஷ்டமாகும் என்று இப்போதே கணக்குப் போடுகிறது அரசு. காலக் கிரமத்தில் இது இன்னும் அதிகமாகப் போகிறதே ஒழிய நிச்சயம் குறையாது.

ஒவ்வொரு மாத காலதாமதமும் பல கோடி நஷ்டத்துக்கும் மூலதனச் செலவில் பல கோடி அதிகரிக்கவும் வழிவகுக்கிறது. இந்திய அதிகாரிகளைக் கேட்டால் தாமதமெல்லாம் மாஸ்கோவினால்தான் என்கின்றனர். ருஷ்யரோ இந்தியாவின் ஒத்துழைப்பு சரியில்லை என்கின்றனர். இடையில் அப்பாவி இந்தியன், தான் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி அழுகின்ற வரிப் பணம் பொக்காரோவில் அழுகிக் கொண்டிருப்பதைப் பார்த்துத் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான்.

மகிழ்ச்சி குலைந்தது!

சென்னையில் நாற்பது குடிசைகள் தீக்கிரையாகி, நானூறு மக்கள் வீடு வாசலிழந்த கொடுமை தீபாவளிக்கு முதல் நாள் நடந்து. திருநாளின் மகிழ்ச்சியைக் குலைத்து விட்டது. இத் தீவிபத்தில் மூன்று குழந்தைகள் மடிந்தது ரொம்பப் பரிதாபம்.

ஆகாயத்தில் சென்று நெருப்புப் பொறிகளைச் சொரிந்தபடியே கீழிறங்கும் ராக்கெட்டுகள், ஏரோப்ளேன் வாணங்கள், அவுட்டுகள் ஆகியனதாம் மிகவும் ஆபத்தானவை. குடிசை மாற்று வாரியத்தின் பணி நூறு சதவீதம் பூர்த்தியாகும்வரை இதுபோன்ற வாணங்களின் தயாரிப்புக்குத் தடை விதிக்க வேண்டும்.

பரீட்சை பூதம் மடிகிறது!

அமரர் கல்கி அவர்கள் ''பரீட்சை என்னும் பாதகம்'' என்னும் தலைப்பில் எழுதி வந்த கட்டுரைகளில் நமது உயர் நிலைக் கல்வியில் பெரும் மாறுதல் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார். எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் ஒரு மார்க் குறைவினால் தேறாமல் போய் மாணவன் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்குப் போய்விடுவது இந்தப் 'பரீட்சை என்னும் பாதக'த்தினால்தான் என்பதை எவ்வளவோ விளக்கமாக எழுதியிருக்கிறார். இன்று அவர் ஆன்மா சாந்தியடையும் வகையில் அவர் கோரிக்கை நிறைவேறியிருக்கிறது.

இனி எந்த மாணவனும் 'ஃபெயில்' என்று சொல்லி நிறுத்தப்பட மாட்டான். இனி மாணவர்கள் மூன்று நான்கு தரங்களில் (grades) பிரிக்கப்படுவார்கள். ஒரு மாணவன் தமிழிலும் விஞ்ஞானத்திலும் தரம் வாய்ந்தவனாக இருப்பான். ஆனால் அவன் கணிதத்தில் தரக் குறைவாக இருக்கலாம். ஆனால் அதற்காக அவனை மேல் வகுப்புக்கு அனுப்பாமல் நிறுத்திவிட மாட்டார்கள். அவன் எப்பாடத்தில் பலவீனமாக இருக்கிறானோ, அப் பாடத்தைச் சிரத்தையாகப் படிக்க விசேஷ வசதிகள் செய்து தருவார்கள்.

இச்சீர்திருத்தத்தை மத்திய உயர்நிலைக் கல்வி போர்டு சிபாரிசு செய்துள்ளது. மாநில அரசுகள் அடுத்த ஆண்டிலிருந்து

ராஜாஜி சிந்தனை

உற்பத்தியை அதிகரிப்பதே தேசபக்தி

முன்னேற்றம் என்பது உழைப்பைப் பொறுத்த விஷயம். ஒவ்வொரு தனி மனிதனின் உழைப்பும் நேர்மையும்தான் தேசத்தின் முன்னேற்றமும் செல்வாக்கும். இத்தகைய உழைப்பு கடுமையான வரிவிதிப்புச் சுமையிலிருந்து விடுதலைபெற வேண்டும். உற்பத்தியை அதிகரிப்பதே இன்று தேசபக்தி. இந்தத் தேசபக்தியுடன் செயலாற்ற முடியாமல் மக்களுக்கு இருக்கும் முட்டுக்கட்டை முதுகை ஒடிக்கும் வரிச் சுமை. விலைவாசி உயர்வுக்கான காரணங்களை ஆராய்ந்து அவற்றைச் சீராக்க வேண்டுமேயொழிய விலைவாசிகளுடன் குஸ்திச் சண்டை போடுவதால் பயனில்லை. தொழிலகங்களைத் தேசிய மயமாக்குவதும், அரசாங்கமே வியாபாரத்தில் இறங்குவதும் விலைவாசிகளைக் குறைக்க உதவா.

இச்சீர்திருத்தத்தை அமுல்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விவேகம் வெற்றி பெறட்டும்!

உலக நாடுகளுள் பதினைந்து ஒன்றுசேர்ந்து ஐ. நா. சபையில் எல்லாவிதமான அணுகுண்டு சோதனைகளுக்கும் தடை விதிக்கவேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்துள்ளன. இதில் ஆக்க ரீதியான காரியங்களுக்காகப் பூமி மட்டத்தினடியில் அணுகுண்டு சோதனைகள் நடத்துவதற்கு விதிவிலக்கு ஏதும் அளிக்கப்படவில்லை என்பது கவனத்துக்கு உரியது. எந்த விதமான சூழலில் நடத்தப்படும் எந்த விதமான அணுகுண்டுச் சோதனையானாலும் அதற்குத் தடை விதிக்க வேண்டும் என்ற இத்தீர்மானம் விவேகத்தின் குரல், மனிதாபிமானத்தின் குரல். இப்படி ஒன்றுபட்டு ஒற்றுமையாய்க் குரல் எழுப்பிய பதினைந்து நாடுகளுக்கும் மக்கள் சமுதாயம் நன்றிக் கடன் பட்டிருக்கிறது.

தீர்க்கதரிசனமின்றிச் செயலாற்றும் நாடுகளின் கூச்சலிலும் வல்லரசுகளின் ஆணவக் கூப்பாட்டிலும் இந்த விவேகத்தின் குரல் அடங்கிவிட அனுமதிக்கலாகாது. ஐக்கிய நாடுகள் சபை ஐயம் திரிபற இது விஷயத்தில் செயலாற்ற வேண்டும்.

துக்கடா

☐ நவம்பர் 4ம் தேதி தில்லியில் கதவடைப்பு. வியாபார ஸ்தலமான கன்னாட் ஸர்க்கிளில் ஒரு கடை பாதி திறந்திருந்தது.

அந்தக் கடைக்கு வந்த ஒருவர் கடைக்காரரிடம் "கடையைத் திறந்திருக்கிறீர்களா மூடியிருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

கடைக்காரர்: "இரண்டும்தான்!"

ஹிந்துஸ்தான் டைம்ஸ்

சிங்கப்பூர் தண்டனை!

☐ சிங்கப்பூரில் போலி மருந்துகள், கலப்பட மருந்துகள் விற்பவர்கள் கடுமையான பிரம்படிக்கு உள்ளாகிறார்கள். நீதிமன்றங்கள் இருபத்திநாலு பிரம்படி வரைக்கும் வழங்கலாம். பிரம்படி சரீரத்தில் மட்டுமின்றி மனத்திலும் தீவிர தழும்பு ஏற்படுத்துவதால் குற்றங்கள் பெரிதும் குறையும் என்று சிங்கப்பூர் அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

அமிர்தபஜார் பத்திரிகா.

விடுதலையின் விலை

☐ வட கல்கத்தா காய்கறி மார்க்கெட்டுக்கு அருகில் சிலர் லைசென்ஸ் பெறுமல் காய்கறி வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களைக் கைது செய்து போலீஸ் வானில் அடைத்தனர். ஆனால் போலீஸ் வான் நகர மறுத்தது. என்ஜினில் ஏதோ கோளாறு. வண்டிக்குள் இருந்த காய்கறிக் கடைக்காரர்கள் இறங்கி வண்டியைத் தள்ளின பிறகுதான் புறப்பட்டது. அவர்கள் செய்த இவ்வுதவிக்காகப் போலீஸ் அதிகாரி அவர்களை விடுதலை செய்து விட்டார்!

அமிர்தபஜார் பத்திரிகா.

அக்தர் — ஆரம்ப நிகழ்ச்சி

☐ நாற்பதாண்டுகளுக்கு முன் குவெட்டா பூகம்பத்தில் சிக்கி வீடு வாசல் இழந்தவர்களுக்காக நிதி திரட்டக் கல்கத்தாவில் ஒரு பெரிய சங்கீத நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ள அந்நாளில் மிகவும் புகழ் பெற்றிருந்த பல சங்கீத வித்வான்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் யாருமே வரவில்லை. அப்பொழுது பேகம் அக்தர், மேடை ஏறி அறியாத இருபது வயதுப் பெண். எதிர்பார்த்த வித்வான்கள் வராமற் போகவே, இந்தச் சிறுமியை மேடை ஏற்றினார்கள். நான்கு கஜல் பாடல்கள் பாடி முடித்தாரோ இல்லையோ, அதன் பிறகு சபையோர் வேறு யார் பாட்டையும் கேட்கத் தயாராயில்லை!

ஹிந்துஸ்தான் டைம்ஸ்

சாதனை

☐ கேரளத்தின் சரித்திரத்தில் ஒரு மந்திரி சபை தொடர்ந்து ஐந்தாண்டுகள் இருந்தது என்பது கிடையாது. இந்த அரிய சாதனையை வெற்றிகரமாகச் சாதித்திருக்கிறார் அதன் முதன் மந்திரி திரு வி. அச்சுத மேனன். பல கட்சிகள் கொண்ட கூட்டு மந்திரி சபைக்குத் தலைமை தாங்கி வெற்றிகரமாக ஐந்தாண்டுகள் நடத்தியிருக்கிறார்.

தலையங்கம் — இண்டியன் எக்ஸ்பிரஸ்

காஷ்மீரைக் காக்கக் கொடுக்கும் விலை!


☐ காஷ்மீர் தலைவர் ஷேக் அப்துல்லா, இன்றைய காஷ்மீர் அரசாங்கம் தனது நிதி நிர்வாகத்துக்கு மத்திய அரசை நம்பியிருப்பதைக் கடுமையாகக் கண்டித்தார். உணவுக்கு மட்டும் காஷ்மீர் அரசாங்கம் மத்திய ஆட்சியிடமிருந்து 19 கோடி ரூபாய் கோரிப் பெறுகிறது. காஷ்மீர் அரசாங்கத்தின் வருஷ வருமானம் 35 கோடிதான். ஆனால் அரசாங்கம் சம்பளமாக மட்டும் 50 கோடி ரூபாய் செலவழிக்கிறது!

காஷ்மீர் விளைவிக்கும் உணவுப்பொருளையே உண்டு வாழும்படி காஷ்மீர் மக்களை அப்துல்லா கேட்டுக் கொண்டார்.

இந்தியன் நேஷன்



இயற்கை உங்களுக்கு அளித்துள்ளது எழில்மிகு கேசம்...
அதனை அவ்வண்ணமே வைத்திருப்பீர்
ஹேலோ கேச பராமரிப்புமூலம்



HSR.G.I.TM

ஹேலோ ஷாம்பூக்கள் மட்டுமே சீரான, சிறந்த உத்தியின்படி தயாரிக்கப்படுகின்றன—உங்கள் கேசத்தின் பராமரிப்பிற்கெனவே

ஹேலோ காஸ்மெடிக் ஷாம்பூ:
இந்த விசேஷ ஷாம்பூவை உபயோகித்து, உங்கள் கேசம் எவ்வளவு மெத்தென்றும், மிருதுவாகவும் இருக்கக் கூடும் என்பதைக் கண்டு கொள்ளுங்கள்.


ஹேலோ எக் ஷாம்பூ:
விசேஷ போஷாக்கு மிக்க இந்த ஷாம்பூவில் உள்ள வளமிக்க முட்டைப் புரதத்தின் பயனாக உங்கள் கேசம் கட்டுக்கோப்புடன், கவர்ச்சியாகத் திகழ்கிறது.



ஹேலோ லெமன்—ஃப்ரெஷ் ஷாம்பூ:
உங்கள் கேசத்திற்கு இயற்கையான தூய்மையான பளபளப்பைத் தருகிறது.

ஹேலோ கான்ஸென்ட்ரேட் ஷாம்பூ:
சாமான்ய நுரையைத்தின் மூலம் உங்கள் கேசத்தை மென்மையாகவும், கட்டுக்கடங்கியும் வைத்திருக்க சிறிதளவே போதும்.

இயற்கை ஆரோக்கியத்துடன் கூடிய கேசத்திற்கு—இன்றே உபயோகிக்கத் தொடங்குவீர் ஹேலோ



வாழ்க்கை இன்பத்துக்கு எல்லையேது பஜாஜ் சாதனங்கள் இருக்கும்போது!

குளிர் காலத்தில் வெதுவெதுப்பு!

உங்கள் வீட்டில் வெதுவெதுப்பான சுகமளிக்கும் சூழ்நிலையை உண்டாக்க விரும்பினால், பஜாஜ் சாதனங்கள் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும். உண்மையில், பஜாஜ் சாதனங்கள் அனைத்துமே சுகவாழ்வுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ரூம் ஹீட்டர், இம்மர்ஷன் ஹீட்டர், போர்ட்டபிள் கீஸர், வாஷிங் மெஷீன் முதலியவை.

தவிர பஜாஜ் கம்பெனிக்கு மட்டுமே நாடெங்கிலும் 3,500 விற்பனையாளர்களும், 16 கிளை அலுவலகங்களும் உள்ளன. இதன் மூலம் நாங்கள் விற்பனைக்கு முந்திய-பிந்திய சேவைகளைத் திறம்பட ஆற்றி வருகிறோம்.



பஜாஜ் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்

45—47, வீர் நரிமன் ரோடு, பம்பாய்—400 023

இந்தியாவெங்கிலும் கிளைகள் உள்ளன.

bajaj

heros'BE-214TAM

மகாலக்ஷ்மி ③



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சங்கராசார்ய சுவாமிகள்

ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி பொன்மழை பொழிந்தது பற்றி மூகர் 'பஞ்சசதியில்' பாடியிருக்கிறார். (கடாக்ஷ-ஸ்துதி சதகம்). துண்டீர தேசத்தில் ஸ்வர்ண வர்ஷத்தைப் பெய்தவள் என்கிறார். துண்டீரம் என்பதே தமிழில் தொண்டை மண்டலம் என்பது. பல்லவர்களின் தலைநகரான காஞ்சியைச் சுற்றிய சீமைக்குத் தொண்டை மண்டலம் என்று பெயர். இப்போதும் இந்தச் சீமையில் பொன் விளைந்த களத்தூர் என்றே ஓர் ஊர் இருப்பது உங்களில் சிலருக்கேனும் தெரிந்திருக்கலாம்.

அத்வைத ஸ்தாபகாசாரியரான ஸ்ரீ சங்கரருக்காகப் பொன்மழை பெய்த மகாலக்ஷ்மி, காஞ்சிபுரத்தில் விசிஷ்டாத்வைத ஆசாரியரான ஸ்ரீ தேசிகனுக்காகவும் பொன்மழை பெய்திருக்கிறாள். வேதங்களின் முடிவான உபநிஷதங்களில் கரை கடந்தவர் என்பதாக அவரை 'நிகமாந்த மகாதேசிகன்' என்றே சொல்வார்கள். 'ஸர்வதந்திர ஸ்வதந்திரர்' என்றும் அவருக்குச் சிறப்பு உண்டு. குதிரை முகம் கொண்ட மகாவிஷ்ணுவான ஹயக்ரீவர் அவருக்குப் பிரத்யட்சம். வடகலை சம்பிரதாயத்துக்கு மூலபுருஷர் அவர். ஸ்ரீ தேசிகனிடம் ஏழைப் பிரம்மசாரி ஒருத்தன் போய்த் தன் கல்யாணத்துக்குப் பணம் வேண்டும் என்று யாசித்தான். இதிலிருந்து நான் சொல்ல வந்த விஷயத்துக்குச் சம்பந்தமில்லாவிட்டாலும், என் மனசில் ரொம்பவும் முக்கியமாக உள்ள இன்னொரு விஷயத்துக்கும் ஆதரவு கிடைக்கிறது. அதாவது அவர் காலத்தில் — அதாவது எழுநூறு வருஷங்களுக்கு முந்தி—பிள்ளை வீட்டுக்காரன் தான் பெண் வீட்டுக்குப் பணம் கொடுத்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டான், வரதட்சிணை வாங்குகிற பழக்கம் இல்லை என்று நிரூபணமாகிறது. அப்போது அவர், ''ஸ்ரீஸ்துதி'' என்கிற உத்தமமான ஸ்தோத்திரத்தால் மகாலக்ஷ்மியைப் பிரார்த்தித்தார். உடனே பொன்மழை பொழிந்தது. சங்கரர், தேசிகர் இவர்களின் கருணையிலிருந்து வாக்கு மழையாகப் பொழிந்தது; பொன்னும் மழையாகப் பொழிந்தது.


மகா லக்ஷ்மியின் பரமாநுக்கிரகத்தைப் பெற்ற இன்னொரு மகான் ஸ்ரீ வித்யாரண்யர். அத்வைத ஆசாரியர்களில் மிகவும் சிரேஷ்டமான ஸ்தானம் அவருக்கு உண்டு. ஆனால் அவருடைய முழுப் பெருமை இதுமட்டுமல்ல. நாலு வேதங்களுக்கும் சேர்த்துப் பாஷ்யம் பண்ணின மகாபுருஷர் அவர். ஜோதிஷம், வைத்ய சாஸ்திரம், தர்மசாஸ்திரம், (ராஜ்ய பரிபாலனம் பண்ண உதவும்) அர்த்த சாஸ்திரம், இலக்கியத் துறை என்றிப்படி எல்லாவற்றுக்கும் கிரந்தங்கள் உபகரித்தவர் அவர். அவருடைய பெயரே காரணப் பெயராக இருக்கிறது. வித்யா — அரண்யர். அரண்யம் என்றால் காடு. ஒரு பெரிய காட்டில் பல தினுசான மரம் செடி கொடிகளும் மண்டியிருக்கிற மாதிரி வித்தையின் பல துறைகளும் அவரிடம் செழிப்பாகச் சேர்ந்தன.

இவரைப் பற்றி நான் சொல்லப் போகிற கதையைச் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக் கொள்வார்களோ, மாட்டார்களோ? 'ஹிஸ்டரி'க்காரர்கள் 'மிஸ்டரி' (அற்புத நிகழ்ச்சி) வந்தால் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஆனால் இன்றைக்கும் ஸயன்ஸுக்குப் பிடிபடாத அற்புதங்களைப் பற்றிக் கேள்விப் பட்டுக்கொண்டுதான் இருக்கிறோம்.

கதை இதுதான்: பூர்வாசிரமத்தில் வித்யாரண்யர் ஏழைப் பிரமச்சாரியாக இருந்தபோது மகாலக்ஷ்மியைக் குறித்துக் கடும் தவம் இருந்தார். இவருடைய சிரத்தையை மெச்சி மகாலக்ஷ்மி பிரசன்னமானாள். ஆனால் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள். ''இந்த ஜன்மாவில் உனக்குத் திரவியம் பெறுகிற யோக்கியதை இல்லை. அது விதியின் நிர்ணயம். அடுத்த ஜன்மாவில் அநுக்கிரகிக்கிறேன்'' என்று கூறி அந்தர்தானமானாள்.

பிற்காலத்தில் இரண்டாவது சங்கரர் என்கிற அளவுக்குப் பிரக்யாதி பெறப் போகிறவர் இவர். அதற்கேற்றாற்போல், இப்போதே ஆதி சங்கரர் செய்த ஒரு 'சாமர்த்திய'த்தை இவரும் செய்து காட்டிவிட்டார். அது என்ன 'சாமர்த்தியம்' என்று பார்க்கலாம்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)



அமெரிக்காவில் பெட்போர்டு சர்வ கலாசாலை அறிவித்த செய்தியைக் கேட்டு விட்டு உலகமே வியப்பிலும் மகிழ்ச்சியிலும் மூழ்குகிறது.

உயிருள்ள 'செல்'களிலிருந்து அல்லாமல், செயற்கையாக 'ஜீன்' - மனித ஜீவனின் அடிப்படை 'யூனிட்'டான 'ஜீன்' - ஒன்றை, சோதனைச் சாலையில் உருவாக்கியிருக்கிறார் டாக்டர் சேதுராமன் என்ற செய்தி உலக விஞ்ஞான சரித்திரத்திலே எழுதப்படுகிறது.

இந்தச் செயற்கை ஜீன் மூலம் மனிதர்களுடைய பரம்பரை வியாதிகளான நீரழிவு, மனநோய்கள் முதலியவற்றையும் இன்னும் பல 'வைரஸ்' நோய்களையும், புற்றுநோயையும் எளிதில் குணமாக்கலாம். செயற்கையாக உருவாக்கப்பட்ட நல்ல 'ஜீன்'களை, நோயாளிகளின் உடலில் செலுத்தி நோயை விரட்டி விடலாம். மேலும் மனிதர்களின் தீய குணங்களைக்கூட நல்ல குணமுள்ள ஜீன்களைப் புகுத்துவதன் மூலம் திருத்திவிடலாம்!

பத்திரிகை நிருபர்கள், டாக்டர் சேதுராமன் வீட்டில் மொய்க்கிறார்கள். டெலிவிஷன், சினிமா காமராக்களின் ஒளிச் சூழல்களுக்கிடையே சேதுராமன் தம் கண்டுபிடிப்பை விளக்கிக் கொண்டிருக்கிறார்.

அவருடைய ஆராய்ச்சிகளுக்கெல்லாம் துணையாக இருக்கும் அவரது மனைவி டாக்டர் ஸோபியாவும் அப்போது அவர் பக்கத்திலேயே நின்று கொண்டிருக்கிறாள். அவள் முகத்தில்தான் எத்தனை பெருமை, பூரிப்பு!

நிருபர்களின் கேள்விகளுக்குச் சிரித்த முகத்துடன் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார் சேதுராமன். இடையிடையே ஸோபியாவும் விளக்கங்கள் கூறி, கணவனின் வேலைகளை எளிமையாக்குகிறாள்.

''உலகத்தின் மிகப் பெரும் இந்த ஆராய்ச்சிக்குத் துணையாகவும் தூண்டுதலாகவும் இருந்தவர் உங்கள் மனைவிதானே?''

விஞ்ஞானியின்

''லாபரேட்டரியில் எனக்கு டெக்னிகல் உதவி செய்பவள் என் மனைவிதான். ஆனால் என் ஆராய்ச்சிக்கு இன்ஸ்பிரேஷனாக இருப்பவள், இந்தியப் பெண் ஒருத்தி'' என்கிறார் சேதுராமன்.

நிருபர்கள் திடுக்கிடுகிறார்கள். பரபரப்பான செய்தி அவர்களின் மூளையை முடுக்கி விடுகிறது.

''அமெரிக்காவில் உங்களுக்கு விஞ்ஞானத் தூண்டுதல் அளிக்குமளவுக்கு, இந்தியாவில் ஒரு விஞ்ஞானி இருக்கிறாரா?''

ஸோபியா குறுக்கிடுகிறாள்:

''ஆம்; அவள் விஞ்ஞானிகளைவிடச் சிறந்த மெய்ஞானி. அவளால்தான் இந்த மாபெரும் விஞ்ஞானி உங்கள் அமெரிக்க நாட்டின் பிரஜையா யிருக்கிறார்.''

டாக்டர் சேதுராமன் எழுந்து நிற்கிறார்.

''எக்ஸ்யூஸ் மீ... இவ்வளவுதான் அவளைப் பற்றிச் சொல்ல முடியும்.... தாங்க்யூ...''

பேட்டி முடிந்து விட்டது.

பேட்டியின் உச்சகட்டம் இப்படிப் புதிராக முடிந்து விட்டதே என்ற மனவருத்தத்தோடு புறப்படுகிறார்கள் நிருபர்கள். டாக்டர் சேதுராமன் தம்பதியர் உள்ளே செல்கிறார்கள்.

சேதுராமனுடைய சிந்தனை, இந்தியாவை நோக்கிப் பறந்து சுழல்கிறது...

சிறு வயதிலிருந்தே மீனுவும் சேதுவும் விளையாட்டுத் தோழர்கள். அடுத்தடுத்த



• அய்க்கண் •



போட்டிக் கதை-13
காதல்!

வீட்டைச் சேர்ந்த அவர்கள், எப்போதும் ஒன்றுகவே பள்ளிக்குப் போவார்கள்; விளையாடுவார்கள்; படிப்பார்கள்.

தாலுகா ஆபீஸ் குமாஸ்தாவான ராமலிங்கத்தின் மூத்த மகள் மீனு. அடுத்தடுத்து நான்கு பெண்கள்: கடைசியில் ஒரே ஒரு பையன். வீட்டிலே குடியிருந்த ஏழைமை, மீனுவின் அழகையும் வளர்ச்சியையும் ஒன்றும் பாதிக்கவில்லை. சிறு பிள்ளையிலிருந்தே கவர்ச்சியும் துறுதுறுப்புமாகத் துள்ளி விளையாடும் அந்த அழகுச் சிலை, பருவக் குமரியானதும் ஊரிலுள்ள இளைஞர்களின் கனவுகளில் நடமாடினுள்.

அரசாங்க ஸ்காலர்ஷிப் உதவியால் அவள் கல்லூரியில் நுழைந்து பி.எஸ்ஸி. படித்த போது, சேது எம். எஸ்ஸி. (அவன் படிப்பும் அரசாங்க உபயம்தான்!) படித்துக் கொண்டிருந்தான். இருவரும் காதலர்கள் என்பது கல்லூரியில் யாருக்கும் தெரியாது. இருவரும் சேர்ந்து கடற்கரைக்கோ, படத்துக்கோ, பிக்னிக்கோ, குறைந்தபட்சம் பார்க்குக்கோ போகாவிட்டால் அவர்கள் காதலர்கள் என்று யாருக்குத் தெரியும்?

சேதுராமன் எப்போதும் படிப்பே கண்ணுக இருப்பான். அவனும் மீனுவும் வெகு நேரம், அவனுடைய அறையிலே பேசிக் கொண்டிருப்பார்கள். ஆனால் பேச்சு முழுவதும் விஞ்ஞானத்தையும் பாடத்தையும் பற்றித்தான் இருக்கும்! 'ஐ லவ் யு' என்று அவனும் பிதற்றுவதில்லை. 'நானும் உங்களை' என்று அவளும் பெருமூச்சு விடுவதில்லை. இப்படியெல்லாம், பிரகடனப்படுத்த வேண்டிய அவசியம் இல்லாமலே, அவர்கள் ஒருவரை யொருவர் காதலித்தார்கள்!

எம். எஸ்ஸி. யில் சர்வகலாசாலையில் முதல் மாணவனுகத் தேறினுன் சேது. இங்கிலாந்து அரசாங்க ஸ்காலர்ஷிப் கிடைத்து, ஆராய்ச்சிக்காக லண்டன் சென்றபிறகுதான், அவனுக்கு மீனுவின் நினைவு, பாடங்களை மீறிக் கொண்டு எழுந்தது. இத்தனை நாள் அருகிலிருந்த போது ஏற்படாத ஆர்வமும் ஆதங்கமும் இப்போது அவனுக்கு ஏற்பட்டன! காதல் என்பது புதுமையான நெருப்பு அல்லவா? கிட்டே இருந்தால் குளிரும்; தூர விலகிச் சென்ருல் சுடும்...

மீனுவின் நினைவு, அவன் உள்ளத்தில் பொங்கிப் பிரவகிக்கக் காரணமாயிருந்தவள், அவனுடைய சக மாணவி ஒருத்தி.

ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த அவள், ஆராய்ச்சிப் படிப்புக்காக லண்டன் வந்தவள். சேதுராமனுடைய அடக்கமும் பண்பும் —

எல்லாவற்றையும்விட, அவனுடைய அறிவும் ஆராய்ச்சி நுட்பமும் கடின உழைப்பும் அவளை மிகவும் கவர்ந்தன.

பாடத்திலே சந்தேகம், ஆராய்ச்சியிலே உதவி என்ற சாக்கில் அவள் அவனுடன் நெருங்கிப் பேசியபோதெல்லாம், அவ ளுடைய பளபளக்கும் அழகிய நீல விழிகளிலே ததும்பிய காதலையோ, நீண்ட 'ஓவல்' வடி விலே நிலவாக ஒளிரும் முகத்தின் ஏக்கத் தையோ, செதுக்கிய சிற்பம் போன்ற பொன் னுடலில் பொங்கும் உணர்வுகளையோ அவன் கவனிக்கவேயில்லை.

அவனுடைய சலனமின்மையையும் பாரா முகத்தையும் கண்டு பொறுமை இழந்து போன அவள், கடைசியாக ஒரு நாள் அவ னிடம் நேரிடையாகவே கேட்டுவிட்டாள் :

அவளுடைய காதல் கோரிக்கையைக் கேட்டுத் திடுக்கிட்டான் சேது.

"என்ன, நீங்கள் என்னைக் காதலிக் கிறீர்களா ?... ஐ ஆம் வெரி ஸாரி... உங்க ளுடைய அறிவும் அழகும் பண்பும் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன. என் இதயத்தில் உங்களுக்கு ஓர் இடம் உண்டு: ஆனால் அது ஒரு மனைவிக்குரிய இடம் அல்ல - ஒரு நண்பருக்கு உரிய இடம்... லெட் அஸ் பி ஃப்பிரண்ட்ஸ், லோபி !"

அவனுடைய காதல் இதயத்தில்தான் மீனு நீக்கமற நிறைந்திருக்கிறாளே !

அவனுடைய ஆராய்ச்சிப் படிப்பும் முடிந்தது: டாக்டர் பட்டமும் கிடைத்தது.

நாடு திரும்பியதும் ஆவலோடு ஓடி வந்து எதிர்கொண்ட மீனுவைப் பார்த்த சேது, அப்படியே திகைத்து நின்றுவிட்டான்! பெண்மையின் அழகெல்லாம் ஒன்றாக உரு வெடுத்தாற்போல், பருவமும் இளமையும் போட்டி போட்டு அவளை அவ்வளவு அழகாக, அழகாக, அழகாக, அழகாக ஆக்கியிருந்தன.

அந்த அழகு எல்லாம் அவனுக்கே சொந்த மாகப் போகிறது என்று நினைத்துப் பூரித்துப் போனான் சேது. ஆனால் அந்த அழகைச் சொந்தமாக்கிக் கொள்ள இன்னொருவனும் துடித்துக் கொண்டிருந்தானே !

இந்தியா வந்த சேது, விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்களில் வேலை தேட ஆரம்பித்தான்.

அவன் மும்முரமாக வேலை தேடிக் கொண் டிருந்த போது, மீனுவின் தந்தை ராமலிங்கம் அவன் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்வதில் முனைந்திருந்தார். அதே தெருவில் இருந்த விஜயநாதன், பணக்கார இளைஞன். தாய் தந்தையருக்கு ஒரே செல்லப்பிள்ளை. சென்ற வருஷம் ஐ. ஏ. எஸ். தேறி, கலெக்டராக வேலை பார்த்து வந்தான். அவன் அழகி மீனுவை மணக்க ஆசைப்பட்டு, ராமலிங்கத் தைத் தனியாகக் கூப்பிட்டுப் பேசினான்.

ராமலிங்கம் மகிழ்ச்சியிலும் பெருமையிலும் பூரித்துத் திக்குமுக்காடிப் போனார் ! அடே யப்பா ! எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம்! ஒரு தாலுகா ஆபீஸ் குமாஸ்தாவுக்கு கலெக்டர் மாப்பிள்ளையா ?

இதைக் கேட்டுத் திடுக்கிட்டாள் மீனு. சேதுராமனைத் தன்னால் மறக்க முடியாது : மணந்தால் அவனைத்தான் மணப்பேன் என்று போராட்டம் ஆரம்பித்தாள் மீனு. கடைசி யில் வேறு வழியில்லாமல் அவர், தம் கலெக் டர் மாப்பிள்ளையை விட்டு விட்டு, சேதுவை ஏற்றுக் கொள்ள ஒப்புக் கொண்டார், ஒரே ஒரு நிபந்தனையின் பேரில்.

கல்யாணத்துக்கு முன்பே, சேது ஒரு நிரந்தர உத்தியோகத்தில் — நிறையச் சம்ப ளம் வாங்கும் வேலையில் — அமர வேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனை.

மீனு, இந்தச் செய்தியைச் சேதுராமனிடம் சொன்னதும் அவன் மேலும் திகைத்து நின்றான் !

லண்டனில் நண்பர்களாய்ப் பிரிந்து சென்ற லோபியாவுக்கும் அவனுக்கும் இடையே அடிக்கடி கடிதத் தொடர்பு இருந்து வந்தது. கடைசியாக, அவள் அமெரிக்காவிலிருந்து ஒரு கடிதம் எழுதியிருந்தாள் :

'நான் இப்பொழுது அமெரிக்காவில் பெட் போர்டு யுனிவர்ஸிடி எனர்ஜி இன்ஸ்ட்டியூட் டில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறேன். இன்ஸ்ட்டியூட் டைரக்டர் டாக்டர் மக்கார் டிடம் உங்களைப் பற்றிச் சொன்னேன். அவர் உங்கள் நிலையைக் கண்டு மிகவும் வருத்தப்பட் டார் : நீங்கள் இங்கே வந்தால், உடனே வேலை கொடுத்து ஆராய்ச்சிக்கு வாய்ப்பு அளிப்பதாக என்னிடம் சொன்னார்.

'ஒரு வேளை, நீங்கள் மனம் மாறி, இங்கே ஆராய்ச்சி செய்வதற்கு வர நினைத்தால், எனக்கு எழுதுங்கள். ஆனால் நீங்கள் இந் தியாவைவிட்டு — மீனுவை விட்டு — எங்கும் போகமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். மீனு, மிகவும் அதிர்ஷ்டசாலி!.... அது சரி, மீனுவுக்கும் உங்களுக்கும் எப்போது கல்யா ணம்? அழைப்பிதழ் அனுப்ப மறந்துவிடா தீர்கள்!...'

கடிதத்தைப் படித்துக் கொண்டிருக்கும் போதே வெளியில், "சார்!" என்று குரல் கேட்க, எழுந்து வெளியே வந்தான் சேது. முத்தையா கல்லூரியிலிருந்து பியூன் வந் திருந்தான்.

"சார்! பிரின்ஸ்பால் உங்களைக் கையோட கூட்டிக் கொண்டு வரச் சொன்னாருங்க...."

உடனே பியூனோடு புறப்பட்டு, கல்லூரிக்கு வந்தான் சேதுராமன். அவனை அன்போடு வரவேற்றார் பிரின்ஸ்பால்.

"மிஸ்டர் சேதுராமன் ! உங்களைப் பற்றி 'கரெஸ்பாண்டெண்டி'டம் சொன்னேன். அவரும் சரி என்று சொல்லிவிட்டார். உங்க ளுக்கு லெக்சரர் போஸ்டுக்கு நாளைக்கே அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் வந்துவிடும்!"

"உங்கள் உதவிக்கு மிகவும் நன்றி !" என்று கூறிவிட்டு, இந்த மகிழ்ச்சிச் செய்தியை உடனே மீனுவிடம் கூற, நேரே அவள் வீட் டுக்குச் சென்றான்.

அவன் வீட்டுக்குள் நுழைந்ததுமே, வாச லிலே ராமலிங்கம் அவனைத் தடுத்து நிறுத்தினார் :

"சேது ! உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள மறுத்துவிட்டாள் மீனு. கலெக்டர் விஜயநாதனைத்தான் அவள் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாள்."

"ஒரு லெக்சரரைவிட, ஒரு கலெக்டர், உயர்ந்த அந்தஸ்துள்ளவர் இல்லையா?" என்று ஏகத்தாளமாகச் சிரித்தார் ராமலிங்கம்.

எல்லாவற்றையும்விட, அவனுடைய அறிவும் ஆராய்ச்சி நுட்பமும் கடின உழைப்பும் அவளை மிகவும் கவர்ந்தன.

பாடத்திலே சந்தேகம், ஆராய்ச்சியிலே உதவி என்ற சாக்கில் அவள் அவனுடன் நெருங்கிப் பேசியபோதெல்லாம், அவளுடைய பளபளக்கும் அழகிய நீல விழிகளிலே ததும்பிய காதலையோ, நீண்ட 'ஓவல்' வடிவிலே நிலவாக ஒளிரும் முகத்தின் ஏக்கத்தையோ, செதுக்கிய சிற்பம் போன்ற பொன்னுடலில் பொங்கும் உணர்வுகளையோ அவன் கவனிக்கவேயில்லை.

அவனுடைய சலனமின்மையையும் பாராமுகத்தையும் கண்டு பொறுமை இழந்து போன அவள், கடைசியாக ஒரு நாள் அவனிடம் நேரிடையாகவே கேட்டுவிட்டாள் :

அவளுடைய காதல் கோரிக்கையைக் கேட்டுத் திடுக்கிட்டான் சேது.

'' என்ன, நீங்கள் என்னைக் காதலிக்கிறீர்களா ?... ஐ ஆம் வெரி ஸாரி... உங்களுடைய அறிவும் அழகும் பண்பும் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன. என் இதயத்தில் உங்களுக்கு ஓர் இடம் உண்டு: ஆனால் அது ஒரு மனைவிக்குரிய இடம் அல்ல - ஒரு நண்பருக்கு உரிய இடம்... லெட் அஸ் பி ஃபிரண்ட்ஸ், லோபி !''

அவனுடைய காதல் இதயத்தில்தான் மீனா நீக்கமற நிறைந்திருக்கிறாளே !

அவனுடைய ஆராய்ச்சிப் படிப்பும் முடிந்தது: டாக்டர் பட்டமும் கிடைத்தது.

நாடு திரும்பியதும் ஆவலோடு ஓடி வந்து எதிர்கொண்ட மீனாவைப் பார்த்த சேது, அப்படியே திகைத்து நின்றுவிட்டான்! பெண்மையின் அழகெல்லாம் ஒன்றாக உருவெடுத்தாற்போல், பருவமும் இளமையும் போட்டி போட்டு அவளை அவ்வளவு அழகாக, அழகாக, அழகாக, அழகாக ஆக்கியிருந்தன.

அந்த அழகு எல்லாம் அவனுக்கே சொந்தமாகப் போகிறது என்று நினைத்துப் பூரித்துப் போனான் சேது. ஆனால் அந்த அழகைச் சொந்தமாக்கிக் கொள்ள இன்னொருவனும் துடித்துக் கொண்டிருந்தானே !

இந்தியா வந்த சேது, விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்களில் வேலை தேட ஆரம்பித்தான்.

அவன் மும்முரமாக வேலை தேடிக் கொண்டிருந்த போது, மீனாவின் தந்தை ராமலிங்கம் அவள் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்வதில் முனைந்திருந்தார். அதே தெருவில் இருந்த விஜயநாதன், பணக்கார இளைஞன். தாய் தந்தையருக்கு ஒரே செல்லப்பிள்ளை. சென்ற வருஷம் ஐ. ஏ. எஸ். தேறி, கலெக்டராக வேலை பார்த்து வந்தான். அவன் அழகி மீனாவை மணக்க ஆசைப்பட்டு, ராமலிங்கத்தைத் தனியாகக் கூப்பிட்டுப் பேசினான்.

ராமலிங்கம் மகிழ்ச்சியிலும் பெருமையிலும் பூரித்துத் திக்குமுக்காடிப் போனார் ! அடேயப்பா ! எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம்! ஒரு தாலுகா ஆபீஸ் குமாஸ்தாவுக்கு கலெக்டர் மாப்பிள்ளையா ?

இதைக் கேட்டுத் திடுக்கிட்டாள் மீனா. சேதுராமனைத் தன்னால் மறக்க முடியாது : மணந்தால் அவனைத்தான் மணப்பேன் என்று போராட்டம் ஆரம்பித்தாள் மீனா. கடைசியில் வேறு வழியில்லாமல் அவர், தம் கலெக்டர் மாப்பிள்ளையை விட்டு விட்டு, சேதுவை ஏற்றுக் கொள்ள ஒப்புக் கொண்டார், ஒரே ஒரு நிபந்தனையின் பேரில்.

கல்யாணத்துக்கு முன்பே, சேது ஒரு நிரந்தர உத்தியோகத்தில் — நிறையச் சம்பளம் வாங்கும் வேலையில் — அமர வேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனை.

மீனா, இந்தச் செய்தியைச் சேதுராமனிடம் சொன்னதும் அவன் மேலும் திகைத்து நின்றான் !

லண்டனில் நண்பர்களாய்ப் பிரிந்து சென்ற லோபியாவுக்கும் அவனுக்கும் இடையே அடிக்கடி கடிதத் தொடர்பு இருந்து வந்தது. கடைசியாக, அவள் அமெரிக்காவிலிருந்து ஒரு கடிதம் எழுதியிருந்தாள் :

'நான் இப்பொழுது அமெரிக்காவில் பெட்போர்டு யுனிவர்ஸிடி என்னும் இன்ஸ்டிட்யூட்டில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறேன். இன்ஸ்டிட்யூட் டைரக்டர் டாக்டர் மக்காரிடம் உங்களைப் பற்றிச் சொன்னேன். அவர் உங்கள் நிலையைக் கண்டு மிகவும் வருத்தப்பட்டார் : நீங்கள் இங்கே வந்தால், உடனே வேலை கொடுத்து ஆராய்ச்சிக்கு வாய்ப்பு அளிப்பதாக என்னிடம் சொன்னார்.

'ஒரு வேளை, நீங்கள் மனம் மாறி, இங்கே ஆராய்ச்சி செய்வதற்கு வர நினைத்தால், எனக்கு எழுதுங்கள். ஆனால் நீங்கள் இந்தியாவைவிட்டு — மீனாவை விட்டு — எங்கும் போகமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். மீனா, மிகவும் அதிர்ஷ்டசாலி!.... அது சரி, மீனாவுக்கும் உங்களுக்கும் எப்போது கல்யாணம்? அழைப்பிதழ் அனுப்ப மறந்துவிடாதீர்கள்!...'

கடிதத்தைப் படித்துக் கொண்டிருக்கும் போதே வெளியில், ''சார்!'' என்று குரல் கேட்க, எழுந்து வெளியே வந்தான் சேது. முத்தையா கல்லூரியிலிருந்து பியூன் வந்திருந்தான்.

''சார்! பிரின்ஸ்பால் உங்களைக் கையோடு கூட்டிக் கொண்டு வரச் சொன்னாருங்க....''

உடனே பியூனோடு புறப்பட்டு, கல்லூரிக்கு வந்தான் சேதுராமன். அவனை அன்போடு வரவேற்றார் பிரின்ஸ்பால்.

''மிஸ்டர் சேதுராமன் ! உங்களைப் பற்றி 'கரெஸ்பான்டென்டி'டம் சொன்னேன். அவரும் சரி என்று சொல்லிவிட்டார். உங்களுக்கு லெக்சரர் போஸ்டுக்கு நாளைக்கே அப்பாயின்ட்மென்ட் ஆர்டர் வந்துவிடும்!''

'' உங்கள் உதவிக்கு மிகவும் நன்றி !'' என்று கூறிவிட்டு, இந்த மகிழ்ச்சிச் செய்தியை உடனே மீனாவிடம் கூற, நேரே அவள் வீட்டுக்குச் சென்றான்.

அவன் வீட்டுக்குள் நுழைந்ததுமே, வாசலிலே ராமலிங்கம் அவனைத் தடுத்து நிறுத்தினார் :

'' சேது ! உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள மறுத்துவிட்டாள் மீனா. கலெக்டர் விஜயநாதனைத்தான் அவள் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாள்.''

''ஒரு லெக்சரரைவிட, ஒரு கலெக்டர், உயர்ந்த அந்தஸ்துள்ளவர் இல்லையா?'' என்று ஏகத்தாளமாகச் சிரித்தார் ராமலிங்கம்.

''உங்கள் கண்ணோட்டத்தில் அப்படித்தான் தோன்றும். நான் மீனுவையே கேட்கிறேன்.''

அப்போது, சட்டென்று உள் அறைக் கதவுப் பக்கமிருந்து ஒரு குரல் —

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன்! அப்பா சொல்வது சரிதான்.....''

அந்தச் சொற்கள் இடிபோல் சேதுராமனுடைய காதுகளில் விழுந்து குமுறின.

மீனு அவனை ஏமாற்றிவிட்டாள்! அன்றே, லோபியாவுக்குக் கடிதம் எழுதினான் சேது.

மீனுவின் கல்யாணத்துக்கு முன்னமேயே, அவன் அமெரிக்காவுக்குப் புறப்பட்டுவிட்டான். அங்கே அகமும் முகமும் மலர, லோபியா அவனை வரவேற்றாள்.

மீனுவுக்கு நிச்சயித்திருந்த முகூர்த்தத்திலேயே அமெரிக்காவில், பெட்போர்டு யுனிவர்ஸிடி என்னைம் இன்ஸ்டிட்யூட் டெபுடி டைரக்டர் டாக்டர் சேதுராமனுக்கும் டாக்டர் லோபியாவுக்கும் திருமணம் நடந்தது.

திருமணம் முடிந்த மறு வாரம், சேதுவுக்கு இந்தியாவிலிருந்து ஒரு கடிதம் வந்தது. மீனு தான் எழுதியிருந்தாள்: கல்யாணத்துக்கு முதல் நாளே அந்தக் கடிதம் எழுதப்பட்டிருந்தது..

அதைப் படித்துப் பார்த்த சேது, திகைத்து நின்றான்.

'....நான் அன்று உங்கள் அறைக்கு வந்தபோது, நீங்கள் எங்கோ வெளியில் போயிருந்தீர்கள். மேஜையின் மேல் இருந்த லோபியா எழுதிய கடிதத்தைப் படித்துப் பார்த்தேன். அதற்குப் பிறகுதான் என் முடிவை மாற்றிக் கொண்டேன். எனக்காக நீங்கள் ஆராய்ச்சி ஆர்வத்தையும் திறமையையும் தியாகம் செய்யப் போகிறீர்கள் என்பதை அறிந்து நான் வேதனைப்பட்டேன். மீனுவுக்கு ஒரு நல்ல கணவன் கிடைப்பதைவிட, உலகத்துக்கு ஒரு நல்ல விஞ்ஞானி கிடைப்பது முக்கியமில்லையா?

'நீங்கள் என்னை மறந்து அமெரிக்கா சென்று ஆராய்ச்சியில் ஈடுபட்டு, பெரும் புகழும் பெற வேண்டும். அதுதான் என்னுடைய ஆசை.

'என் சகோதரி லோபியாவுக்கு அன்பு வாழ்த்துக்கள்....'

கடிதத்தைப் படித்துப் பார்த்த லோபியாவின் கண்கள் பனித்தன.

'உலகத்திலே பெண்கள் காதலனுக்காக எதையும் தியாகம் செய்வார்கள். ஆனால் மீனுவோ காதலனுக்காக, காதலனையே தியாகம் செய்துவிட்டாள். இம்மாதிரி தியாகங்களை இந்தியப் பெண்ணால்தான் செய்ய முடியும்!....' என்று மானசீகமாக மீனுவைப் பாராட்டி வாழ்த்தினாள் லோபியா.

ரேடியோ செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்த கலெக்டர் விஜயநாதன், குதூகலத்துடன், ''மீனு! மீனு!... நியூஸ் கேட்டியா?'' என்று குதித்தவாறு உள்ளே ஓடுகிறான்.

''என்னங்க?''

''நியூஸ் தெரியுமா? நம்ம சேதுராமன் இருக்கானே —''

''சேதுராமனா? யாரது?''

மிகவும் சாதாரணமாக, இயல்பாகக் கேட்கிறாள் மீனு!

துலா ஸ்நானம்

நின்னில் நீராடித் தங்கள் பாவங்களைக் கழுவிக் கொள்ளும் மக்களின் பாவச் சுமையைத் தாள முடியாமல், கங்கை கேட்டாளாம்: ''என் மீது ஏறிவிட்ட பாவச் சுமையை நான் எப்படிப் போக்கிக் கொள்வது?''

''வெகு சுலபம். ஐப்பசி மாதம் மாயூரம் காவேரியில் சென்று நீராடு. உனது பாவங்கள் அத்தனையும் பறந்துவிடும்'' என்று வழி கூறினாராம் காசி விசுவேசுவரர்.



இந்தச் செய்தி பாரதத்தின் அறுபத்தாறு கோடி புண்ணிய தீர்த்தங்களுக்கும் எப்படியோ எட்டிவிடவே, எல்லாமே மாயூரம் காவேரிக்குத் துலா மாதத்தில் வருவதாக ஐதிகம். எனவே, துலாஸ்நானம் செய்தால், அத்தனை புண்ணிய நதிகளில் நீராடிய பயனும் எளிதில் கிடைத்து விடுகிறது.

காசிவாழ் ஒரு முடவனுக்கு இந்தச் செய்தி தெரிய வரவே, அவனுமே துலா ஸ்நானத்துக்குப் புறப்பட்டிருக்கிறான். அவன் மாயூரத்தை அடைவதற்குள் ஐப்பசி முடிந்து கார்த்திகை பிறந்துவிட்டது. ஆயினும், அருளாளனான ஆண்டவன் அவனுக்கென்றே முடவன் முழுக்கு என்னும் வழி செய்து துலா ஸ்நானத்துக்குப் பெருமை சேர்த்திருக்கிறான்.

இப்படிப் பக்தி நீராடுவதில் பெண்களுக்குள்ள சிரத்தையைச் சொல்லி முடியாது. நம்பிக்கையை உடன்பிறப்பாகக் கொண்டு நன் நீராடி, தேங்காய் உடைத்து, நீராஞ்சனம் ஏற்றிக் காவேரி அன்னையை வழிபடும் மங்கையை மேலட்டையில் காணும்பொழுது நமக்குமே பக்தி வெள்ளத்தில் நீராடி மகிழத் தோன்றுகிறதல்லவா?

வண்ணப்படம்: துரைலிங்கம்

''நம்ம ஊர்க்காரன்தான் — ஞாபகமில்லே? அவன்தான் இப்போ அமெரிக்காவுக்குப் போய் ஆராய்ச்சி செய்துக்கிட்டிருக்கான்...'' என்று தொடர்ந்து, சேதுராமனின் சாதனையைப் பற்றி விளக்கமாகச் சொல்லிக் கொண்டேயிருக்கிறான் விஜயநாதன்.

அவன் சொல்வதைக் கேட்பதைவிட, அதிக கவனத்தோடு மீனு வேறொரு காரியத்தில் ஈடுபட்டிருக்கிறாள்.

அன்று மாலை, தில்லிக்கு ஒரு கான்ஃப்ரன்ஸுக்காகப் புறப்படும் கணவனுக்கு வேண்டிய சாமான்களையெல்லாம் ஒழுங்காகப் பெட்டியில் எடுத்து வைத்துவிட்டோமா; அவனுடைய கோட், பாண்ட், ஷர்ட்டுகளில் பட்டன்களெல்லாம் சரியாக இருக்கின்றனவா என்பதில்தான் அவள் மும்முரமாக, கவனமாக ஆழ்ந்திருக்கிறாள்.

அவள் ஓர் இந்தியப் பெண்: அவள் திருமதி மீனு விஜயநாதன்!....

அவள் விஜயநாதனை மணந்த அன்றே, சேதுராமனையும் அவனைப் பற்றிய விஷயங்களையும் மறந்துவிட்டாள்.

குவாலியர் ரேயானின் மகத்தான 26 ஆண்டு காலப் பணி

Sobhagya GR 74-2-Tam.



தன்வலிமை பெறும் கனவை நனவாக்கி வரும் பணி.

ரேயான் இழைகள், ஸ்டேபிள் இழை, ரேயான்-கிரேடு பல்ப் (கூழ்), ரேயான் ஸ்டேபிள் நூலிழைத் தொழிற்சாலைகளுக்கான எந்திர சாதனங்கள் ஆகிய எல்லாவற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கென குவாலியர் ரேயான் செய்துவரும் முயற்சிகள், நாடு சுதந்திரம் எய்திய நாளிலேயே தொடங்கிவிட்டன.

மூங்கில் மற்றும் இதர கெட்டி மரங்களிலிருந்து கரை திறனுள்ள ரேயான்-ரகக் கூழ் தயாரிப்பு, மற்றும் ரேயான், பல்ப், இவை சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான நுட்பமிகுந்த எந்திர சாதனங்களின் உற்பத்தி முதலியவற்றிலே குவாலியர் ரேயான் முன்னோடியாக விளங்குவதனால், ரேயான் தொழிலிலே நம் நாடு தன்வலிமை பெற வழிபிறந்துள்ளது.

இன்று, குவாலியர் ரேயானின் ஸ்டேபிள் நூலிழை உற்பத்தியளவு, 520 லட்சம் பேருக்கு ஆடை வழங்கப் போதுமானதாக உள்ளது. மரக் கூழ் உற்பத்தியோ, ஆண்டு தோறும் ஒரு லட்சம் டன்களுக்கு மேல்; இது செல்லுலோஸ் இழையளவிலே கணக்கிட்டால், 5.2 லட்சம் பருத்தி பேல்களுக்கு ஈடாகும்.

கடந்த பத்தாண்டுகளில், குவாலியர் ரேயான் நம் நாட்டின் பொக்கிஷத்திற்கு, வரிகளும் தீர்வைகளுமாக ரூ. 90 கோடி செலுத்தியுள்ளதோடு, அதே காலத்தில் ரூ. 360 கோடி அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது. இதை நோக்கும்போது, தன்வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்புக்கு குவாலியர் ரேயான் செலுத்திவரும் மகத்தான பணியின் பெருமை தெளிவாக விளங்கும்.

குவாலியர் ரேயான்—
தேச முன்னேற்றமே முதன்மை எனக் கருதுவோர்.

தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக் (வீவிங்.) கோ. லிட்., பிர்லாகிராம், நாக்தா (ம.பி.)

இருபத்தேழாம் அத்தியாயம்

வெற்றி வீரர்!


சோழநாட்டைச் சேர்ந்த திருவெண்காடு என்னும் கிராமம் திமிலோகப்பட்டுக் கொண்டிருந்தது. பல்லவ சாம்ராஜ்யத்தின் குமார சக்கரவர்த்தி நரசிம்மவர்மர் அன்று அந்தக் கிராமத்துக்கு விஜயம் செய்யப் போகிறார்; தம் ஆருயிர்த் தோழரான வீர தளபதி பரஞ்சோதியையும் அழைத்து வரப் போகிறார் என்னும் செய்தி வந்ததிலிருந்து அந்த ஊரார் யாரும் பூமியிலேயே நிற்கவில்லை.

இரண்டு நாளைக்கு முன்பு பாண்டிய சைனியத்துக்கும் பல்லவ சைனியத்துக்கும் கொள்ளிடக் கரையில் நடந்த பெரும் போரைப் பற்றி அந்தக் கிராமவாசிகள் கேள்விப்பட்டிருந்தார்கள். பாண்டியன் ஜயந்தவர்மன் தோல்வி அடைந்து புறமுதுகிட்டு ஓடியதைப் பற்றியும் அறிந்திருந்தார்கள். அந்த யுத்தத்தின் காரணமாக, கொள்ளிட நதியின் தண்ணீர்ப் பிரவாகம் இரத்த வெள்ளமாக மாறி ஓடியதை நேரில் பார்த்தவர்கள் வந்து அவர்களுக்குத் தெரிவித்திருந்தார்கள். பாண்டிய சைன்யம் பல்லவ சைன்யத்தைவிடப் பெரியது என்பதும், மாமல்லர், பரஞ்சோதி இவர்களின் வீர சாகஸச் செயல்களினாலேயே பாண்டிய சைனியம் தோல்வி அடைந்து சிதறி ஓடியது என்பதும் எல்லாரும் அறிந்த விஷயங்களாயிருந்தன.

அப்பேர்ப்பட்ட வீராதி வீரர்கள் வருகிறார்கள் என்றால், அந்தக் கிராமவாசிகள் தலை தெரியாத ஆனந்தத்தில் மூழ்கியிருந்ததில் வியப்பு ஒன்றும் இல்லையல்லவா?

ஏற்கனவே அந்தக் கிராமவாசிகளுக்கு முன்னே ஒரு வகை அதிர்ஷ்டம் கைகூடியிருந்தது. பத்துத் தினங்களுக்கு முன்பு திருநாவுக்கரசர் பெருமான் அவ்வூருக்கு விஜயம் செய்து சைவத் திருமடத்தில் எழுந்தருளியிருந்தார். ஆலயப் பிராகாரங்களில் அப்பெரியார் தம் திருக் கைகளினால் புல் செதுக்கும்





திருப்பணியை நடத்தியதுடன், மாலை நேரங்களில் ஆலய மண்டபத்தில் தம் தேனிசைப் பாசுரங்களைச் சீடர்களைக் கொண்டு பாட்டுவித்து வந்தார்.

அவ்விதம் சிவானந்தத்திலும் தமிழ் இன்பத்திலும் ஆழ்ந்திருந்தவர்களுக்கு, சக்கரவர்த்தி திருக்குமாரரும் அவருடைய வீர தளபதியும் வரப்போகும் செய்தி மேலும் குதூகலத்தை உண்டாக்கிற்று. திருநாவுக்கரசரைத் தரிசிப்பதற்காகவே மாமல்லரும் பரஞ்சோதியும் வருவதாக ஒரு வதந்தியும் பரவியிருந்தது.

ஆனால், நமசிவாய வைத்தியர் வீட்டைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் உண்மையில் அவர்கள் வருகிற காரணம் இன்னதென்று தெரிந்திருந்தது.



பரஞ்சோதியின் அருமைத் தாயார் அந்த வீட்டிலேதான் இருந்தாள். அப்படியிருக்கும்போது, தளபதி பரஞ்சோதியும் அவருடைய தோழரும் திருவெண்காட்டுக்கு வருவதற்கு வேறு காரணம் எதற்காகத் தேட வேண்டும்?

எனவே, அந்தக் கிராமத்தில் மற்ற எந்த வீட்டையும் விட நமசிவாய வைத்தியரின் வீட்டிலே குதூகலமும் பரபரப்பும் அதிகமாயிருந்ததென்று சொல்ல வேண்டியதில்லையல்லவா?

சாதாரணமாய்ச் சாந்த நிலையில் இருப்பவரான நமச்சிவாய வைத்தியர் அன்று வீட்டுக்குள்ளிருந்து வெளியிலும் வெளியிலிருந்து உள்ளேயும் நூறு தடவை போய் வந்து கொண்டிருந்தார். அவருடைய மனையாள் தன் மகள் உமையாளை ஆடை ஆபரணங்களால் அலங்கரிப்பதில் அன்று காட்டிய சிரத்தை அதற்கு முன் எப்போதும் காட்டியதில்லை. உமையாளின் தம்பியும் தங்கைகளும் அவளைப் பரிகாசம் செய்வதில் மிகவும் தீவிரமாக இருந்தார்கள். உமையாளின் உள்ளமோ, பெரும் புயல் அடிக்கும்போது கொந்தளித்து அலை வீசும் கடலை ஒத்திருந்தது.

பரஞ்சோதியின் அன்னை கண்ணீரும் கம்பலையுமாய்த் தன் ஏக புத்திரனை எதிர்பார்த்த வண்ணம் இருந்தாள்.

• • •

இங்கு இப்படி இருக்க, திருவெண்காட்டுக்கு ஒரு யோசனை தூரத்தில் வந்து கொண்டிருந்த மாமல்லர், பரஞ்சோதி இவர்களுக்குள்ளே மாமல்லரிடமே உற்சாகம் அதிகம் காணப்பட்டது. பரஞ்சோதியின் முகத்தில் சோர்வு அதிகமாக இருந்ததுடன் அவருடைய குதிரை அடிக்கடி பின்னால் தங்கியது. அவரை மாமல்லர் அவ்வப்போது பரிகாசம் செய்து விரைவுபடுத்தினார். "இது என்ன தளபதி? உம்முடைய குதிரை ஏன் இப்படிப் பின் வாங்குகிறது? உம்முடைய அவசரம் அதற்குத் தெரியவில்லையா, என்ன? குதிரைகளை வேணுமானால் மாற்றிக் கொள்ளலாமா?" என்றார். "உம்முடைய முகம் ஏன் இவ்வளவு பிரகாசமாயிருக்கிறது? இதென்ன, நீர் உம்முடைய காதலியைக் காணப் போகிறீரா? அல்லது கொலைக் களத்துக்குப் போகிறீரா? பயப்படாதீர்! நான் நல்ல வார்த்தை சொல்லி உமையாள் உம்மை அதிகமாகக் கண்டிக்காமல் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று கேலி செய்தார். பொறுத்துப் பொறுத்துப் பார்த்துக் கடைசியில் பொறுக்க முடியாமல் போகவே, பரஞ்சோதி கூறியதாவது: "ஐயா, என்னுடைய மன நிலையை அறிந்து கொள்ளாமல் புண்ணில் கோலிடுவதுபோல் பேசுகிறீர்கள். உண்மையாகவே எனக்கு இங்கு வருவதற்கு விருப்பம் இல்லை. நீங்கள் வற்புறுத்திய போது இணங்கிவிட்டேன். ஏன் இணங்கினேம் என்று இப்போது வருத்தமாயிருக்கிறது. உங்களுக்குப் புண்ணியமாய்ப் போகட்டும். இப்போதாவது நான் திரும்பிப் போவதற்கு அநுமதி கொடுங்கள். தாங்கள் எனக்காகச் சென்று, என் தாயாரைப் பார்த்து, நான் சௌக்கியமாய் இருக்கிறேன். ஆனால், அவருக்கு நான் கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடியவில்லை. ஆகையால் அவரைப் பார்க்க வெட்கப்

பட்டுக் கொண்டு வராமல் நின்றுவிட்டேன் என்று சொல்லி விடுங்கள்!''

இவ்விதம் உணர்ச்சி ததும்பிய குரலில் பரஞ்சோதி கூறியதைக் கேட்டு மாமல்லர் சிறிது திடுக்கிட்டார். ''தளபதி! உம்முடைய தாயாருக்கு நீர் என்ன வாக்குறுதி கொடுத்தீர்? அதை ஏன் நிறைவேற்ற முடியவில்லை?'' என்று கவலை கொண்ட குரலில் வினவினார்.

''பிரபு! எதற்காக நான் பிறந்த ஊரையும் வீட்டையும் விட்டுக் கிளம்பினேன் என்று தங்களுக்குச் சொன்னேனே, அது ஞாபகமில்லையா? என்னுடைய மாமன் நமசிவாய வைத்தியர் தம்முடைய மகளை—கல்வி கேள்விகளில் சிறந்த உமையாளை — நிரட்சர குட்சியான எனக்குக் கட்டிக் கொடுக்கப் பிரியப்படவில்லை. அதற்காக, கல்வியிற்



கரையிலாத காஞ்சிமா நகருக்குப் போய் வாகீசப் பெருமானின் திருமடத்தில் சேர்ந்து படித்துச் சகல கலா வல்லவனாகத் திரும்பி வரும் எண்ணத்துடன் புறப்பட்டேன். ஆனால், நடந்தது என்ன? போனது போலவே நிரட்சர குட்சியாகத் திரும்பி வந்திருக்கிறேன். திருநாவுக்கரசர் பெருமானைக் கண்ணாலேகூடப் பார்க்கவில்லை..." என்று பரஞ்சோதி சொல்லி வந்தபோது, நரசிம்மவர்மர் கலகலவென்று சிரித்தார். "பல்லவ குமாரா! தங்களுடைய சிரிப்பு என் உள்ளத்தில் நெருப்பாய் எரிகிறது! வடக்குப் போர் முனையிலிருந்து சக்கரவர்த்தி என்னைத் தங்களிடம் அனுப்பிய போது தங்களை எனக்குக் கல்வி கற்பிக்கும்படியாகச் சொல்லி அனுப்பினார்! ஆனால், தாங்கள் எனக்குக் கல்வி கற்பிக்கவும் இல்லை; நானாக ஏட்டைக் கையில் எடுப்பதற்கும் விடவில்லை. எப்போதாவது சிறிது நேரம் கிடைத்தால், அந்த நேரத்தில் ஆயனரின் குமாரியைப் பற்றிப் பேசிப் பொழுது போக்கிவிட்டீர்கள்! ஆ!



இராஜ குலத்தினரைப் போல் சுயநலக்காரர்களை நான் கண்டதில்லை!" என்று சோகம் ததும்பிய குரலில் பரஞ்சோதி சொல்ல, அதைக் கேட்ட குமார சக்கரவர்த்தி இன்னும் உரத்த சத்தத்துடன் சிரித்தார்.

* * *

மாமல்லரும் பரஞ்சோதியும் திருவெண்காட்டை அடைந்த போது கிராமத்தின் முகப்பில் அவர்களுக்குச் சிறப்பான வரவேற்புக் காத்திருந்தது. அப்போது மாமல்லருக்கு முன்னொரு நாள் மண்டபப் பட்டுக் கிராமத்தில் நிகழ்ந்த வரவேற்புக் காட்சியும், அன்று ஆயனரும் சிவகாமியும் முக்கியமாக வரவேற்புக்குரியவர்களாக இருந்ததும், தம்மை இன்னாரென்று தெரிவித்துக் கொள்ளாமல் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றதும் ஞாபகம் வந்தன.

ஆஹா! அதற்குப் பிறகு எத்தனை எத்தனை சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன! இதற்குள்ளாகக் கண்ணபிரான் மண்டபப் பட்டுக் கிராமத்துக்குச் சென்று, கொள்ளிடக் கரைச் சண்டையைப் பற்றியும் பாண்டியன் புறமுதுகிட்டு ஓடியதைப் பற்றியும் சொல்லியிருப்பான். சிவகாமி எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பாள்! எவ்வளவு ஆர்வத்துடன் தம்முடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள்? இந்தத் தடவை அவளும் மற்றக் கிராமவாசிகளுடனே வந்து தம்மை வரவேற்பாளா? மாமல்லர் இத்தகைய மனோராஜ்ய பகற்கனவுகளில் ஈடுபட்டிருந்த சமயத்தில்,

"குமார சக்கரவர்த்தி நரசிம்ம பல்லவேந்திரர் வாழ்க!"

"கங்க மன்னனையும் மதுரைப் பாண்டியனையும் போரில் புறங்கண்ட வீர மாமல்லர் வாழ்க!"

"வீராதி வீரர் தளபதி பரஞ்சோதி வாழ்க!" என்பன போன்ற ஆகாசமளாவிய கோஷங்கள் அவருடைய பகற் கனவுகளைக் கலைத்துத் திருவெண்காட்டுக் கிராமத்துக்கு அவர்கள் வந்துவிட்டதைத் தெரியப்படுத்தின.

இருபத்தெட்டாம் அத்தியாயம்

பட்டிக்காட்டுப் பெண்

வரவேற்பு வைபவங்கள் எல்லாம் முடிந்த பிறகு நமசிவாய வைத்தியரின் வீட்டுக்குள்ளே மாமல்லரும் பரஞ்சோதியும் பிரவேசித்தார்கள்.

பல்லவ சாம்ராஜ்யத்தின் குமார சக்கரவர்த்தி திடீரென்று தங்கள் சின்னஞ்சிறு இல்லத்துக்குள் பிரவேசிக்கவே, அந்த வீட்டாரெல்லோரும் இன்னது செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றார்கள். தளபதிக்குரிய வீர உடை தரித்திருந்த காரணத்தினால் பரஞ்சோதியை நிமிர்ந்து பார்த்துப் பேசக்கூட அவர்களுக்குக் கூச்சமாயிருந்தது. பரஞ்சோதிக்கோ அதைவிடக் கூச்சமாக இருந்தது.

கூடத்தில் போட்டிருந்த ஆசனம் ஒன்றில் யாரும் சொல்லாமல் தாமே மாமல்லர் உட்கார்ந்து கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தார். நிலைமையை ஒருவாறு அறிந்து கொண்டார். கண்களில் கண்ணீர் ததும்ப நின்ற மூதாட்டி

சோர்வா?
பலவீனமா?



சாப்பிடுங்கள்


வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக் —
விட்டமின்களும், இரும்புச் சத்தும், தாதுப்பொருட்களும்
அடங்கிய பரிபூரண டானிக்



சில டானிக்குகளில் விட்டமின்கள் மட்டுமே உள்ளன. சிலவற்றில் தாதுச் சத்துக்களோ அல்லது இரும்புச் சத்தோதான் உள்ளன. வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக் பரிபூரணமானது. அதில் விட்டமின்களும், இரும்புச் சத்தும், தாதுச்சத்துக்களும் சமச்சீராக இணைந்துள்ளன—

தினமும் உற்சாகமும், சக்தியும், வலிமையும் கொடுக்கிறது.

விட்டமின்கள் நிரம்பியது



வாட்டர்பரீஸ்
விட்டமின் டானிக்

சுறுசுறுப்பான ஆரோக்கியத்திற்கு
பரிபூரணமான டானிக்

Grant 9 TM

தான் பரஞ்சோதியின் தாயார் என்று ஊகித்துத் தெரிந்து கொண்டு, ''எங்கள் வீர தளபதியைப் பெற்ற பாக்கியசாலியான தாயைத் தரிசிக்க வேண்டும் என்று எனக்கு எவ்வளவோ ஆவலாயிருந்தது. அந்தப் பாக்கியம் இன்று கிட்டிற்று!'' என்று சொல்லிவிட்டு, பரஞ்சோதியைப் பார்த்து, ''தளபதி! இது என்ன? அன்னைக்கு நமஸ்காரம் செய்யும். தொண்டைமண்டலத்துக்குப் போனதனால் மரியாதைகூட மறந்து போய்விட்டதென்றல்லவா நாளைக்கு எல்லாரும் குறை சொல்லுவார்கள்?'' என்றார்.

உடனே பரஞ்சோதி முன்னால் சென்று அன்னையின் பாதங்களில் நமஸ்காரம் செய்தார். நமஸ்கரித்த குமாரனை வாரி எடுத்து உச்சி முகர வேண்டும் என்ற ஆசை அந்த அம்மாளுக்கு எவ்வளவோ இருந்தது. ஆனால், குமார சக்கரவர்த்தி அங்கு வீற்றிருந்ததும், தன் குமாரன் போர்க் கோல உடை தரித்திருந்ததும் அவளுக்குத் தயக்கத்தை உண்டுபண்ணிற்று. பிறகு, நமசிவாய வைத்தியருக்கும் பரஞ்சோதி நமஸ்காரம் செய்துவிட்டுத் திரும்பி வந்து மாமல்லரின் பக்கத்திலே அமர்ந்து உச்சி மோட்டைப் பார்த்தார்.

நமசிவாய வைத்தியர், மாமல்லரை நோக்கி, ''இந்தக் குடிசைக்குத் தாங்கள் வந்தது எங்களுடைய பாக்கியம்!'' என்றார்.

மாமல்லர் அவரை நோக்கி, ''ஓகோ! நமசிவாய வைத்தியர் என்பது தாங்கள் தானே? தங்களுக்கு ஓர் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். தங்கள் குமாரி என் சிநேகிதரை ரொம்பவும் பயப்படுத்தி வைத்திருக்கிறாள்போல் இருக்கிறது. அதோ அந்தக் கதவண்டை நிற்பவள்தானே தங்கள் புதல்வி? பார்த்தால் வெகு சாதுவாகத் தோன்றுகிறாள். ஆனால், பல்லவ சைனியத்தின் தலை சிறந்த தளபதியை, — வாதாபியின் யானைப் படையைச் சிதற அடித்த தீரரை, — கங்க நாட்டானையும், பாண்டிய ராஜனையும் புறமுதுகிடச் செய்த மகா வீரரை, — ரொம்பவும் பயப்படுத்தியிருக்கிறாள். இனிமேலாவது அப்படியெல்லாம் செய்ய வேண்டாம் என்று தங்கள் குமாரியிடம் சொல்லுங்கள். பரஞ்சோதியை இங்கு அழைத்து வருவதற்கு நான் என்ன பாடு பட வேண்டியிருந்தது தெரியுமா? கையைப் பிடித்துப் பலாத்காரமாய் அழைத்து வரவேண்டியிருந்தது. அம்மா! தாங்களே கேளுங்கள்: தங்கள் புதல்வர் இங்கே வரமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தாரா, இல்லையா என்று! கேளுங்கள், அம்மா!'' என்று மாமல்லர் கூறியபோது பரஞ்சோதியின் அன்னை மகனை அன்பும் கர்வமும் ததும்பிய கண்களால் பார்த்து, ''குழந்தாய்! மாமல்லப் பிரபு சொல்வது உண்மையா? எங்களையெல்லாம் வந்து பார்க்க உனக்குப் பிடிக்கவில்லையா?'' என்றாள்.

''ஆம், அம்மா! பல்லவ குமாரர் உண்மையைத் தவிர வேறு எதுவும் சொல்லுவதில்லை. ஆனால், ஏன் எனக்கு இங்கு வந்து உங்களையெல்லாம் பார்க்கப் பிடிக்கவில்லை என்று அவரையே கேளுங்கள்!'' என்றார் பரஞ்சோதி.



அன்னை கேட்க வேண்டும் என்று வைத்துக் கொள்ளாமல் மாமல்லரே சொன்னார்: ''தங்கள் அருமை மகன் காஞ்சிக்குப் போய்க் கல்வி கற்றுப் புலவராகத் திரும்பி வருகிறேன் என்று தங்களிடம் வாக்குறுதி கூறிவிட்டுப் புறப்பட்டானாம். அந்த வாக்கை நிறைவேற்ற முடியவில்லையாம். போனபோது எப்படிப் போனானோ அப்படியே திரும்பி வந்திருக்கிறான். அதனால் உங்களையெல்லாம் நிமிர்ந்து பார்க்கவே வெட்கமாயிருக்கிறதாம். எப்படியிருக்கிறது கதை?''

இவ்விதம் மாமல்லர் சொன்னதும் பரஞ்சோதியின் தாயார் மகனுக்கு

அருகில் வந்து உட்கார்ந்து அவனுடைய முதுகைத் தடவிக் கொடுத்துக் கொண்டே, ''அப்பா! குழந்தாய்! நீ படித்தால் என்ன, படிக்காவிட்டால் என்ன? ஏதோ சிவபெருமான் அருளால் நீ உயிரோடு நல்லபடியாய்த் திரும்பி வந்தாயே, அதுவே எனக்குப் போதும். அந்த நாளில் உனக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க வந்த அண்ணாவிமார்களை நீ அடித்துவிரட்டினாயே. அதற்காகவெல்லாம் நான் உன்னை எப்போதாவது கோபித்ததுண்டா?'' என்றாள். இதைக் கேட்ட மாமல்லர் சிரித்துக்கொண்டே சொன்னதாவது:

''என்ன? என்ன? உபாத்தியாயர்களை அடித்து விரட்டினானா உங்கள் மகன்? நல்ல வேளை! நான் பிழைத்தேன்! இந்தச் சாதுப் பிள்ளைதான் என்னைத் தனக்குப் படிக்கக் கற்றுக் கொடுக்கும்படி தொந்தரவு செய்தான். அவன்



சொல்வது உண்மை என்று எண்ணிக் கொண்டு நான் பாடம் கற்பிக்க ஆரம்பித்திருந்தேனானால் என்னையும் அப்படித்தானே அடித்துத் துரத்தியிருப்பான்? பிழைத்தேன்!'' என்று சொல்லி மீண்டும் சிரித்தார் நரசிம்மவர்மர்.

பரஞ்சோதி அவரைப் பரிதாப நோக்குடன் பார்த்துக் கூறினார்: ''பிரபு! இது ஏதோ சிரிப்பதற்குரிய விஷயமாக நினைக்கிறீர்கள். உண்மையில் அப்படியல்ல. காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு. ஆகையால், என் தாயார் நான் கல்வி கல்லாமல் திரும்பி வந்திருப்பதைப் பொறுக்கிறாள். ஆனால், என் மாமாவைக் கேளுங்கள். படிப்பில்லாத இந்த மூடனுக்கு அவர் தம் மகளைக் கட்டிக் கொடுப்பாரா என்று கேளுங்கள்!''

நமசிவாய வைத்தியரும் அந்தப் பரிகாசப் பேச்சில் கலந்து கொள்ள எண்ணி, ''என்னைக் கேட்பானேன்? கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிற பெண்ணையே கேளுங்களேன்? அவளுக்குச் சம்மதமாயிருந்தால் எனக்கும் சம்மதந்தான்!'' என்றார்.

அச்சமயம் ஏதோ கதவு திறந்த சத்தம் கேட்கவே எல்லாரும் அந்தப் பக்கம் நோக்கினார்கள். உமையாள் கதவைத் திறந்து கொண்டு உள் அறைக்குப் போய்க் கொண்டிருந்தாள்.

''எல்லாரும் சேர்ந்து பரிகாசம் செய்தால், குழந்தை என்ன செய்வாள்?'' என்று உமையாளின் தாயார் முணுமுணுத்தாள்.

பிறகு நமசிவாய வைத்தியர், சக்கரவர்த்தி குமாரரைப் பார்த்து, ''பரஞ்சோதியின் பராக்கிரமச் செயல்களைக் குறித்து அடிக்கடி கேள்விப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். அவனால் இந்தச் சோழ நாடே பெருமை அடைந்திருக்கிறது. மறுபடியும் இந்தப் பக்கம் எப்போது வருவானோ என்னவோ என்று எல்லாரும் ஏக்கப்பட்டுக் கொண்டிருந்தோம். ஏதோ எங்கள் அதிர்ஷ்டம் இவ்வளவு சீக்கிரத்தில் அவன் இங்கு வரலாயிற்று. அவனோடு தாங்களும் விஜயம் செய்தது, எங்கள் பூர்வ ஜன்ம தவத்தின் பலன் என்றுதான் சொல்ல வேண்டும். புவிக்கரசராகிய தாங்கள் வந்திருக்கும் சமயத்தில் நாவுக்கரசர் பெருமானும் இவ்வூருக்கு வந்திருக்கிறார். இப்பேர்ப்பட்ட நல்ல சந்தர்ப்பம் மறுபடியும் எங்கே கிடைக்கப் போகிறது? இப்போதே ஒரு நாள் பார்த்துச் சுப முகூர்த்தத்தில் விவாகத்தை நடத்திவிடுவோம். உமையாளையும் உங்களுடனேயே அழைத்துப் போய் விடுங்கள்!'' என்று கூறி நிறுத்தினார்.

அப்போது மாமல்லர், ''பார்த்தீரல்லவா தளபதி! எப்படியும் உமக்குக் கல்வி கற்பித்துப் புலவராக்கிவிடுவது என்று வைத்தியர் தீர்மானித்திருக்கிறார் என்று தெரிகிறது. வேறு எந்த உபாயமும் பயன்படாமற் போகவே, அவருடைய மகளைக் கொண்டே உமக்குக் கல்வி போதிக்கத் தீர்மானித்திருக்கிறார். ஆகா! கடைசியாக, நீர் அடித்துத் துரத்த முடியாத உபாத்தியாயர் ஒருவர் உமக்கு ஏற்படப் போகிறாரல்லவா?'' என்றதும் ஸ்திரீகள் உட்பட எல்லாரும் 'கொல்' லென்று சிரித்தனர்.

பிறகு, குமார சக்கரவர்த்தி நமசிவாய வைத்தியரைப் பார்த்து, ''ஐயா! அதெல்லாம் முடியாது. பல்லவ

இராஜ்யத்தின் வீர தளபதிக்குத் தலை நகரத்திலே சக்கரவர்த்தியின் முன்னிலையிலேதான் கல்யாணம் நடைபெறவேண்டும். இது என் தந்தையின் ஆக்ஞை. காஞ்சிக்கு நாங்கள் போனவுடனே ஆள் விடுகிறோம். எல்லாரும் வந்து சேருங்கள். இன்னும் ஒரு விஷயமும் சொல்லி வைக்கிறேன். அப்படி ஒரு வேளை உங்களுடைய குமாரி கல்வி கேள்விகளில் வல்ல புலவரைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்தால் அதற்கும் வழி இருக்கிறது. காஞ்சியில் எங்கள் குலகுரு ருத்ராச்சாரியார் இருக்கிறார். வயது தொண்ணூறுதான் ஆகிறது. தாடி ஒரு முழ நீளத்துக்குக் குறையாது. அவர் அறியாத கலையோ அவர் படியாத ஏடோ ஒன்றும் கிடையாது. அவரை வேண்டுமானாலும் உங்கள் புலமை மிகுந்த மகளைக் கல்யாணம் செய்து கொள்ளச் செய்கிறேன்!'' என்று பலத்த சிரிப்புக்கிடையே கூறிவிட்டு, ''தளபதி! வாரும், போகலாம்! திருநாவுக்கரசரைத் தரிசித்து விட்டு வரலாம்!'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தார்.

* * *

மாமல்லரும் பரஞ்சோதியும் நாவுக்கரசர் பெருமானை அவர் தங்கியிருந்த திருமடத்தில் பார்த்துவிட்டுத் திரும்பி வந்தவுடன், பரஞ்சோதியின் தாயார் அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டு, ''இங்கே வா, தம்பி! ஒரு சமாசாரம்!'' என்று உள் அறைக்கு அவரை அழைத்துக் கொண்டு போனாள்.

அங்கே தரையில் படுத்துத் தேம்பிக் கொண்டிருந்த உமையாளைக் காட்டி, ''பார்த்தாயா உன்னுடைய பரிகாசப் பேச்சு இந்தப் பெண்ணை என்ன பாடு படுத்தியிருக்கிறது! இப்படிச் செய்யலாமா, அப்பா!'' என்றாள்.

பரஞ்சோதி மனம் இளகியவராய், ''ஐயோ! இது என்ன பழி! நான் ஒன்றும் பரிகாசம் செய்யவில்லையே?'' என்றார்.

''செய்ததையும் செய்துவிட்டு இல்லை என்று சாதியாதே! இந்தக் குழந்தை என்ன சொல்கிறாள் தெரியுமா? நீ காஞ்சிப் பட்டணத்துக்குப் போய் அரண்மனை உத்தியோகமும் சக்கரவர்த்தியின் சிநேகிதமும் சம்பாதித்துக் கொண்டாயாம். இந்தப் பட்டிக்காட்டுப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள உனக்கு இஷ்டம் இல்லையாம்! அதனாலே தான் இப்படியெல்லாம் பேசுகிறாயாம்!''

''ஐயோ! அப்படி இல்லவே இல்லை, அம்மா!''

''இல்லையென்றால் நீயே இந்தப் பெண்ணுக்குச் சமாதானம் சொல்லித் தேற்று. நான் எவ்வளவோ சொல்லியும் இவள் கேட்கவில்லை!'' என்று கூறிவிட்டு, பரஞ்சோதியின் தாயார் வெளியேறினாள்.

அன்னையின் கட்டளையைச் சிரமேற் கொண்டு பரஞ்சோதி உமையாளைத் தேற்றத் தொடங்கினார். ஆனால், உமையாள் அவ்வளவு சீக்கிரம் தேறுகிறதாகக் காணவில்லை. வெகுநேரம் பரஞ்சோதி தன்னைத் தேற்ற வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டதாகத் தோன்றியது. தேறுவது போல் ஒரு கணம் இருப்பாள்; மறுகணத்தில் மறுபடியும் விம்மவும் விசிக்கவும் தொடங்கிவிடுவாள்.

உமையாள் பட்டணத்து நாகரிகம் அறியாத பட்டிக்காட்டுப் பெண்தான். ஆனபோதிலும் தன்னுடைய மனோரதத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு உபாயம் அவளுக்குத் தெரிந்திருந்தது. பரஞ்சோதி சீக்கிரம் வெளியில் போவதற்கு முடியாதவண்ணம் வெகுநேரம் தன்னைத் தேற்றிக் கொண்டே இருக்க வேண்டிய அவசியத்தை அவள் உண்டு பண்ணிக் கொண்டிருந்தாள்.

எவ்வளவு நீளமான நாடகத்துக்கும் ஒரு முடிவு உண்டு அல்லவா? அவ்விதம் இந்தப் பொய்ச் சோக நாடகத்துக்கும் முடிவான மங்களம் பாடவேண்டிய சமயம் வந்தபோது உமையாள் பரஞ்சோதியிடம் சத்தியம் வாங்கிக் கொண்டாள்: தன்னையே அவர் மணந்து கொள்ள வேண்டும் என்பதாகத்தான்.

அவ்வாறு சத்தியம் செய்துகொடுத்த பின் பரஞ்சோதி கூறினார்: ''ஆனால், உமா! ஒன்று சொல்கிறேன். நம் கல்யாணம் உன் தந்தை சொன்னது போல் அவ்வளவு சீக்கிரமாக நடைபெறாது. வெகு காலம் நீ காத்திருக்க வேண்டியிருக்கலாம். என் சிநேகிதர் மாமல்லருக்கு எப்போது திருமணம் நடக்கிறதோ, அப்போதுதான் நமது கல்யாணமும் நடைபெறும். அவருக்கு முன்னால் நான் இல்லறத்தை மேற்கொள்ளமாட்டேன்!''

''தங்களுக்காக அவசியமானால் யுக யுகமாக வேண்டுமானாலும் காத்திருக்கிறேன்!'' என்றாள் உமா.

(தொடரும்)

பொழுது போக்கு

தையல் கலை


★ எங்கள் மகள் டைபாய்டு ஜுரத்தினால் பாதிக்கப்பட்டு உடல் ஊனமுற்றவளாகி விட்டாள். அதே கவலையால் எந்த நேரமும் அழுது கொண்டிருப்பேன். இந்த நிலை அப்படியே நீடித்திருக்குமானால் பைத்தியமே பிடித்திருக்கும். எனவே மனமாறுதலுக்கூடத் தையல் வகுப்புக்குச் செல்ல ஆரம்பித்தேன்.

காலை பத்து மணியிலிருந்து பன்னிரண்டு மணி வரை வகுப்பு. பன்னிரண்டு மணிக்குத் தையல் வகுப்பு முடியும். என் மகனுக்குச் சாப்பாடு எடுத்துச் சென்று உடன் இருந்து கொடுத்துவிட்டுவரும்படியான சூழ்நிலை. மாலையில் அவனுக்குப் பள்ளி 4-30 மணிக்கு விடுவார்கள். அங்கேயே இருந்து அவனை ரிக்ஷாவில் அழைத்து வரவேண்டும்.

நான் இன்று பெண்களுக்கான எல்லாத் துணிகளையும் தைத்துக் கொடுக்கிறேன். ப்ரா உள்பட. சிறு பையன்களுக்கு ஷர்ட், ட்ரௌசர், ஏன் என் கணவருக்கு டெரிகாட்டன் ஷர்ட் முதலியவைகளை நானே தைத்துக் கொடுக்கிறேன்.

நான் முதன் முதலில் தையல் கலையைக் கற்க ஆரம்பித்தபொழுது நான் நினைக்கவேயில்லை, இன்று இந்த அளவுக்கு நாமும் தைப்போம் என்று. அது இன்று எனக்கு வருமானம் உள்ள தொழிலாகவும் அமைந்துவிட்டது பற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

ஜீவா சம்பந்தம்,
சென்னை




விந்தைத் தாவரங்கள்!

★ தாவரங்களில் இயற்கையிலிருந்து மாறுபட்டுத் தோன்றும் அசாதாரணத் தன்மை (abnormality) களை நன்கு ஆய்ந்து அவைகளைப் புகைப்படம் எடுத்துக் கொள்வதும் பதனம் செய்து பேணி வைத்துக் கொள்ளக் கூடியவைகளைப் பாதுகாப்பாகச் சேகரித்து வைத்துக் கொள்வதும் என் பொழுதுபோக்கு.

சாதாரணப் பருத்திப் பூவில் ஐந்து இதழ்கள் தான் உண்டு. ஆனால் அதிசயமாகப் பத்து இதழ்கள் உள்ள மலர்கள் தோன்றியுள்ளன. வெங்காயச் செடியில் பூங்கொத்துக் காம்பின் நீள் பக்கவாட்டிலேயே மலர்கள் உண்டாகியுள்ளன. (படம்) திருச்சிராப்பள்ளியிலிருந்து பதினைந்து மைல் தொலைவிலுள்ள கல்லணையில் பதினாறு கிளைகள் கொண்ட அதிசயத் தென்னை மரம் ஒன்று காணப்படுகிறது. இவை போன்ற 'விந்தைத் தாவரங்கள்' முப்பதுக்கும்மேல் கண்டுள்ளேன். - உ. இராமநாதன், கோவில்பட்டி.

அசாதாரணம் சாதாரணம்





நலங்கு பொம்மைகள்!

★ திருமண நலங்குக்கு மஞ்சள் குங்குமம் வைத்துக் கையை, பூக்கள், டிராண்சிஸ்டர், டைரி போன்று அட்டையினால் சிறிய மாடல்கள் செய்து கொடுத்து வருகிறேன். இவை தவிர கலர் காகிதம், ஜரிகைக் காகிதம் முதலியவற்றைக் கொண்டு வேஷ்டி, அங்கவஸ்திரம், புடவை, பாடி, அட்டையினால் சீப்பு, கண்ணாடி, ரிப்பன், காசுமாலை, பாவாடை, குஞ்சம் முதலியவற்றைச் செய்து தருகிறேன்.

என் மனைவி தரைகளில் பல டிசைன்களில் பூக்கள், மற்றும் கோலங்கள் வரைந்து கோலத் தட்டுக்கள் தயாரித்தும் பூஜை அறை மற்றும் வாசற்படி, துளசி மடம் முதலியவற்றை அலங்கரிப்பாள். பொழுது போக்கு ஓய்வு நேரத் தொழிலாகவே அமைந்து விட்டது. - ஆர் சீனிவாசன், மதுரை-1

படங்களின் உதவி!

★ எனது நண்பன் அப்துல் காதரின் பொழுதுபோக்கு போட்டோ எடுப்பது. குறிப்பாகப் பெண்பிள்ளைகளைப் போட்டோ எடுப்பது!

இஸ்லாமியச் சட்டப்படி மணப் பெண்ணை, மாப்பிள்ளை திருமணத்துக்கு முன்னால் பார்க்கக் கூடாது. அதனால் இந்த ஆல்பம் "பேருதவி" புரிகிறது.

அவன் எட்டு பத்து வயதுள்ள எந்தப் பெண் குழந்தைகளைக் கண்டாலும் போட்டோ எடுத்து ஆல்பத்தில் ஒட்டிவிட்டு, அதன் முகவரியையும் குணங்களையும் எழுதி வைத்து விடுவான். மணப் பருவத்தில் அதன் அழகையும் குணங்களையும் ஒருவாறு அறிந்து கொள்ளலாம் அல்லவா? எனது நண்பர்கள் சிலருடைய கல்யாணங்களில் இது முக்கிய பங்கு வகித்தது.

ஜாம், செவல்






மீன் வளர்த்தல்

எங்கள் மூத்த மகன் கல்லூரியில் படிக்க மதுரைக்குப் போனான். விடுமுறையில் வந்த போது அழகுக்காக வளர்க்கக்கூடிய கப்பி (Guppy), கருப்பு மாலி (Black molly), பிளாட்டி (Platty) போன்ற சிறு மீன்கள் சில வாங்கி வந்தான். இவைகளைத் தொட்டியில் இட்டு வளர்த்தோம். தொட்டியின் பக்கத்தில் ஒரு மின் விளக்கும் மாட்டியிருந்தோம். இரவில் மின் விளக்கின் ஒளியில் மீன்கள் பளபளவென மின்னிக் கொண்டு மிக அழகாகத் தோன்றும். எல்லாரும் ரொம்ப ரசிக்க ஆரம்பித்துவிட்டோம். எங்கள் மீன் தொட்டி பலரை, குறிப்பாக மாணவர்களை மிகவும் கவர்ந்தது.

அந்தத் தொட்டியில், முட்டை இட்டு, குஞ்சு பொரிக்கும் மீன்கள் அதிகம் பெருகவில்லை. என்ன செய்யலாம் என யோசித்துக் கொண்டிருந்தோம். ஒரு தடவை இப்படி மீன்களை வாங்கி விற்கும் ஒரு வியாபாரி எங்கள் வீட்டுக்கு வந்தார். அவர், 'ஒவ்வொரு வகை மீனையும் தனித் தனித் தொட்டியில் வைத்தால் நன்றாகப் பெருகும்' என்றார். அதன்படி நாங்கள் பெரிய தொட்டியை ஆறு, ஏழு சிறு தொட்டிகளாகப் பிரித்துக் கட்டி, ஒவ்வொரு தொட்டியிலும், ஒவ்வொரு ஜாதி மீன்களைப் போட்டோம். நன்றாகப் பெருகியது. வருமானமும் நிறையக் கிடைத்தது.

ஜாய் ஆசிர்,
ஆழ்வார் திருநகரி.



விநோத பொழுது போக்கு

★ என் கணவருக்கு ஒரு விநோத பொழுது போக்கு உண்டு. உபயோகமில்லாத தகரம், ஆணி, ஒரு பெட்டி நிறைய விதம் விதமான ஒயர்கள், பாட்டரி செல்லை உடைத்து அதிலுள்ள சிறு பித்தளைத் தகடுகள், உபயோகமில்லாத ஸ்விட்சுகளை உடைத்து அதிலுள்ள ஆணிகள், சிறுசிறு துத்தநாகத் தகடுகள், எல்லாவற்றையும் எடுத்து வைத்திருப்பார். பாட்டரி செல்லை உடைத்து அதை ஒரு கரண்டியில் போட்டு அதில் ஏதோ ஒரு ரசாயனக் கலவையைச் சேர்த்துக் கொதிக்க வைத்து ஓர் அச்சில் விட்டு ஆறவைத்துவிடுவார். காரீயம் உருகி, பிறகு இறுகிக் கட்டியாகி விடும். அதை எடுத்து வைத்திருப்பார். உளி, கத்திரிகள், அரம் எல்லாச் சாமான்களையும் வாங்கி வைத்திருக்கிறார். துத்தநாகத் தகடுகளை எடுத்து வட்டமாகச் சேர்த்து அடித்து ஒரு பிடியும் வைத்து, தண்ணீர்த் தொட்டிக்கு மூடி தயாரித்து விட்டார். அந்த மூடி துரும் பிடிக்காமல் இருக்க நிறைய மெழுகைக் காய்ச்சி அதன்மேல் விட்டார். இந்த மூடி பல வருடங்களாக அப்படியே இருக்கிறது.


அதே போல் எந்தச் சாமான் செய்தாலும் அதில் தேதி, வருடம் எல்லாம் எழுதி வைத்து விடுவார். இப்படி எத்தனையோ சாமான்கள்!

லலிதா ராமகிருஷ்ணன், ஆழ்வார்குறிச்சி.

நூல் நிலையம்!

என் நண்பன் ஒருவன் அனைத்து வார, மாத இதழ்களையும் ஒன்றுவிடாமல் படிப்பான். திடீரென்று அவனுக்கு ஒரு யோசனை உதித்தது. அதன்படி அவன் ஒரு நூல் நிலையம் ஆரம்பித்து, கிட்டத்தட்ட நூறு அங்கத்தினர்களைச் சேர்த்தான். ஒவ்வொரு அங்கத்தினரும் மாதம் ஐந்து ரூபாய் செலுத்திவிட வேண்டும். வார, மாத இதழ்கள், மாதந்தோறும் வெளியாகின்ற மர்ம நாவல்கள், சித்திரக் கதைகள், ஆங்கில இதழ்கள் போன்றவற்றில் ஒவ்வொன்றிலும் சில பிரதிகளை வாங்கி அவரவர் விரும்பும் நூல்களைத் தினமும் விநியோகிப்பான். ஐந்து ரூபாய்க்கு அனைத்துப் பத்திரிகைகளையும் படிக்க முடிகிறதே என்று பலர் அங்கத்தினராயினர். இப்போது அவனுக்கு நல்ல வருமானம். மனத்துக்குப் பிடித்த தொழில் வேறு.

-ஜெய. பிரபாகரன், நாமக்கல்



எளிய முயற்சி; அரிய பணி!

சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு பொழுதுபோக்காகச் சேகரிக்கப்பட்ட பழைய புத்தகங்கள் இன்று லட்சக்கணக்கிலே சேர்ந்து விட்டன.

புத்தகங்கள் சேகரிப்பது சிரமம் இல்லை. பணம் கொடுத்து வாங்க வேண்டியது; ஒழுங்காக வைத்துக் காப்பாற்ற வேண்டியது; அவ்வளவுதான். ஆனால் அவை எல்லாருக்கும் பயன்பட வேண்டுமே!

பயன்படுகிறது; இன்னும் அதிக அளவில் பயன்பட வேண்டும் என்ற நோக்கில்தான் இந்தச் சிறிய குறிப்புக்களை எழுதுகிறேன்.

தற்போது கல்வியில் வெளி வந்து கொண்டிருக்கும் 'பொன்னியின் புதல்வர்' எழுதும் ஆசிரியர் சுந்தா அவர்களுக்கு, கல்கி எழுதிய 'சாரதையின் தந்திரம்' முதல் பதிப்பு தேவைப்பட்ட போது எனது நூலகத்திலுள்ள அந்த நூல் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

தற்சமயம் கேரளம், மதுரை, டெல்லி, சென்னை முதலிய பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறை மாணவர்களுக்குப் பயன்பட்டு வரும் எனது சேகரிப்பு இன்னும் விரிவான அளவில் பயன்பட வேண்டும் என நினைக்கிறேன். இதே காரணத்துக்காகவே இவ்வளவு புத்தகங்களுக்கும் விஷய விவர அட்டவணைத் தொகுப்பு தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு, அந்த முயற்சி பதினைந்து ஆண்டு காலம் உழைத்த பின்பும் கூட இன்னும் சிறு பருவத்திலேயே இருக்கிறது.

என்றால் பொழுதுபோக்காக ஆரம்பிக்கப்பட்ட காரியம் இது மட்டும் அல்ல. தபால் தலைகள் சேகரித்தல், தஞ்சை ஓவியங்கள் சேகரித்தல், வாழ்த்து இதழ்கள் சேகரித்தல், மரச் சிற்பங்கள் சேகரித்தல் முதலியன. அவை அனைத்துமே அந்தந்தத் துறையில் ஆர்வம் உள்ளவர்களுக்குப் பணி செய்து கொண்டிருக்கின்றன.

ரோஜா முத்தையா,
ராமநாதபுரம்

(ஸ்தாபிதம் : 1947)

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
"பாலுஸேரி பில்டிங்ஸ்", 3, சிங்கராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

தந்தி : 'EVERMANS', போன் : 85834 • தபால்பெட்டி : 414

நீண்டகாலச் சீட்டுகள்

50 மாதங்கள் 50 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTN	ரூ. 100/-	ரூ. 5,000/-
LTO	ரூ. 50/-	ரூ. 2,500/-
LTP	ரூ. 20/-	ரூ. 1,000/-

40 மாதங்கள் 40 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTA	ரூ. 500/-	ரூ. 20,000/-
LTB	ரூ. 250/-	ரூ. 10,000/-
LTC	ரூ. 125/-	ரூ. 5,000/-

குறுகிய காலச் சீட்டுகள்

25 மாதங்கள் 25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
A	ரூ. 200/-	ரூ. 5,000/-	D	ரூ. 25/-	ரூ. 625/-
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-

சேரும் குருப்பை விவரித்து எங்கள் விதிகளுக்கு எழுதவும்

கிளைகள் : புது டில்லி - பம்பாய் - பெங்களூர் - கல்கத்தா - கோயம்புத்தூர்

28 YEARS

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை



தம்பிக்காக ஒரு தியாகம்!

வல்லபாய் பட்டேல் கிரிமினல் வழக்குரைஞராக போர்ஸாத் என்னுமிடத்தில் தொழில் நடத்தினர். துளைத்தெடுக்கும் அவரது கேள்விக் கணைகளிலிருந்து தப்பிப் பிழைக்க வேண்டி மாஜிஸ்டிரேட் கோர்ட்டையே இரு முறை போர்ஸாதிலிருந்து இடம் மாற்றினர்!

இங்கிலாந்து சென்று பார்—அட்—லா பட்டம் பெற விரும்பிய பட்டேல் தாமஸ் குக் கம்பெனிச் சீட்டு மூலம் பயணச் சீட்டுக்கு மனுச் செய்தார். வி. ஜே. பட்டேல் என்ற முகவரி இட்டு குக் கம்பெனியார் பயணச் சீட்டு அனுப்பிய தபால் உறை அவரது அண்ணன் விட்டல் பாய் பட்டேலின் கைக்குக் கிடைத்தது. விட்டல் பாய்க்கும் இங்கிலாந்து சென்று படிக்கும் எண்ணம் இருந்தது. தாம் முதலில் இங்கிலாந்து சென்று பார்-அட்-லா படித்துத் திரும்பிய பின்னர் தம்பி இங்கிலாந்து செல்லலாம் என்ற யோசனையை வல்லபாய் அப்படியே ஏற்றுக் கொண்டார். அதுமட்டுமா? அண்ணன் இங்கிலாந்தில் தங்கி யிருக்கும்வரையில் அவரது செலவு முழுவதையும் தாமே ஏற்றுக்கொள்ள முன்வந்தார். விட்டல் பாய், வல்லபாய் இருவருக்குமே பெயரின் முதல் எழுத்து 'வி'யாக இருந்ததால் வி. ஜே. பட்டேல் என்ற பெயரில் தமக்கு வந்த பயணச் சீட்டை அண்ணனுக்கு அளிப்பது எளிதாயிற்று. அண்ணன் திரும்பி வரும்வரை அண்ணியைத் தம் குடும்பத்துடன் வந்து தங்கியிருக்குமாறு அழைத்தார். சிறிது காலத்துக்குப் பிறகு அண்ணிக்கும் தமது மனைவிக்கும் ஒத்துப் போக முடியவில்லை எனக் கண்டதும் அண்ணன் சீமையிலிருந்து திரும்பி வரும் வரை தம் மனைவியைப் பிறந்த வீட்டில் தங்கி யிருக்குமாறு பணித்தார்!

'இரும்பு மனிதர்' என அழைக்கப்பட்ட வல்லபாயின் மன உறுதிக்கு இதோ ஒரு சான்று: பள்ளியில் பயிலும்போது அவர் உடலில் ஒரு கொப்புளம் வெடித்தது. அக்காலத்தில் அதற்குக் கிராமத்து நாவிதர் அளிக்கும் சிகிச்சை பழுக்கக் காய்ச்சிய சூட்டுக்கோலினல் கொப்புளத்தை உடைத்து விடுவதுதான். பட்டேலின் வீட்டுக்கு நாவிதர் வந்ததுதான் மிச்சம்! சூட்டுக்கோலை வல்லபாயின் கொப்புளத்தின் மீது வைக்க அவருக்குத் திராணி இல்லை! அஞ்சித் தயங்கிய நாவிதரிடமிருந்து பழுக்கக் காய்ச்சிய சூட்டுக்கோலைப் பறித்துத் தாமே கொப்புளத்தின் மீது சூடு போட்டுக் கொண்டார் வல்லபாய்.

என்றும் வாழ்வார் இரும்பு மனிதர்!

பள்ளி பகிஷ்கரம்

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் துணிச்சல் பள்ளிப் பருவத்திலேயே அவரிடம் குடிகொண்டது. ஆறும் வகுப்பு ஆசிரியர் பிள்ளைகளின் மீது பிரம்பைப் பிரயோகிப்பதற்குத் தயங்காதவர். ஒரு சிறு குற்றத்துக்காகப் பள்ளிச் சிறுவன் ஒருவனுக்குக் கடுமையாக அபராதம் விதித்தார். பட்டேல் வகுப்பிலிருந்த பையன்கள் அனைவரையும் வெளியேறுமாறு அழைத்தார். அனைவரும் ஒரு சத்திரத்தில் தங்கியிருக்கவும் ஏற்பாடு செய்தார். பகிஷ்காரத்துக்குப் பிறகு தலைமை ஆசிரியர் வல்லபாயை அழைத்து இனி அவ்விதக் கொடுமைகள் ஏதும் நிகழாவண்ணம் தாம் கவனித்துக் கொள்வதாக உறுதி கூறினர்!

"எந்தப் பிரச்னையையும் தமக்கே உரிய தனி கோணத்திலிருந்து அணுகும் ஆற்றல் பட்டேலுக்கு உண்டு. ஆனாலும் அவர் காந்திஜியின் வழியைத் தமதாக்கிக் கொள்ளவே பிரியப்பட்டார்."
- ராஜாஜி

❀

சிந்தனைக்கும் உணவு நிரம்ப இருப்பதை மூவரின் முக பாவங்களும் உணர்த்தவில்லையா?



பம்பாய் — பரோடா மத்திய இந்திய ரயில்வே தொழிலாளர் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றினார். அதே ஆண்டு ஆமதாபாத் தபால் துறை குமாஸ்தாக்கள், போஸ்ட்மேன் சங்கத்தின் தலைவராகவும் திகழ்ந்தார். மிகக் குறைவான ஊதியம் பெற்று வந்த தபால் ஊழியர்களின் சார்பாகப் போராடி அவர்களது வேலைநிறுத்தத்தை அமைதியான முறையிலே நிகழ்த்தி வெற்றி தேடித் தந்தார். ஒரே வாரத்தில் தபால் ஊழியர்களின் ஊதியம் இரு மடங்காக உயர்ந்தது, சர்தாரின் அரிய முயற்சியால்! 'சர்தார்' என்ற சொல்லின் பொருள் 'தலைவர்' என்பதே. தேசிய அடிப்படையில் நமது தொழிற் சங்கங்கள் அமைய வேண்டும் என்ற சீரிய நோக்குடன் 'இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ்' என்ற நாடு தழுவிய நிறுவனத்தை உருவாக்கிய பெருமை பட்டேலையே சாரும்.

சர்தார் ஓர் உண்மையான நடைமுறை சோஷலிஸ்ட். தமது வாழ்நாளில் சொந்தமாக ஒரு வீடு இருந்ததில்லை அவருக்கு! பெரிய அளவில் முதலீடுகள் ஏதும் செய்யவில்லை. பாங்குக் கணக்கு என்று குறிப்பிடும்படியாகத் தமது பெயரில் கணிசமான தொகை எதுவும் வைத்திருக்கவில்லை.

நாடு விடுதலை அடைந்தபிறகு பண வீக்கத்தைத் தடுப்பதே அவருடைய குறிக்கோளாக இருந்தது. ஒரே மூச்சில் அரசாங்கத்தின் செலவில் ரூ. 160 கோடியைக் குறைத்தார். சர்தாரின் தூண்டுதலின் பேரில் மத்திய அரசில் உயர் பதவி வகித்தவர்கள் தாமாகவே முன்வந்து தங்கள் ஊதியத்தைக் குறைத்துக் கொண்டனர். 1949—50-ல் உணவு, உடை உற்பத்திப் பெருக்கத்துக்குக் குந்தகமாக இருந்த தடைகளை நீக்குவதில் வெற்றி கண்டார்.

துயரத்தினிடையிலும் கடமை

அவரது மனைவியின் உடல்நிலை படுமோசமாகி அவர் உயிர்நீத்த செய்தி கோர்ட்டில் வாதாடிக் கொண்டிருக்கும்போது வல்லபாய் பட்டேலுக்குக் கிட்டியது. அவரது வாழ்க்கையிலேயே மிகவும் சோகமான நாள் அதுதான்! எனினும் தந்தியை மடித்துப் பையில் திணித்துக்கொண்டு முக்கியமான சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்யத் தொடங்கினார், சர்தார். சர்தாரின் கட்சிக்காரர் விடுதலை பெற்றார்.

1946ல் இடைக்கால சர்க்காரில் சர்தார் உள்துறை அமைச்சராக இருந்தபோது மத்திய சட்டசபையில் உறுப்பினர்களின் கேள்விக்கு அவர் பதில் சொல்வார். திரு ஸ்ரீபிரகாசா நகைச்சுவைக்குப் பெயர் போனவர். அவர் ஒரு கேள்வி கேட்டார்: திருடர்களும் கொள்ளைக்காரர்களும் லைசென்ஸ் இல்லாமல் ஆயுதங்களை வைத்துக் கொள்ளலாமா?

சர்தார்: ஓ! லைசென்ஸ் இல்லாமல் ஆயுதங்கள் வைத்துக் கொள்ள அவர்களுக்கு அனுமதி உண்டு.

ஸ்ரீபிரகாசாவின் துணைக் கேள்வி: கொள்ளைக் கூட்டத்தினரும் திருடர்களும் அனுமதியில்லாமலேயே ஆயுதங்கள் வைத்துக்கொள்ளலாமென்றால், இச்சட்ட மன்றத்தின் உறுப்பினர்களுக்கும் அதே சலுகையை நீங்கள் வழங்குவீர்களா?

பட்டேலின் பதில்: தாராளமாக, அவர்களும் கொள்ளைக்காரர்களாகவும் திருடர்களாகவும் ஆகும்போது நிச்சயமாக அவர்களுக்கும் அனுமதி உண்டு!''

நவீன பரசுராமர்!

ரௌலட் சட்டத்தை எதிர்த்து காந்திஜி போராட்டம் நிகழ்த்தியபோது போலீசார் பல அப்பாவிகளின் மீது குற்றம் சாட்டிக் கொடுமைக் குள்ளாக்கினர். நடியாத் அருகில் விவசாயி ஒருவர் ரயில் தண்டவாளத்தைப் பெயர்த்ததாகக் கூறி வழக்குத் தொடுத்தனர். தண்டவாளம் பெயர்க்கப்பட்ட இடத்தை நீதிபதி பார்வையிட வேண்டும் என்று சர்தார் வற்புறுத்தினார். ஸ்தலத்துக்கு வந்தவுடன் போலீஸார் சாட்சியமாகத் தாக்கல் செய்திருந்த கருவிகளைப் பயன்படுத்தித் தண்டவாளத்தைப் பெயர்க்க முடியாது என நிரூபித்துக் காட்டினார் வல்லபாய்.

''பரசுராமர் மன்னர்களைப் பூண்டோடு அழித்தவர் என்பது பிரசித்தம். ஆனால் பதவி இழந்த மன்னர்கள் யாரும் பரசுராமரை வாழ்த்தியிருப்பரா என்பது சந்தேகம். ஆனால் சர்தாரின் விஷயத்தில் பதவி இழந்த மன்னர்கள் பலரும் தங்கள் பதவிகளை ஒழித்தவர் நீடூழி வாழப் பிரார்த்தனை செய்தனர்'' என்றார் குலபதி முன்ஷி.

மேனாட்டு மோகம் மறைந்தது!

பட்டாபி சீதாராமையா கூறினார்: ''இங்கிலாந்தில் வல்லபாய் நிர்ணயித்த காலத்துக்கு ஓராண்டு குறைவாகவே தங்கித் தமது படிப்பை முடித்தார். இறுதித்தேர்வில் முதல் வகுப்பில் முதல் இடம் பெற்றுத் தேறிய வல்லபாய்க்கு 50 பவுன் பரிசுத் தொகையும் கிடைத்தது. ஆங்கிலக் கல்வியின் விளைவாக வல்லபாய் புகை பிடிக்கவும், கிளப்புக்குப் போய்க் காசு வைத்துச் சீட்டாடவும் ஆரம்பித்தார். மேலைநாட்டு முறையில் உடை அணிவார். மகாத்மாவுடன் தொடர்பு ஏற்பட்டதும் அடியோடு மாறிவிட்டார்!''

சர்தார் பட்டேலின் நூற்றாண்டு விழாவினையொட்டி அவரது குமாரி மணிபென் பட்டேல் வெளியிட்டுள்ள நூலில் இவை போன்ற எவ்வளவோ அரிய விஷயங்களைக் காணலாம். அடுத்து வரவிருக்கும் நான்கு தொகுதிகளையும் ஆவலோடு எதிர்பார்க்கத் தூண்டுகிறது, இம்முதல் பாகம். —**'பாணன்'**

This Was Sardar - Vol 1. தொகுப்பாசிரியர் ஜி. எம். நந்தூர்கர்; வெளியீட்டோர்: சர்தார் வல்லபாய் பட்டேல் ஸ்மாரக் பவன், ஆமதாபாத். விலை: ரூ. 25.00.

சிமெண்ட் மூட்டை எழுதுகிறது!



'கல்கி' ஆசிரியருக்கு,

என்னை இந்தக்கடிதம் எழுதச் செய்தது ஒரு பத்திரிகைச் செய்திதான்.

குழந்தை பெறாதிருக்க ஆபரேஷன் செய்துகொண்டால் 'ஐந்து மூட்டை சிமெண்ட் பர்மிட் இனாம்' என்று ரோஹ்டாக் பகுதி குடும்பக் கட்டுப்பாடு அதிகாரிகள் விளம்பரம் செய்தார்கள். சென்ற செப்டம்பர் மாதத்தில் 1800 பேர் சிமெண்ட் பர்மிட் பெற்றார்கள்.

இது மாதிரி காரியத்துக்காக நான் உபயோகப்படுவதை நினைத்துப் பார்க்க எனக்கு அவமானமாக இருக்கிறது.

150 ஆண்டுகளுக்கு முன்னர் ஜோஸப் ஆஸ்ப்டின் என்ற ஆங்கிலேயர் என்னைக் கண்டுபிடித்தார். கண்டுபிடித்தார் என்றால் என்ன? எனக்கு முன்னர் வெறும் சுண்ணாம்புக் கிளிஞ்சலை மட்டும் உபயோகித்துச் சுண்ணாம்புக் காரையால் கட்டிடங்கள் கட்டி வந்தார்கள். அந்தத் துரை அதே சுண்ணாம்பு 60 பங்கையும், மற்றும் ஸிலிகா, அலுமினியம், இரும்பு ஆக்ஸைட் முதலியவற்றையும் சேர்த்துக் கலவையாக்கி சிமெண்ட் என்று பெயர் கொடுத்தார். இங்கிலாந்தில் உள்ள போர்ட்லாண்ட் தீவுக் குன்றுகளின் மிக மிக இலேசான நீலநிறத்துடன் நானும் விளங்கியதால் போர்ட்லாண்ட் சிமெண்ட் என்று பெயர் கொடுத்தார். பெண்மணிகளுக்குச் சிமெண்ட் கலர் புடவைகள் மிகவும் பிடிக்கும். அதற்காகக் கடை கடையாக ஏறி இறங்குவார்கள்.

ஒரு காலத்தில் என்னை உபயோகிக்குமாறு பிரசாரம் செய்ய வேண்டியிருந்தது. இதற்காக 'கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா' என்று ஒரு நிறுவனமும் ஏற்பட்டது. ஆனால் இன்று எனக்காக எல்லோரும் ஏங்கி நிற்கிறார்கள்.

என்னில் கண்டதை யெல்லாம் கலந்து விற்க முடியாது. 'ஃப்ளை ஆஷ்' என்ற நிலக்கரி சாம்பலைக் கலந்து விற்கிறார்கள். இந்தச் சாம்பல் ரயில்வே ஜங்ஷன்களிலும் எண்ணூர் போன்ற ஆலைப் பகுதிகளிலும் லாரி, லாரியாகக் கிடைக்கும். விலை மலிவு. அரசாங்கக் கட்டிடங்களிலேயேஇப்போது நூற்றுக்குப் பதினைந்து பங்கு அந்தச் சாம்பலைக் கலந்துதான் உபயோகிக்கிறார்கள். இதைக் கலப்படம் என்பதில்லை. அதனால் கட்டிட பலம் பாதிக்கப்படமாட்டாது. ஆனால், சில வியாபாரிகள் நூற்றுக்கு முப்பது பங்கு நாற்பது பங்கு கலந்து விடுகிறார்கள். அந்த சிமெண்டைக்கொண்டு கட்டினால் தரைகளும் சுவர்களும் வாயைப் பிளக்கின்றன. எங்களுக்குக் கெட்ட பெயர் ஏற்படுகிறது.

இரண்டு வாரங்களுக்கு முன் சென்னையில் ஒரு பகுதியில் குடிசைமாற்று வாரியக் கட்டிடத் திறப்பு விழா நடந்தபோது என் பெயர் அடிபட்டது. ''1947ம் ஆண்டில் காங்கிரஸ் பதவிக்கு வந்த போதே இத்தகைய வாரியங்கள் வீடு கட்டுவதில் அக்கறை எடுத்துக் கொண்டிருந்தால் இன்று குடிசைகளே இராது'' என்று பொருள்பட மந்திரிகள் கூறினார்கள்.

ஆனால் அப்போது இந்தியாவில் சிமெண்ட் உற்பத்தி மிகவும் குறைவு. சுமார் பத்து லட்சம் டன். இன்று கிட்டத்தட்ட 250 லட்சம் டன் உற்பத்தி ஆகிறது. இன்று ராஜ்யங்களுள் தமிழ்நாட்டில்தான் உற்பத்தி அதிகம். இன்னொரு முக்கிய அம்சம்: அப்போது சென்னையில் சிறுவலான குடிசைப் பகுதிகளில் திடீர்திடீர் எனத் தீப்பிடிப்பதில்லை. அந்த வித்தை சென்ற ஏழெட்டு வருடங்களாகத்தானே நடந்து வருகிறது.

என் விலை கண்ட்ரோல் விதம் சுமார் ரூ. 16. நான் கறுப்பு மார்க்கெட்டில் 45 ரூபாய் வரையில் விற்கப்படுகிறேன். திடீரென்று ஒரு பற்றாக்குறை ஏற்பட்டு எங்களுக்கு இப்படி மதிப்பு உயர்ந்ததற்குக் காரணம் எங்களைப் பெருமளவில் பங்களா தேஷுக்குப் பாரத அரசு அனுப்பி விடுவதுதான். அரசாங்கத்தின் சமீபத்திய உத்தரவால் - மாபெரும் மாளிகைகள், பெரிய பெரிய காரியாலயக் கட்டிடங்கள் முதலியன கட்டக் கூடாது என்ற உத்தரவால் - கறுப்பு மார்க்கெட்டில் என் மதிப்பு குறைந்து வருகிறது இப்போது.

இப்படிக்கு,
விரைவில் சகஜநிலை ஏற்பட வேண்டும் என விரும்பும் ஒரு சிமெண்ட் மூட்டை.



ருசிகரமான எண்



கணித மேதை ராமானுஜம் ஒரு சமயம் லண்டனில் உடல்நலமின்றிப் படுத்திருந்தார். லிட்டில் வுட் என்ற ஒரு நண்பர் அவரைப் பார்க்கச் சென்றிருந்தார். அவர் ''நான் ஏறிவந்த டாக்ஸியின் எண் 1729. ஏனோ அந்த எண் எனக்குப் பிடிக்கவில்லை. அது எனக்குத் துரதிர்ஷ்டம் விளைவிக்கும் எண்ணாக இராது என்று நம்புகிறேன்'' என்றார். ராமானுஜம் சடக்கென்று பதிலளித்தார்:

''அது மிகவும் ருசிகரமான ஓர் எண்ணாகும்! இரண்டு எண்களின் 'க்யூப்'களைக் கூட்டினால் வரக்கூடிய எண். அப்படி இரண்டு விதத்தில் கூட்டலாம்!'' என்றார்.

விடை: $10^3 + 9^3$; $1^3 + 12^3$

ஐயா! விவசாயியைக் கவனியுங்கள்!



எல்.ஒய்.கிருஷ்ணஸ்வாமி

நம் நாட்டின் ஆண்டு வருமானத்தில் ஐம்பது சதவிகிதம் விவசாயத்தின் மூலமே கிடைக்கிறது. அதனைக் கோடிக் கணக்கான விவசாயிகள் தருகிறார்கள். நம் நாட்டில் சிறிய விவசாயிகள் அதிகம். பெரும் நிலச்சுவான்தார்கள் குறைவு. எனவே சிறுதொழில்கள், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் நிரம்பத் தோன்ற வேண்டும். விவசாயம் குன்றிவிட்டால் நம் நாடு முன்னேற முடியாது.

நம் நாடு விடுதலை பெற்று இருபத்தெழு ஆண்டுகள் ஆகியும், இன்னும் நமக்கு வேண்டிய அன்றாட உணவுப் பொருள்களை இறக்குமதி செய்தே ஆகவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். ஏன்? நாம் விவசாயத்தைக் கருத்தோடு கவனித்து உழைக்கவில்லை. நல்ல நீர்வளமும், உழைக்கும் சக்தியும், நிலவளமும், கோடிக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பும், கோடிக் கணக்கான மக்களும் இருந்தும் ஏன் இந்த இழிநிலை?

நம் நாட்டின் மக்கள் தொகை இப்போது 50 கோடிக்கும் அதிகமாகும். இது நாளுக்கு நாள் பெருகி வருகிறது. ஓராண்டுக்கு 1.2 கோடி மக்கள் அதிகரிப்பதாகக் கணக்கிட்டுள்ளனர். இப்போது நம்மிடமுள்ள அனைத்துத் தொழிற்சாலைகளையும், நிறுவனங்களையும் இனி நாம் தொடங்கி நடத்த எண்ணியுள்ள தொழில் நிறுவனங்களையும் கணக்கிட்டுப் பார்த்தாலும்கூட ஆண்டுதோறும் பெருகி வரும் 1.2 கோடி மக்களுக்கு அவற்றில் வேலை கொடுக்க முடியாது. இதை நன்கு சிந்திக்க வேண்டும். ஒவ்வோர் ஆண்டும் புதிதாகக் கோடி மக்களுக்கு வேலை தரக் கூடிய ஆலைகள் நம்மிடம் உண்டா? உலகில் எங்குமே கிடையாது. எனவே வெளிநாட்டு நிபுணர்கள் கூறும் அறிவுரை நமக்குப் பொருந்தாது.

அதிக நிலப்பரப்பும் அதிக மக்கள் தொகையும் உள்ள நமது நாட்டுக்கு ஏற்றதொரு பொருளாதாரக் கொள்கையை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஆனால், நம் திட்டக் குழுவினர் இதை இன்னும் உணரவில்லை. பிற நாடுகளைக் காப்பியடிக்க முற்படுகின்றனர். நமது நாட்டில் தொன்று தொட்டு விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் மிகுதி. அவர்களைப் பிற தொழில்களில் ஈடுபடுமாறு செய்வது அறியாமையே.

வாழும் வழி

நமக்கு விவசாயம் வாழும் வழி ஆகும். நம் நாட்டின் பண்பாடும் கிராமிய வாழ்க்கையை ஒட்டியே அமைந்துள்ளது. 85 சதவிகித மக்கள் கிராமங்களில்தான் வாழ்கின்றனர். எனவே, நம் நாட்டுப் பொருளாதாரம் சிறக்க, விவசாயம் முன்னேற்றம் அடைய வேண்டும். விவசாயிகள் வாழ்க்கை வளம்பெற வேண்டும். எஞ்சிய 15 சதவிகித மக்களே ஏனைய பெருந் தொழில்களில் ஈடுபட்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இதுவே ஏற்றதொரு நடைமுறை.

மற்றத் தொழில்களைப் போல் விவசாயம் திடீர் முன்னேற்றம் அடைய முடியாது. அது படிப்படியாகவே அமைய முடியும். விவசாயத்தில் புரட்சி — பசுமைப் புரட்சி — என்று சொல்வதெல்லாம் வீண் வார்த்தை ஜாலம் தான். அவ்வாறு கூறும் அரசியல்வாதிகளுக்கு விவசாயத்தைப் பற்றிய அறிவு, அக்கறை கிடையாது. காரணம், ''தொழில்களை

இப்படியும் நிகழ்ந்தது!



ரஞ்சி கோப்பைப் பந்தயத்தில் சவுதிராஷ்டிரா கோஷ்டிக்கெதிராக ஆடிய பி.பி. நிம்பல்கர் ஒருவரே 443 ரன்கள் எடுத்துக் குவித்து விட்டார்! இதைக் கண்ட எதிர்த்த கட்சியினர், "இந்தப் படு ஆசாமி ஆனானப்பட்ட பிராட்மனின் ரிகார்டு 452 ரன்களைக் கடப்பதா? நாங்கள் இனி ஆடத் தயாராக இல்லை!" என்று சொல்லி மைதானத்தை விட்டு நகர்ந்து விட்டனர்! ஆட்டம் அதோடு அந்தரத்திலே முடிந்தது!

பெருக்கினேம், ஆலைகளைக் கட்டினேம்'' என்று சாதனைப் பட்டியல் போடுவது போல, விவசாயத் துறையில் செய்ய முடியாது. ஆலைகளில் விரைவான உற்பத்தி நடக்கும்; பெருமளவு செல்வம் கிடைக்கும்; ஆனால் விவசாயத்தில் மெதுவான உற்பத்தியும், ஓரளவு வருமான உயர்வுமே கிடைக்க முடியும். அதனால் அரசியல்வாதிகள் விவசாயம் பற்றி அக்கறை கொள்வதில்லை.

விவசாயி நம் அடிமையா ?

விவசாயத் துறையில் நாம் செய்து வரும் மற்றொரு தீங்கு விவசாயிகளை நமது அடிமைகளாக வைத்திருப்பது ஆகும். ''விவசாயிகள் நன்கு உழைத்தால்தான் நமக்கு உணவும் பருத்தி போன்ற ஆலை மூலப் பொருள்களும் கிடைக்கும்'' என்னும் சுயநலம் காரணமாகவே ''விவசாயம் முக்கியம்'' என்று பேசுகிறோமே தவிர, விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்று நாம் உண்மையில் எண்ணுவதில்லை. டிராக்டர், பம்பு செட், உரங்கள், நல்ல விதைகள் போன்றவை ஆனைத்தையும் அவர்களுக்குத் தருகிறோம். உண்மைதான். அது விவசாயத்தை வளப்படுத்துமே ஒழிய உழைக்கிற விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியாது. மாடாக உழைத்துக் களைத்து, உழவன் மண் குடிசையில்தான் உறங்குகிறான். அவனுக்கு நல்ல வீடு கட்டித் தர நமக்கு மனம் இல்லை. அவன் மக்கள் கல்வி பெறுவதில் நமக்கு நாட்டமில்லை. அதனால்தான் அவனுக்கும் தொழிலில் ஆர்வம் இல்லை. மாறாக, கூட்டுறவுத் துறையினரும், பிறரும் உரம் வாங்க, விதை வாங்க, கிணறு வெட்ட என்று பல வகைகளில் அவனுக்குக் கடன் வழங்குகிறார்கள். அதனால், உழவன் அரசாங்கக் கடனுக்கு அடிமையாகி விடுகிறான். சாகுபடி செய்து அறுவடையானவுடனே, பலாப் பழத்தில் ஈ மொய்ப்பதுபோல் எல்லோரும் அவனைச் சூழ்ந்து கொண்டு விடுகின்றனர். அடுத்த மகசூலுக்கு மீண்டும் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலைக்கு அவன் ஆளாகிவிடுகிறான். இது அரசாங்கத்தினர் செய்யும் பெரிய தவறு. இந்த நிலையை முற்றிலும் மாற்றியமைத்து, விவசாயியின் சொந்த வாழ்வு வளம் பெறுமாறு செய்தால் விவசாயம் நல்ல முன்னேற்றம் அடைய முடியும்.

நாடு முழுதும் ''விவசாயிகளின் வாழ்க்கைக்கு என்ன தேவை? அவன் தொழிலுக்கு என்ன தேவை?'' என்பதைக் கவனித்து, பரவலான முறையில் விற்பனை நிலையங்களை அமைத்து, அவனுக்கு உதவி செய்து வந்தால் நாடு விரைந்து முன்னேற முடியும். அதனால் பெருகும் செல்வம் மக்கள் யாவருக்கும் பரவலாக விநியோகம் ஆகும். நாட்டின் பொருளாதாரம் வலுப்படும்.



சப்தஸ்வரங்களும் கருதிபேதம் இல்லாமல், ஒலித்தால்தான் செவிக்கு இனிய இசை பிறக்கும். அதே போல வாழ்க்கையிலும் எதிலும் கோளாறில்லாமல் ஒழுங்காயிருந்தால் தான் சுகம் இருக்கும் - இக்கருத்தை வெளிப்படுத்தும் கதையில் புதுமையில்லை.

ஒரு நாதஸ்வரக் கலைஞன், நடனக்கலையில் தேர்ந்த பெண் ஒருத்தியைக் காதலிக்கிறான். ஆனால் அவளது பெற்றோர்கள் அவளைச் சினிமாவில் சேர்த்துப் பெரும் புகழும் பொருளும் ஈட்ட ஆசைப்படுகின்றனர். அந்த ஆசைக்குத் தூபம் போட, சினிமா டைரக்டர் பிரதாபன் வந்து சேருகிறான். கலைஞர்களின் காதலுக்குத் தடை ஏற்படுகிறது. காதலனும் காதலியும் யாருக்கும் தெரியாமல் வெளியேறி விடுகின்றனர். நடனக்கலை ஆசிரியர் அவர்களுக்கு உறுதுணையாயிருக்கிறார். நாதஸ்வரக் கலைஞனை மணமாகக் காதலித்த ருக்மிணி கண்ணீர் விட்டுக் கலங்குகிறாள். ஓடிப் போனவர்களின் வாழ்க்கை நன்றாய் அமையவில்லை. சினிமா ஆசையினால் காதலனைத் தூற்றி வெளியேற்றி விடுகிறாள் அந்த நடனப் பெண்.

கற்பழிக்கும் காட்சி இல்லாத குறையை ஈடுகட்ட கணவனால் கைவிடப்பட்ட பெண்ணைப் பிரிந்து பெற்ற தாய் மற்றொருவனுடன் (சினிமா டைரக்டருடன்) ஓடிவிடும் அவலச்சுவை இருக்கிறது. அது போதாதா?

நாதஸ்வரக் கலைஞன் அழகனாக வரும் ராகவனுக்கு நல்ல எடுப்பான தோற்றம்; மிக இயல்பாகப் பாத்திரத்துடன் ஒன்றி நன்றாய் நடிக்கிறார்.

நடனப் பெண்ணாக வருபவர் ஸ்ரீவித்யா. நன்றாக நடித்திருக்கிறார். கலைஞனால் கைவிடப்பட்ட காதலியாக வரும் சுஜாதாவுக்குக் கவலையின்றிக் காதலனுடன் ஆடிப் பாடவும், கண்ணீர் பெருக்கவும், கடைசியில் பிரிந்தவர்களை ஒன்றுசேர்த்து வைத்துப் படத்தை நல்லபடியாக முடித்து வைக்கவும் சந்தர்ப்பங்கள் கிட்டியிருக்கின்றன. படத்துக்கு மெருகேற்றும் நடிப்பு.

அடுர்பாஸியின் நகைச்சுவை ஓரளவு வேலை செய்கிறது.

நல்ல நாதஸ்வர இசையைக் கேட்க வாய்ப்பளித்த தற்கும் படாதிபதிகளைப் பாராட்டலாம் - ஆனால் எதற்காகப் பாடல்களைப் புகுத்திச் சிரமப் பட்டிருக்கிறார்கள்!

இயற்கைக் காட்சிகளைக் கொண்டே ஒளிப்பதிவின் சிறப்பை வெளிப்படுத்தியிருக்கிறார் சி. நமசிவாயம். படத்தின் டைரக்டர் பேபி. ஆனால் அவர் கலைத் திறமையில் பேபியாயிருந்து விடவில்லை!

அபஸ்வரம் சில இடங்களில் தட்டினாலும், 'சப்தஸ் வரங்கள்' இனிமையாகவே இருக்கிறது. - காந்தன்

தனிமையின்
இனிமை—லக்ஷ்மியுடன்

உதயத்தின் இளங்குளிரில், என் அறையின் தனி அமைதியில், போக்குவரத்தின் கூவல் ஒலியில், நள்ளிரவின் மிருதுத் தன்மையில்... நீ எங்கும் எப்போதும் உடனிருக்கிறாய் லக்ஷ்மி.

அன்புக்குரிய லக்ஷ்மி, மனங்கவர் லக்ஷ்மி, மகிழ்ச்சி நிறை லக்ஷ்மி—இப்படி நீ எனக்குப் பலவாக விளங்குகிறாய்.

லக்ஷ்மி, நீ பருத்தியின் குளுமை, பாப்ளினின் மென்மை, பாலியஸ்டர் கலவைகளின் நாகரிகக் கவர்ச்சி...

லக்ஷ்மி, கிளர்ச்சியூட்டும் நிறங்கள், அடக்கமான வண்ணங்கள், தன்னிச்சையான கோடுகள், கட்டங்கள், இழைச் சேர்க்கைகள் இவற்றின் துணைகொண்டு என்னை நீ பிரமிக்கச் செய்கிறாய்.

லக்ஷ்மி — இன்றுபோல் என்றும் இணை பிரியாமல் இருந்திடுவோம்.



பொன் மாலை தரும் அழகு

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

"இங்கே தனியாக எப்படி நீங்கள் இருக்க முடியும்? எவ்வளவு நாட்கள் தாம் இப்படிப் பிடிவாதம் பிடிக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டான் கோபாலன்.

வீடு பெரியது. வாசலில் கொட்டகை. சுத்தமாகப் பெருக்கிச் சாணம் தெளித்திருந்தது. அங்கே சாய்வு நாற்காலியை மேற்கே பார்க்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார் நாராயணன்.

"நான் தனியாகவே இல்லையே? கூப்பிட்ட குரலுக்கு ஆள் இருக்கிறது. சமையல் செய்யப் பையன் இருக்கிறான். மத்தியானம் சீட்டுக் கச்சேரிக்கு நாலு கை தயார். சாயங்காலம் நான் போகும் கோவிலில் நிறையக் கூட்டம்—"

"கிண்டல் பண்ணாதீங்கப்பா! நீங்க 'ப்ளு' ஜுரம் வந்திருக்குன்னு எழுதியதும் நான் பயந்து போய் ஓடி வந்தேன். இப்போ! நீங்க இனிமேல் என்கூட வந்து இருக்கிறது தான் நியாயம். இல்லேன்னா தகப்பனாரை மகன் கவனிக்காம விட்டுட்டான் என்ற கெட்ட பெயர் எங்களுக்கு வந்து சேரும். அது உங்களுக்குச் சம்மதமானா—"



"ஓ! நீ ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாய்?" என்று நயமாகவும் தன் பிடிவாதத்தைத் தளர விடாமலும் பேசினார் நாராயணன். மகன் அதைவிடப் பிடிவாதக்காரன் என்பது அவருக்குத் தெரியும். அவன் கண்டிப்பில் அவருக்குக் கொஞ்சம் பயமும்கூட.

இருபத்தைந்து ஆண்டுகள் சென்னையில் கல்லூரியில் வேலைபார்த்து, புரொபஸர் பதவியை விட்டுச் சற்று முன்னதாகவே ஓய்வெடுத்துக் கொண்டு கிராமத்துக்கு வந்து விட்டார் நாராயணன். மகன் படித்து டாக்டர் ஆகி பெங்களூரில் தொழில் தொடங்கி விட்டான். அவருக்குத்தான் நகரவாசத்தின் நெரிசலும் கெடுபிடியும் அலுத்து விட்டன. ஒதுங்கினாற்போல் கிராமத்துக்கு வந்து இருக்கலாம் என்று வந்து விட்டார். அப்படிக் கரை ஒதுங்கி இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன.

காவிரியில் உடம்பு அமிழ அரை மணி நேரம் குளிப்பார். வயற்கரை ஓரமாகக் காலாற மாலை வேளைகளில் நடப்பார். கலப்படம் இல்லாத பாலும், எண்ணெயும், பொருட்களும், பசுமையான காய்கறிகளுமாக வாய்க்கு ருசியான சமையல். பிற்பகல் வேளையில் மனம் கலகலவென்று இருக்கச் சீட்டாட்டம். அவருக்கு ரொம்பப் பிடித்திருந்தது இந்த வாழ்க்கை. ஆனால் பையன் விடவில்லை.

மங்களம் ஐந்து ஆண்டுகளுக்கு முன் மறைந்து போன பிறகு அவருடைய வாழ்க்கை தனிமையில் தான் விரைந்து ஓடிக் கொண்டிருந்தது. இப்போது புதிதாக ஒன்றும் இல்லை. அந்த மனத் தனி

மைக்கு டாக்டர் கோபாலன் மருந்து தர முடியாது.

பெங்களூர் வந்து சேர்ந்தாயிற்று.

''எதைப் பற்றியும் கவலைப்படாதீர்கள். எனக்கோ நளினிக்கோ தொந்தரவு கொடுப்பதாக ஏதும் நீங்களாக நினைத்துக் கொண்டு விடாதீர்கள். உங்களை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் எங்கள் ஆசை. அம்மா இல்லாத குறை தெரியவே கூடாது—'' என்றான் கோபாலன்.

நாராயணனுக்கு இலேசாக ஓர் அதிர்ச்சி. தொந்தரவா ? அப்படிக்கூட இருக்க முடியுமா ? அவர்கள் புதிதாக மணமானவர்கள். அவர்கள் இருக்கும் பக்கம்கூட அவர் போவதில்லை. கோபாலனின் 'கன்ஸல்டிங் ரூம்' முன் பக்கம் இருந்தது. அவர் அங்கே எட்டிப் பார்ப்பதுகூட இல்லை. அவர்கள் இருவரும் சினிமாவுக்கு, நண்பர்கள் வீட்டுக்கு என்று கிளம்புவார்கள். அவர் ''கூட வருகிறேனே?'' என்று கிளம்பியதில்லை.

அவருக்குப் பொழுது போகாமல் மண்வெட்டியை எடுத்துக் கொண்டு தோட்டத்துக்குப் போவார். பின்னாலேயே வந்துவிடுவான் கோபாலன். ''அப்பா! உங்களுக்கு இதெல்லாம் உடம்புக்கு ஆகாது. நேரத்தில் சாப்பிட்டுவிட்டுப் பிற்பகலில் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். சாயங்கால வேளையில் உலாவப் போய்விட்டு வாருங்கள். வேண்டுமானால் காரைக்கூட எடுத்துக் கொண்டு போகலாம்; கிராமத்தில் நீங்கள் தனியாக அலட்டிக் கொண்டிருந்தீர்கள் என்றுதானே உங்களை இங்கே அழைத்துக் கொண்டு வந்தேன்.''

நாராயணன் மலைத்துப் போனார். அவருக்கு அப்படி என்ன வயதாகிவிட்டது? முன்னாலேயே 'ரிடையர்' ஆகிவிட்டதால் ஐம்பதைக்கூட எட்டவில்லை. உடலில் தளர்ச்சி இல்லை. ஆனால் அவரை உட்கார வைத்து ஓய்வெடுத்துக் கொள்ளச் சொல்வதுதான் தன் கடமை என்று மகன் நினைத்தான்.

அவருடைய கற்பனையில், அங்கே வந்தும் அவர் தனியாக உலாவிக் கொண்டிருப்பது தெரிந்தது. தனியாக அறையில் உட்கார்ந்து படிப்பு — அப்புறம் தனிமையில் ஓய்வு, தூக்கம்.... எல்லோரும் சாப்பிடு முன் சாப்பாடு — அவர் எதற்காக அங்கே வந்தார்?

கிராமத்துக்குத் திரும்பிப் போக வேண்டும் போல் இருந்தது. ஆனால் கோபாலன்? அவரை எங்கே விடப் போகிறான்?

காரில் பொழுது போக்காக மாலையில் போய்க் கொண்டிருந்தவர் அதை நிறுத்தச் சொன்னார். நகரத்தை ஒட்டினாற்போல் அந்தக் கிராமியச் சூழல். இறங்கிக் கருக மரத்தடியில் நின்று பார்த்தார். கருகரு என்று கரும் பச்சையாக வாளித்து வளர்ந்த பயிர் காற்றில் அலை மோதிக் கொண்டிருந்தது. மெல்லிய காற்றில் தோப்பு 'ஙிர்ஙிர்' என்று முனகிக் கொண்டிருந்தது.

ஆற்றங்கரையை ஒட்டினாற் போல் ஒரு கோயில். அதைப் புதுப்பித்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் காட்சியின் அழகும் அமைதியும் அவரைக் கவர்ந்தன. குடமுருட்டியின் கரையும் தோப்பின் பசுமையும் நினைவுக்கு வந்தன. இந்த ஊரிலும் இப்படி ஓர் இடம் இருக்கிறதா என்ன? நெஞ்சு குளிரப் படர்ந்த உணர்வு.

ஊருக்குள் நடந்து போனார். கோயில் வாசலில் வேலை நடந்து கொண்டிருந்தது. ஸ்தபதியுடன் பேசிக் கொண்டிருந்தாள் நடுத்தர வயதில் ஒரு பெண். பேச்சின் நுட்பமும், அவள் பார்வையின் கூர்மையும், அந்த வேலையில் அவளுக்கு இருந்த ஆர்வமும் அவரைத் தெம்புடன் கவனிக்கச் செய்தன.

அவர் விசாரிக்குமுன் அவளே அறிமுகம் செய்து கொண்டாள். ருக்மிணி தில்லியில் பேராசிரியையாக இருந்தவள். வேலையை விட்டு விட்டு இங்கே வந்து விட்டாள். பதினைந்து ஆண்டுகள் உத்தியோகம் பார்த்தது





ஒருவர் பண்டித ஜவாஹர்லால் ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்ட பத்து ரூபாய் வெள்ளி நாணயங்கள் வைத்திருந்தார். அவர் அவற்றை ஒரு சதுரமான அட்டைப் பெட்டியில் வரிசையாக அடுக்கி வைத்தார். நாணயங்கள் பெட்டிக்குச் சரியாக இருந்தன. அவர் வெளியே செல்லவேண்டியிருந்தது. திரும்பி வந்த போது வேலைக்காரப் பையன் அழுது கொண்டிருந்தான்.

"ஸார்! நீங்க போனதும் மூன்று முரட்டுப் பசங்க வந்தாங்க. என்னைப் பயமுறுத்திவிட்டு, ரூபாய்களை எடுத்துக் கொண்டாங்க. மூன்று பேரும் பங்கு போட்டுக் கொண்டாங்க. ஆனால் இரண்டு ரூபாய் மீந்து போச்சு. அதைப் பங்கு போட்டுக்க முடியாமல் விட்டு விட்டு ஓடிவிட்டாங்க!" என்றான்.

"திருட்டுப் பயலே! யாரிடம் கதை விடுகிறாய்?" என்றார் யஜமானர்.

அவர் அந்தப் பையன் மீதே ஏன் சந்தேகப்பட்டார்?

விடை:

திருடர்கள் வந்து அவர்கள் சமமாகப் பங்கு போட்டுக் கொள்ளத் தீர்மானித்திருந்தால் நிச்சயம் இரண்டு நாணயங்களை மீதி வைத்திருக்க முடியாது.

ஏனென்றால் அது சதுரமான பெட்டி. எந்த எண்ணின் சதுரத்தை, அதாவது Squareஐ மூன்று என்ற எண்ணால் வகுத்தாலும் இரண்டு மீதம் வரவே வராது. இது கணித சாஸ்திர உண்மை.

உதாரணம்: $3^2 = 3 \times 3 = 9$; $9 \div 3 = 3$ மீதம் $= 0$.

போதும் என்று தோன்றிவிட்டது. பெற்றோர்கள் இல்லை. திருமணமும் செய்து கொள்ளவில்லை.

"இங்கே வந்ததிலிருந்து எனக்கு இந்தக் கோயில் வேலையில்தான் எல்லா ஆர்வமும். வட இந்தியாவில் நிறைய இயற்கை வளம் இருக்கிறது. ஆனால் தெற்கேதான் கலைச் செல்வம் கொழிக்கிறது...."

அவள் பேசிக் கொண்டே போனாள். ஆர்வத்தில் கண்களில் சுடர் வீசியது. அறிவும் பண்பும் செருகாய்ப் படர்ந்த நயமான பேச்சு. அவர் ஆவலுடன் கேட்பதைப் பார்த்து அந்த முகத்தில் ஒரு களை படர்ந்தது.

அடுத்த வாரம் ஞாயிற்றுக்கிழமை. காலையிலிருந்தே அவர் மனம் அந்தச் சந்திப்புக்குத் தயாராகிவிட்டது. அவர் சொல்லிவிட்டு வரவில்லை. ஆனாலும் அவள் அவருக்காகக் காத்துக் கொண்டிருந்ததைப் போலத் தோன்றியது. அவரைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனாள்.

புத்தக அலமாரிகள் நிறைந்து வழிந்தன. அவரும் படித்து ரசித்து அனுபவித்த புத்தகங்கள்தாம். கொஞ்சம் அழுத்தமான விஷயங்களில்தான் அவளுக்குப் பற்றுதல். அவளுடைய படிப்பின் ருசியும் அப்படித்தான் இருந்தது. இருவருக்கும் பிடித்த ஆசிரியர்களைப் பற்றி, அவர்களுடைய புத்தகங்களில் வரும் இடங்களைப் பற்றி நிறையப் பேசினார்கள்.

பொழுது போனதே தெரியவில்லை.

அடுத்த தடவை அவருக்கென்று டிபன் செய்து வைத்திருந்தாள் ருக்மிணி. எவ்வளவு நயமான, ருசியான சமையல்? கல்லூரிக் கட்டடத்திலும், சோதனைச் சாலையிலும் புத்தகமும் பேனாவும் பிடித்த கைக்கு இப்படியும் ஒரு சாமர்த்தியமா? அவரால் பாராட்டுதலை அடக்க முடியவில்லை.

"நான் தனியாக இருந்தால் ஒன்றும் பிரமாதமாகச் செய்ய மாட்டேன். அதில் அக்கறை இல்லை. நீங்க வருகிறீர்கள் என்று எனக்கு ஓர் ஆவல். அவ்வளவுதான்."

அவர் மலர்ந்து போய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். பதிலுக்கு அவருக்குத் தெரிந்தது ஒன்றைச் சொல்லிக் கொடுக்கலாமே? தோட்டம் போடக் கற்றுக் கொடுத்தார். மண்ணின் வாகு, எரு, தண்ணீர் விடுவது எல்லாவற்றையும் நுட்பமாகச் சொன்னார். கொஞ்சம் மண்ணைக் கொத்திச் செடிகளையும் வைத்தார். அவருடைய கை ராசியானது. அடுத்த தடவை பசுமையாகக் கிளம்பி இருந்தது. ருக்மிணி அந்தச் செடியைத் தொட்டுக் காண்பித்து, கண்களில் வியப்புத் தெரிய நின்றபோது அவருக்கு ஒரு பெருமை.

திரும்பி வரும் போது அவர் மனம் இலேசாக ஊசலாடிக் கொண்டிருந்தது. 'இந்த வீட்டில் இருந்து கொண்டு, இந்தத் தோட்டத்தை மலரச் செய்யும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தால்? ருக்மிணி ருசியாகச் சமைக்கிறாள். பாராட்டுவதற்குத் தான் ஆள் இல்லை. புத்தக அலமாரி தூங்குகிறது. படித்துவிட்டுச் சுவையாகப் பேசுவதற்குத்தான் சந்தர்ப்பம் இல்லை......'

இருவருமாகக் கோயிலுக்கு முன் நின்று கொண்டிருந்தார்கள். மாலை முற்றி முன் நிலா எழுந்து கொண்டிருந்தது. நந்தவனத்துப் பூவின் மணம் காற்றை நிறைத்தது.

"நான் ஒன்று சொன்னால் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டாயே ருக்மிணி?"

"சொல்லுங்கள்."

"இந்தத் தனிமை போதும். உன் படிப்பும் அறிவும் வேலை பார்க்க உதவியதும் போதும். உனக்கு நாற்பது வயதுகூட இராது. ஒரு குடும்பத்தில் உன் கைவண்ணமும் சாமர்த்தியமும் பயன்படட்டுமே? இன்னொருவர் தனிமைக்கு நீ மாற்றுக் கொடுக்கலாமே? உன்னையே நீ ஏன் இப்படி வீணாக அடித்துக் கொள்கிறாய்?"

அவள் சிரித்துக் கொண்டாள். பதில் சொல்லவில்லை. ஆனால் அவள் பார்வையில் ஒரு குளிர்ச்சி இருந்தது. அவர் சொன்னது அவளுக்கு வெறுப்பாக இல்லை.....

காரில் திரும்பும்போது மனத்தில் அந்த ஞாபகம். அவருடைய மனத்தில் மறுபடியும் ஒரு மலர்ச்சியா? மங்களத்தின் நினைவு வந்தது. அவருடைய வாழ்க்கையில்,

பெண்மையின் கைப்பட்ட மென்மை, அது தந்த தனி மணம், எல்லாம் அவளுடன் போய்விட்டன. இளமையிலும் சரி, அப்புறமும்தான், அவர் தம் ஆசை, பிரியம், இன்பம் எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்ட பெண் மங்களம்தான். அப்புறம் அவருக்கு ஒன்றும் இல்லை.

இப்போது அந்த இடத்தில் ருக்மிணியின் நினைப்பா? எப்படி அவரால் முடியும்? அவர் படிப்புக்கும் அறிவுக்கும் மங்களம் இணை இல்லை. அவருடைய சாமர்த்தியத்துக்கு அவள் ஈடுகொடுக்க முயன்றதில்லை. ஆனால் அது பணிவிலேயே திருப்தியைக் கண்டுவிட்ட ஒரு நிறைவான வாழ்க்கை. அது ஒரு ரகம்.

ருக்மிணி வேறுவிதம். அவருக்கு ஈடு கொடுக்கும் சாமர்த்தியமும் பண்புமே அவரைப் பிரமிக்க வைத்தன. அவர்களிடையே பத்து வயதுக்கு மேல் வித்தியாசம் இருக்கலாம். ஆனால் அவர்களுடைய பேச்சிலும், அறிவிலும் பண்பிலும் பழக்கத்திலும் அந்த இடைவெளி இல்லை. பண்பட்ட நெஞ்சங்களில் நெருக்கம்தான் தெரிந்தது. ஆனாலும்—

தோட்டத்துச் செடி பூத்துக் குலுங்கி நின்றது. அதற்குத் தண்ணீர் வார்த்தபடி குனிந்திருந்த ருக்மிணி சட்டென்று தலை நிமிர்ந்தாள். புன்னகையிலும் பூவின் மலர்ச்சி தெரிந்தது. ''மண்ணைத் தெரிந்து உரம் போட வேண்டியிருக்கிறது. அப்புறம் உரத்துக்கேற்ற தண்ணீர் விடவேண்டி இருக்கிறது. இத்தனை கவனிப்புக்கும் ஒருவர் சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது.''

பெருமையுடன் இடுப்பில் கையை வைத்துக் கொண்டு சுற்றிலும் கவனித்தார் நாராயணன். எங்கும் பசுமை மலரத் தொடங்கி விட்டது. ஒரு தனியான களை வந்திருந்தது. அந்த வீட்டிலும் ருக்மிணி முகத்திலும்கூடத் தான். அவருடைய கை ராசியான கை. அது தோட்டத்து மண்ணுடன் நின்று விடவில்லை.

''நீங்கள் சொன்னதை யோசித்துப் பார்த்தேன். எனக்கும் இந்தத் தனிமை பிடிக்கவில்லைதான். ஆனால் இதன் காரணத்தை நான் உங்களிடம் சொன்னதில்லை. நான் மணம் செய்து கொள்ள வேண்டும் என்று விரும்பி நேசித்த ஒருவர், என்னுடன் வேலை செய்து கொண்டிருந்தவர், ஒரு விபத்தில் இறந்து போய்விட்டார். அப்புறம் எனக்கு அந்த நினைப்பே பட்டுப் போய்விட்டது....''

திகைத்துப் போய்ப் பார்த்தபடி நின்றார் நாராயணன். அவளுடைய வாழ்க்கையிலும் ஓர் இழப்பா? அவரைப் போல் ஒரு பள்ளத்தை இட்டு நிரப்பவா அவளும் முயன்று கொண்டிருக்கிறாள்? மண்ணைத் திருத்தி மலர்ச் செடியை ஊன்றவா எண்ணிப் பார்க்கிறாள்?

பொருத்தம்தான். அந்த ஒற்றுமையிலும் ஒரு பொருத்தம்தான். வாலிபமும் இனிமையும் தந்திருக்கக்கூடிய வாழ்க்கை அவர்களுக்கு இனிமேல் இல்லை. கவர்ச்சியும் துடிப்பும் நிறைந்த காதல் வாழ்க்கை இனி அவர்களுக்குக் கடந்த கால நினைவாகத்தான் இருக்க முடியும்.

ஆனாலும் அந்த நினைவின் தன்மையை இருவருமே ஒதுக்கிவிடலாம். வயஸ்தையும்



நிபுணர் கருத்து!

ஹாக்கி, கிரிக்கெட் 'டபுள்' இன்டர்நேஷனல் எம். ஜே. கோபாலனிடம் ''நம் இந்திய ஹாக்கி ஆட்டக்காரர்கள் அயல் நாடுகளில் சோபிக்க முடியாததற்கு அந்த நாடுகளின் சீதோஷ்ண நிலைதான் காரணம் என்று சொல்லிக் கொள்கிறார்களே! அதைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று வினவினோம். அவருடைய பதில்;

''நம் இந்திய ஆட்டக்காரர்களைத் தேர்ந்தெடுப்பது நல்ல பயிற்சியும் தேர்ச்சியும் உள்ளவர்களாகப் பார்த்துத்தான்! அவர்கள் அயல் நாடுகளில் ஆடிப் பழக்கமில்லை என்று சொல்வது பொருத்தமல்ல. நல்ல தேர்ந்த ஆட்டக்காரர் வெகு விரைவில் சீதோஷ்ணத்துக்கேற்ப ஆட்டத் திறமையைப் பிரகாசிக்கும்படி செய்வார். உதாரணமாக முன்பு நாங்கள் ஆஸ்திரேலியாவுக்கும் நியூஜிலாந்துக்கும் ஹாக்கி டெஸ்ட் பந்தயங்கள் ஆடச் சென்றிருந்த போது மைதானம் 'ஜில்'லென்றிருந்தது. ஐஸ் கட்டியில் காலை வைத்து ஆடுவது போல என்று வைத்துக் கொள்ளுங்களேன்! நானும் தயான்சந்தும் மற்ற ஹாக்கி ஆட்டக்காரர்களும் ரத்தத்தை உறையச் செய்யும் இந்தக் குளிரில் எப்படி ஆடுவது என்று தயங்கி நின்றுவிடவில்லை. மைதானத்துக்கு வெளியே 'ஸ்கிப்பிங்' செய்து 'வார்ம் அப்' (warm up) செய்து கொண்டோம். அதன் பிறகு எங்களுக்கு மைதானத்தில் ஆடுவது கஷ்டமாயிருக்கவில்லை! தேசிய ஹாக்கி ஆட்டக்காரர் என்றால் எந்தச் சூழ்நிலையிலும் எந்த இடத்திலும் நன்றாக ஆடத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேணும்!''

- குண்டுமணி.

பருவத்தையும் கடந்த ஒரு நினைவு, இணையத் துடிக்கும் ஓர் உணர்ச்சி, அவர்களை ஒற்றுமைப்படுத்திவிடும். பொன் மாலையின் அழகான இந்த இணைப்பிலும் ஒரு நயம் இருக்கும்.

அந்த வாலிபனை அவள் இழந்திருக்கலாம். ஆனால் அவனுக்காக அவள் வழங்கக் காத்திருந்த அன்பு உணர்ச்சி இன்னும் மறையவில்லை. அள்ளிக் கொடுக்க இன்னும் காத்துக் கொண்டுதான் இருக்கிறது. அதை ஏற்பதற்கு, சற்று திடமான அந்த உணர்ச்சியின் அழகைப் புரிந்து பாராட்டுவதற்கு, ஏற்ற ஒருவர் தான் தேவை.

ருக்மிணி அதற்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறாளா?

பூவாளியை வைத்துவிட்டு நிமிர்ந்தவளின் கையைக் கரம் நீட்டிப் பிடித்துக் கொண்டார், நாராயணன். அவள் கண்களில் நட்சத்திரங்கள் ஒளிர்ந்தன. அவள் புரிந்து கொண்டு விட்டாள். அவர் பேசத் தேவையில்லை.


தினசரி உங்கள்
உடலுக்குத் தேவை
இந்த 23 அத்தியாவசிய
ஊட்டச் சத்துக்கள்.
பருகுவீர்
காம்ப்ளான்®
போஷாக்குப்
பற்ருக்குறையிலிருந்து
உங்களைப்
பாதுகாக்கவே
CMGC-6-216 TM

காம்ப்ளான்
இந்த 23-ஐயும் தருகிறது.

புரதம்
திசுக்களையும் செல்களையும்
உருவாக்க, பாதுகாக்க
லிப்பிடுகள்
பொங்கிப் பெருகும் சக்திக்கே
கார்போஹைடிரேட்
சக்தி மிகுந்த உடல் வலிமைக்கே
கால்ஷியம்
ஆரோக்கியமான பற்கள்,
எலும்புகளுக்கு
பாஸ்பரஸ்
உடல் சுரப்பிகள், பற்கள் எலும்புகளுக்கு
சோடியம்
இரத்தம் நன்முறையில் செயலாற்ற
குளோரைடு (Cl வடிவில்)
தசை இயக்கத்திற்கு,
பிடிப்புகளைத் தவிர்க்கும்.
பொட்டாஷியம்
மனத் தளர்ச்சி,
தசை அயர்ச்சிக்கெதிராகப் போராட
இரும்புச் சத்து
ஆரோக்கியமான ரத்தத்திற்கே
அயோடின்
தைராய்டு சுரப்பி தரமாக இயங்க
வைட்டமின் ஏ
ஆரோக்கியமான
கண்களுக்கு
வைட்டமின் பி1
வளர்ச்சி,
உறுதியான
நரம்புகள்,
'பெரி-பெரி' நோய்
பிடிக்காதிருக்க



ரிபோஃப்ளேவின்
ஆரோக்கியமான வாய்,
நாக்கு, உதடுகள், கண்களுக்கு
நிகோடினமைடு
ஒளிவீசும் ஆரோக்கியமான
சருமத்திற்கே
கால்ஷியம் பென்டோதெனேட்
நரம்புகளையும் தசைகளையும்
வலுப்படுத்த
கோலின்
கல்லீரல் ஆரோக்கியமாக இயங்க
பைரிடாக்ஸின் (B6)
தசைகளை இளைப்பாற்ற
வைட்டமின் பி12
இரத்த சோகை பிடிக்காதிருக்க
ஃபாலிக் அமிலம்
புதிய இரத்த செல்களை உருவாக்க
வைட்டமின் ஸி
நோயெதிர்ப்புச் சக்தியைப் பெருக்கி,
ஸ்கர்வி நோய் வராதிருக்க
வைட்டமின் டி
உறுதியான பற்கள்,
எலும்புகளுக்கு
வைட்டமின் ஈ
கரு வளர்ச்சிக்கு
வைட்டமின் கே
இரத்தம் இயற்கையான
முறையில் உறைய உதவும்
இதர சிறு சிறு பொருட்கள்
வைட்டமின்களை உடல்
உறிஞ்சிக்கொள்ளவும்,
சுரப்பிகள் நன்கு இயங்கவும்
உதவும்.

பால்
சேர்க்கா
மலேயே
பருகலாம்!

காம்ப்ளான் வளரும் குழந்தைகள்,
சுறுசுறுப்பான இல்லத்தரசிகள்,
பரபரப்புடன் இயங்கும் அலுவலாளர்கள்,
கருத்தரித்த தாய்மார்கள், பாலூட்டும் அன்னையர்,
வயது முதிர்ந்தோர், பிணியாறுவோர்
முதலியவர்களுக்கு சாலச் சிறந்தது.

**பாலையும் விட இன்னும்
அதிகமான வைட்டமின்கள், புரதம்,
கால்ஷியம், இரும்புச் சத்து மற்றும்
இதர ஊட்டச் சத்துக்களை
காம்ப்ளான் அளிக்கிறது.**



ஒப்பிட்டுப் பாருங்கள்:
ஒரு கோப்பை காம்ப்ளான் (33 கிராம்),
ஒரு கிளாஸ் பால் (200 மி.லி.)

உலகெங்கும்
உபயோகிக்கப்
படுவது—
க்ளாக்ஸோ
ஆராய்ச்சியில்
உருவானது.



பொன்னியின் புதல்வர்

சுந்தா

17. திருச்சியிலிருந்து சென்னை

சக்தி தனக்கே கருவியாக்கு — அது
சாதனைகள் யாவினையும் கூடும்

— பாரதியார்

1923ல் திருச்சி காங்கிரஸ் அலுவலகத்தில் கல்கி வேலை செய்தார் என்பதைக் கடந்த அத்தியாயத்தில் பார்த்தோம். அவர் செய்தது உள்ளே வெறும் மேசை வேலை மட்டும் அல்ல. காலை நேரங்களில் வெளியே சுற்றிக் காங்கிரசுக்கு உறுப்பினர்களைச் சேர்த்தார். உண்டியல் குலுக்கி நிதி வசூல் செய்தார். மாலை வேளைகளில் தேசியப் பிரசாரக் கூட்டங்களில் பேசினார். திருச்சியில் மட்டுமின்றிப் பக்கத்துக் கிராமங்களுக்கும் சென்று பேசினார். பேச்சின் தொடக்கத்தில் ஓரிரண்டு பாரதிப் பாடல்களைப் பாடுவார். அவற்றைத் தொடர்ந்து ஏதேனும் வேடிக்கைக் கதை அல்லது நகைச் சுவைத் துணுக்குகளை எடுத்துவிடுவார். அவைகளின் மூலம் ஜனங்களை வசியம் செய்த பிறகு, மகாத்மா காந்தியின் கட்டுரை எதற்கேனும் தாம் செய்திருந்த தமிழாக்கத்தை வாசித்துக் காட்டுவார்.

ஆங்கிலத்தைத் தமிழாக்கும் வித்தையை அவர், பன்னிரண்டு பதின்மூன்று வயதிலிருந்தே பயின்று வந்திருந்தார். ''ஹிந்து'' பத்திரிகையில் வரும் தேசியத் தலைவர்களின் சொற்பொழிவுகளையும், செய்திகளையும், தமது கிராமத்து மக்களுக்குச் சொல்லிச் சொல்லியும், பின்னர் எழுதி எழுதிப் பார்த்தும், மொழிபெயர்ப்புக் கலையில் தேர்ச்சி பெற்றிருந்தார்.

அதே ஆண்டில் அவர் சிறிது காலம் கதர் போர்டில் பணியாற்றினார் என்று தெரிகிறது. எந்த மாதங்களில் என்று தெரியவில்லை. சுமாராய் அந்த ஆண்டின் மத்தியில் இருக்கலாம்.

அந்த வேலையில் இருக்கையில் கல்கி, திருச்சியிலிருந்து சென்னைக்கும், தொண்டர் பதவியிலிருந்து பத்திரிகைத் தொழிலுக்கும் பெயர்ந்தார். அந்தப் பெயர்ச்சிக்கு அவருடைய மொழிபெயர்ப்புத் திறமை வகை செய்தது. முன்பு அவரைப் பள்ளியிலிருந்து பெயர்த்துத் தேசியத் தொண்டராய் ஆக்கிய டாக்டர் ராஜனும் வகை செய்தார். அவர்தான் முதலாவதாக வகை செய்தார். அந்தப் பொல்லாத மனிதரை முன்பு பழித்ததைப் போலவே மீண்டும் பழித்துக் கல்கி சொன்னார்:

எழுத்தாளர் உலகில் யாராவது என்னைத் தாக்கும்போதெல்லாம், அந்தத் தாக்குதல்களை அப்படியே நான் வாங்கி, திருச்சி தேச பக்தர் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனுக்கு அனுப்பிவிடுவது வழக்கம். ஏனென்றால், எழுத்தாளர் உலகுக்கு என்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளியவர் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் தான்.

(முதலில் ''குமரி மலர்''ரில் வெளிவந்து பின்னர் 10-8-43 கல்கி இதழில் வெளியான ''திரு. வி. க.'' என்ற கட்டுரையிலிருந்து)

'கல்கி'யின் வாழ்க்கை நெறிக்கு வழி வகுத்த இருவர்: திரு.வி.க. மணி விழாவின்போது அவர் அருகே ராஜாஜி. சற்று உன்னிப்பாய்க் கவனித்தால் டி. எஸ். எஸ்.ஸும் பின்னால் கல்கியின் தலையையும் காணலாம்.



எப்படித் தள்ளினுர் என்றல், ஒரு நாள் அவர் கல்கியைக் கூப்பிட்டனுப்பி அவர் முன்னுக்கு வருவதற்கு உதவியாய் ஒரு கடிதம் தருவதாகச் சொன்னுர். யாருக்கு, எதற்கு என்று தொண்டர் வியந்து கொண்டிருக்கையில்—

''திரு. வி. கல்யாணசுந்தர முதலியாருக்குக் கடிதம் தருகிறேன். அதை எடுத்துக் கொண்டு போய் அவரைப் பார். மெதுவாக 'நவசக்தி' பத்திரிகையில் சேர்ந்துகொள். பத்திரிகைத் தொழிலில் முன்னுக்கு வருவாய்'' என்றுர்.

எனக்கு மூர்ச்சை போட்டு விடும்போலிருந்தது. எனினும் சமாளித்து நின்று கடிதத்தை வாங்கிக் கொண்டேன். ஆனல், கடிதத்துடன் உடனே போய்த் திரு. வி. க. வைப் பார்க்கவில்லை. ஏனெனில், அது வீண் வேலை — நடக்காத காரியம் — என்று தோன்றியது. தமிழ்ப் பேரறிஞர் திரு. வி. க.வின் பத்திரிகையிலாவது நாம் சேருவதாவது?

(10-8-43—கல்கி இதழ்)

அப்படி மலைத்ததற்குக் காரணம் என்ன என்பதைக் கல்கி எடுத்துச் சொல்கையில், திரு. வி. க. வைப் பற்றியும், அவருடைய பத்திரிகைப் பணி பற்றியும் சுவையான தகவல்களைத் தெரிவிக்கிறுர்:

ஸ்ரீ திரு. வி. கலியாணசுந்தரனுரின் இரண்டாவது பத்திரிகை ''நவசக்தி''. (தொடக்கம் 1920) அவர் நடத்திய முதல் பத்திரிகை ''தேசபக்தன்'' (தொடக்கம் 1917.)


''தேச பக்தன்'' தினசரிப் பத்திரிகை, இரண்டரை வருஷ காலம்தான் நடந்தது. ஆனலும் தற்காலத் தமிழ்நாட்டின் சரித்திரப் பெருமையில் அதற்கு ஒரு முக்கியமான பங்கு உண்டு. டாக்டர் பெஸண்டு அம்மையாரின் 'ஹோம் ரூல்' இயக்கம் தீவிரமாய் நடந்த காலத்தில் ''தேச பக்தன்'' தோன்றியது. திரு. வி. கலியாணசுந்தரனுர் அதன் ஆசிரியரானுர். வெஸ்லி கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் அந்த வேலையை விட்டு விட்டுத் ''தேச பக்தன்'' பத்திராசிரியர் ஆனுர் என்று அறிந்தபோது தமிழ்நாட்டார் அடைந்த வியப்புக்கு அளவே இல்லை.

''தமிழ்ப் பண்டிதர்'' என்றல் அப்போதெல்லாம் ''கமலாம்பாள் சரித்திர''த்தில் வரும் அம்மையப்ப பிள்ளைதான் கண்ணெதிரே நிற்பார். படித்த சமூகத்துக்குள்ளே ஒடுக்கப்பட்டவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும், தீண்டப்படாதவர்களும், பார்க்கப்படாதவர்களும் தமிழ்ப் பண்டிதர்கள். அப்பேர்ப்பட்ட தமிழ்ப் பண்டிதர்களில் ஒருவர் ஓர் அரசியல் தினசரிப் பத்திரிகைக்கு ஆசிரியராக வந்திருக்கிறுர் என்றல், ஒரே வியப்பும் திகைப்பும் உண்டாவது இயல்பே அல்லவா? பின்னர் ''தேச பக்தன்''



▲ ''அது வரையில் தமிழ்நாட்டில் தனியாட்சி நடத்திக் கொண்டிருந்த ஒரே தினசரிப் பத்திரிகை...''

▼ ''முன்னல் பத்தடி சென்றல் பின்னல் பதினேந்தடி ஜகா வாங்கியது...''



இதழ்களைப் பார்க்கப் பார்க்க, ''என்ன துணிச்சல்! என்ன ஆர்வம்! எத்தகைய அரசியல் நுட்பம்! எவ்வளவு தீவிர தேசபக்தி! என்ன தமிழ்!'' என்று தமிழ் நாடே வியந்துகொண்டிருந்தது. எல்லாவற்றிலும் அதிக வியப்பு ''என்ன தமிழ்!'' என்பதற்காகத்தான்.

அதுவரையில் தமிழ்நாட்டில் தனியாட்சி நடத்திக் கொண்டிருந்த ஒரே தினசரிப் பத்திரிகை ''சுதேசமித்திரன்'' ஆகும். அதில் வந்த தலையங்கங்கள் ஏறக்குறைய பின் வரும் முறையில் அமைந்திருக்கும்:

''பெங்கால் புரொவின்ஷியல் கான்பரன்ஸில் மிஸ்டர் அம்பிகா சரண் மஜும்தாரின் பிரஸிடென்ஷியல் அட்ரஸில் இந்தியப் பிரஜைகளின் தேசிய அபிலாஷைகளை அடக்க இந்திய ப்யூராக்ரஸி கையாண்டு வரும் ரிப்ரஷன் முறைகளின் உபயோகமற்ற தன்மையைப் பற்றிக் கரதலா மலகமாய்க் கூறியிருப்பது ஹிஸ் எக்ஸெலன்ஸி வைஸ்ராய் அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்படும் என்று நம்புகிறேம்.''

(இது பழைய ''சுதேசமித்திரன்'' பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டதன்று; சு. மி.யின் அக்காலத்திய நடையை எடுத்துக் காட்டுவதற்கான சொந்தக் கற்பனை.)

இதே விஷயத்தைத் ''தேசபக்தன்'' பத்திரிகை எழுதியிருக்கக் கூடிய முறை பின் வருமாறு:

''வங்கத்தாயின் புதல்வர்தன் அண்மையில் மாகாண மகாநாடு கூடினார்கள். திரு அம்பிகா சரண் மஜும்தார் என்னும் வங்க வீரர் தலைமை தாங்கி அரியதொரு சொற்பொழிவு ஆற்றினார். அச்சொற்பொழிவில் இந்திய அதிகார வர்க்கத்தார் இந்தியக் குடிமக்களின் விடுதலை வேட்கையைத் தகைவதற்குக் கையாளும் அடக்குமுறைகளைக் கடிந்தார். அம்முறைகள் பயனற்றன என்பதை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெற்றென எடுத்துக் காட்டியுள்ளார். இச் செவ்விய உரைகள் மேன்மை தங்கிய இராஜப் பிரதிநிதியின் திருச் செவியில் ஏறுங்கொல்!''

அரசியல் விஷயங்களைப் பற்றித் தமிழிலே பேச முடியாது — எழுத முடியாது — என்று கருதப்பட்டு வந்த அந்தக் காலத்தில் மிகவும் சிக்கலான அரசியல் விஷயங்களெல்லாம் தேசபக்தனில் தூய தமிழில் எழுதப்பட்டு வந்தன. தமிழ்நாடு திகைப்பும் வியப்பும் அடைந்ததில் ஆச்சரியமென்ன?

1918–1919-ல் தீவிர தேச பக்திகொண்ட ஒரு கூட்டத்தார் தமிழ் நாட்டின் அரசியல் உலகில் பிரவேசம் செய்தனர். காங்கிரஸ் ஸ்தாபனத்தைக் கைப்பற்றி, அதன் மூலம் தமிழ் நாட்டைத் தேசிய இயக்கத்தின் முன்னணியில் கொண்டு வந்து நிறுத்த அவர்கள் திட்டம் போட்டுக் கொண்டு வேலை செய்தார்கள். பூரண தேசபக்தர்கள் ஆனபடியால், அவர்களுக்குத் தாய்மொழிப் பற்று இருந்தது. ஆனால் அதுவரையில் அரசியல் காரியங்கள் எல்லாம் ஆங்கில பாஷையிலேயே நடந்து வந்தபடியால் தமிழை முன்னணிக்குக் கொண்டுவருவது சுலபமான காரியமாயில்லை. தமிழில் சிலர் பேசவும் எழுதவும் அப்போது ஆரம்பித்திருந்த போதிலும் கொச்சைத் தமிழில் ஏதோ காமா சோமாவென்று காரியத்தை ஒப்பேற்றுவதாகவே கருதப்பட்டு வந்தது.

ஸ்ரீ திரு. வி. கலியாணசுந்தர முதலியார் தமிழ்நாட்டு அரசியலில் பிரவேசித்த பிறகு தான், தமிழ் மொழி சுய மதிப்புடன் தலை நிமிர்ந்து நிற்கத் தொடங்கியது.

''தேசபக்தன்'' பத்திரிகையில் தூய செந்தமிழ் நடையில் அவர் எழுதியதோடில்லை; பத்திரிகையில் எழுதுவது போலவே, பொதுக் கூட்டங்களிலும் பேசினார். அவருடைய சொற்பொழிவைச் சுருக்கெழுத்தில் எடுத்துப் பார்த்தால், ''தேசபக்தன்'' தலையங்கம் மாதிரியே இருக்கும். சொல்லமைப்பு, வாக்கிய அமைப்பு எல்லாம் அப்படியே அச்சாக இருக்கும். அந்தந்த இடத்தில் கால் புள்ளி, அரைப் புள்ளி, முற்றுப் புள்ளி, வியப்புக் குறி, கேள்விக் குறி— இவைகளைப் போட்டுவிட்டால் போதும்.

இதனாலெல்லாம் தமிழ் நாட்டின் அரசியல் தலைவர்கள், தொண்டர்கள், அனைவருக்கும் ஸ்ரீ திரு. வி. கலியாணசுந்தர முதலியாரிடம் வேறு யாரிடமும் இல்லாத ஒரு தனி மதிப்பு ஏற்பட்டிருந்தது. காங்கிரஸ் காரியங்களில் பாஷை சம்பந்தமாக எந்தப் பிரச்னை வந்தாலும் ''திரு. வி. க.வைக் கேளுங்கள்!'' என்று சொல்வது வழக்கமாயிருந்தது.

தமிழ்நாட்டின் பிரபல காங்கிரஸ் தலைவர்கள் எல்லாரும் திரு. வி. க.விடம் வைத்திருந்த நன்மதிப்பை நான் அறிந்திருந்தேன். நானே ''தேச பக்தன்'' ''நவ சக்தி'' பத்திரிகைகளைப் படித்து அவரிடம் பயபக்தி கொண்டிருந்தேன். ஆனால் என்னுடைய பக்தியானது தூரத்திலேயே — துவஜ ஸ்தம்பத்தின் அடியிலேயே — நின்று செலுத்தக் கூடிய பக்தியாயிருந்தது. அருகில் செல்வதற்கு உரியவனாகவே என்னை நான் கருதவில்லை. ஆகையினாலேதான், டாக்டர் ராஜனுடைய கடிதத்தை உடனே நான் பயன்படுத்தவில்லை. ''நவசக்தி'' ஆசிரியர் எங்கே? நாம் எங்கே? அவருடைய தூய செந்தமிழ் நடை எங்கே? நம்முடைய சாமான்யத் தமிழ் எங்கே? — என்று எண்ணிச் சும்மா இருந்து விட்டேன்.

நான் சும்மா இருந்தாலும் விதி சும்மா இருக்கவில்லை. ஏதோ ஒரு மகாநாட்டுக்காகவோ, கமிட்டிக் கூட்டத்துக்காகவோ, திரு. வி. க. திருச்சிக்கு வந்தார். அச்சமயம் அவர் என்னை அழைத்து, ''உன்னைப் பற்றி டாக்டர் ராஜன் சொன்னார்'' என்றார். ''ஆமாம், கடிதம் கூடக் கொடுத்திருக்கிறார்'' என்றேன். ''இதுவரையில் தமிழில் ஏதாவது எழுதியிருக்கிறாயா?'' என்று கேட்டார். சில அச்சிட்ட துண்டுப் பிரசுரங்களைக் கொண்டு வந்து கொடுத்தேன். அவற்றில், மகாத்மா காந்தி கட்டுரை ஒன்றின் மொழிபெயர்ப்பைப் படித்துவிட்டு, ''தமிழ் நடை பிழையில்லாமல் இருக்கிறது'' என்றார். ''சென்னைக்குப் போய்க் கடிதம் எழுதுகிறேன்'' என்று சொல்லி விட்டுச் சென்றார்.

பிழை இல்லாமல் தமிழ் எழுதுவதாகச் சொன்னதை ஒரு பாராட்டுதலாக நான் கருதவில்லை. பின்னால்தான், திரு. வி. க.விடம் அந்தப் பாராட்டுதலைப் பெறுவது எவ்வளவு பெரிய காரியம் என்பதை அறிந்தேன். அப்போது, அவரிடமிருந்து கடிதம் வரும் என்பதாக நான் எதிர்பார்க்கவில்லை.

திடீரென்று ஒரு நாள் மாகாண காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீ என். ராமநாதனுக்கு ஒரு தபால் கார்டு வந்தது. அதில், ''திரு ரா. கி. யாண்டுள்ளார்? அவருக்கு 'நவசக்தி'யில் தொண்டாற்ற விருப்பமிருப்பின், இதுபோழ்து இவண் வரலாம்'' என்று திரு. வி. க. எழுதியிருந்தார்.

இரண்டே வாக்கியங்கள் கொண்ட இந்தக் கடிதம் எனக்கு எவ்வளவு பெருமையையும் குதூகலத்தையும் அளித்தது என்பதை இப்போது விவரிக்க முடியாது.

(10-8-43—கல்கி இதழ்)

அதுவரை வாரத்துக்கு ஓர் இதழாக வெளிவந்து கொண்டிருந்த ''நவசக்தி''யை ஒத்துழையாமைக் கட்சியின் பிரசாரத்துக்கென, வாரத்துக்கு மூன்று இதழ்களாக வெளியிட, அதன் ஆசிரியர் தீர்மானித்தார். அதற்குக் கூடுதலாய்த் துணை வேண்டியிருந்த காரணத்தினால்தான், அவர் கல்கியை உடனேயே வரும்படி கோரியது.

அதற்கிணங்க கல்கியும் நவசக்தியில் சேர்ந்தார். 20—10—23ல் நவசக்தியின்

சோர்வா?
பலவீனமா?



சாப்பிடுங்கள்


வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக்— விட்டமின்களும், இரும்புச் சத்தும், தாதுப்பொருட்களும் அடங்கிய பரிபூரண டானிக்



சில டானிக்குகளில் விட்டமின்கள் மட்டுமே உள்ளன. சிலவற்றில் தாதுச் சத்துக்களோ அல்லது இரும்புச் சத்தோதான் உள்ளன. வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக் பரிபூரணமானது. அதில் விட்டமின்களும், இரும்புச் சத்தும், தாதுச்சத்துக்களும் சம-சீராக இணைந்துள்ளன—

தினமும் உற்சாகமும், சக்தியும், வலிமையும் கொடுக்கிறது.

விட்டமின்கள் நிரம்பியது



வாட்டர்பரீஸ்
விட்டமின் டானிக்

சுறுசுறுப்பான ஆரோக்கியத்திற்கு
பரிபூரணமான டானிக்

Grant 9 TH

முதலாவது வாரம் மும்முறை இதழ் வெளியாயிற்று. ''அச்சமயம் ரா. கிருஷ்ணமூர்த்தி நவசக்தியின் ஆசிரியர் கூட்டத்தில் சேர்ந்தார்'' என்பதாக, ''திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்'' என்ற நூலில் அந்தத் தேதிக்கு நேரான பதிவில் காண்கிறது.

அவ்வாறு அந்தப் பத்திரிகையில் சேருவதற்காகச் சென்னைக்குப் போவதற்கு முன்னால், ஈரோட்டுக்குச் சென்று, தமது கதர் போர்டு வேலையை விடுத்து விட்டு, அங்கிருந்த தமது ஜாகையைக் கல்கி கலைக்க வேண்டியதாய் இருந்தது. அப்படியே கலைத்தான பிறகு, ஒரு நாள் இரவு, தமது உடைமைகள் எல்லாம் அடங்கிய ஒரு சிறு பெட்டியுடனும், படுக்கைச் சுருளுடனும், ஒரு ஜட்கா வண்டியில் ஏறி ஈரோடு ரயில்வே நிலையத்துக்குப் புறப்பட்டார்.

ஜட்கா வண்டிக் குதிரைகள் எல்லாமே இடக்குக்குப் பெயர் போனவை. ஈரோட்டுக் குதிரைகளோ தீவிர இடக்குவாதிகள் போலும்! கல்கி ஏறிய வண்டியில் பூட்டிய குதிரை, முன்னால் பத்தடி சென்றால், பின்னால் பதினைந்தடி ஜகா வாங்கிற்று. வண்டிக்காரன் அதை இருபதடி அடித்தான். அந்த இடக்குக் குதிரை சண்டிக் குதிரையாக மாறி, முன்னேயும் போகாமல் பின்னேயும் போகாமல் கால்களைப் பரப்பிக் கொண்டு நின்று விட்டது. அதைக் கண்ட கல்கி கால்நடையாகவே சென்று ரயிலைப் பிடிப்பதென்று தீர்மானித்தார். வண்டிக்காரன் எவ்வளவோ தடுத்தும் கேளாமல், ஒரே அடியாய்ப் பிடிவாதம் பிடித்து, ஒரு கையில் பெட்டியுடனும், இன்னொரு கையில் படுக்கையுடனும் கல்கி கீழே குதித்து விடுவிடுவென்று நடந்தார்.

ஆனால் அவர் நிலையத்தை எட்டுவதற்கு முன்னாலேயே அவர் பிடிக்க வேண்டிய ரயில் ஊதிக் கொண்டு போய்விட்டது.

ரயிலைத் தவறவிட்ட ஏமாற்றத்தில் அவர் அந்தச் சண்டிக் குதிரையைச் சபித்தார். ஆனால், அன்றிரவு ரயிலைத் தவறவிட்டதால், தமது வாழ்க்கையில் எப்பேர்ப்பட்ட மாறுதலுக்கு வழி உண்டாயிற்று என்பதைப் பின்னால் அறிந்ததும் அதை வாழ்த்தினார். அருவமான விதியேதான் அந்த அசுவ ரூபத்தில் வந்தது என்று எண்ணினார்.

அன்றிரவு ஜாகை திரும்பிய கல்கி மறுநாள் காலை ரயிலைப் பிடிப்பதற்காகப் புறப்பட்டார். இனி எந்தக் குதிரையையும் நம்பக் கூடாது என்ற முடிவுடன், மாட்டுவண்டியில் புறப்பட்டார். மாட்டை நம்பியது வீண் போகவில்லை. அவரை ஏற்றிக்கொள்வதற்காக ரயில் காத்துக் கொண்டிருந்தது.

ஒரு மூன்றும் வகுப்பு வண்டிக்குள் ஏறியவர் அப்படியே வியப்புற்று நின்றார். எதிரே ஓர் ஆசனத்தின் ஓரத்தில் புன்னகை தவழும் முகத்துடன் ராஜாஜி உட்கார்ந்திருந்தார். அவருக்குப் பக்கத்தில் அவருடைய மகள் என்று அவர் பின்னால் தெரிந்துகொண்ட லக்ஷ்மி உட்கார்ந்திருந்தாள்.

ஏதும் பேசாமல் கல்கி திகைத்து நின்றதைக் கண்டு ''எங்கே போகிறீர்கள்?'' என்று ராஜாஜி கேட்டார்.

''மதராசுக்கு'' என்றார் கல்கி.

''கதர் வேலையாகத்தானே?''

''இல்லை, கதர் போர்டு வேலையை விட்டு விட்டேன்.''

''கதர் வேலை எவ்வளவு உத்தமமானது! ஏன் அதை விட்டு விட்டீர்கள்? பட்டணத்துக்குப் போய் என்ன செய்யப் போகிறீர்கள்?''

''எழுதுவதில் எனக்கு ஆசை உண்டு. கொஞ்சம் எழுதியும் இருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். பத்திரிகைத் தொழிலில் இறங்கலாம் என்று போகிறேன்.''

''அப்படி லகுவாய் அதிலே இறங்கிவிட முடியுமா என்ன?''

''டாக்டர் ராஜன் மூலமாய் எனக்கு நவசக்தியில் வேலை கிடைத்திருக்கிறது.''

''அப்படியானால் சரி. கலியாணசுந்தர முதலியார் ரொம்ப நல்லவர். பத்திரிகையும் நன்றாய் நடத்துகிறார். உங்களுக்கு அங்கே வேலை செய்யப் பிடிக்கும். அவருக்கும் உங்களைப் பிடிக்கவே செய்யும். மளமளவென்று முன்னுக்கு வரணும்.''

''எல்லாம் உங்கள் ஆசீர்வாதம்.''

'' மதுவிலக்குப் பிரசாரத்துக்காக நானே ஒரு பத்திரிகை நடத்தலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். உங்களைக்கூட அதில் சேர்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தேன்.''

''அப்படியென்றால் முதலியாரிடம் சொல்லிவிட்டு, நேரே உங்கள் பத்திரிகையிலேயே சேர்ந்து கொள்ள வந்து விடுகிறேன்.''

''இந்த மாதிரி அவசரம்தானே கூடாது என்கிறது! நான் அதை ஆரம்பிக்கச் சில மாதங்களோ வருஷங்களோ கூட ஆகலாம். பெயரை மட்டும்தான் இப்போதைக்கு யோசித்து வைத்திருக்கிறேன்.''

''என்ன பெயரோ?''

''விமோசனம். மதுவை அறவே ஒழித்தால்தான் நாட்டுக்கு விமோ

சனம் உண்டு என்று தொனிக்கும்படியாய் அப்படி வைத்திருக்கிறேன்.''

''ரொம்பப் பொருத்தமான பெயர்தான். நீங்கள் அதை எப்போது ஆரம்பித்தாலும் சரி, நான் ஓடி வந்து விடுகிறேன்.''

கல்கியைக் கனிவுடன் ராஜாஜி பார்த்துப் புன்னகை செய்தார்.

சங்கரி ஜுர்க்கம் நிலையம் வந்ததும் ராஜாஜியும் மகளும் அங்கே இறங்கிக் கொண்டார்கள். அவர்களுடைய சாமான்களை இறக்கி வைப்பதில் கல்கி உதவி செய்துவிட்டுத் தலைவரிடம் கை கூப்பி விடைபெற்றுக் கொண்டு ரயிலில் ஏறிக்கொண்டார். ரயிலும் நகர்ந்தது. அப்போது ராஜாஜியை விட்டுப் பிரிந்து சென்று கொண்டிருந்தாலும், மீண்டும் மீண்டும் அவரைச் சந்திப்போம், அவருடன் ஓரே வாழ்க்கை நெறியில் பிரயாணம் செய்வோம் என்று மனத்தில் தோன்றியது. அதுவே ஓர் ஆசைக் குரலாய் எழுந்து, ரயிலோசையுடன் கலந்து சென்னை வரை ஒலித்துக் கொண்டே இருந்தது.

(ஈரோட்டிலிருந்து தொடங்கும் பகுதிக்கு ஆதாரம், கல்கியின் ''பாங்கர் விநாயக ராவ்'' நூலில் ஆசிரியர் முகவுரை.)

(தொடரும்)

வட்ட மேஜை

கல்கியில் அமரர் ராஜாஜி அவர்கள் பெர்மிட்-லைசென்ஸ் முறைகளே லஞ்ச லாவண்யங்களுக்கு அடிப்படை என்று எழுதியதைப் புரியாமல் சிறு வயதில் அவரை ஒருத்ததுண்டு. பெர்மிட்-லைசென்ஸ் முறை ஏதுமில்லாவிட்டால் ஓர் ஒழுங்கு முறை நிலவிடல் அரிது என்ற அடிப்படைப் பொருளை வைத்து எண்ணினேன்.

ஆனால் வயதும் அறிவும் சமுதாயத்திடை ஒன்றவேண்டிய அவசியமும், இன்றைய அரசியல் போக்கும் அன்னாரது கருத்தின் வலிவினை எனக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன. எதிர்கால ஞான நோக்கே அவரது தனிச்சிறப்பு.

எனது அநுபவம்: படித்த பட்டதாரி; விவசாயம் தொழில். (அரசாங்கத்தில் அந்தஸ்துள்ள பதவி — குறிப்பிட விரும்பவில்லை.) யூரியா பெர்மிட் விஷயத்தில் எவ்வளவு ஒழுங்கீனங்கள் உள்ளன என்பதை ஒவ்வொரு விவசாயியும் அறிந்த ஒன்றே. அளவுக்கு அதிகமாக எந்த விவசாயியும் பயன்படுத்த மாட்டான். யூரியா என்பது தின்பண்டமா? பெர்மிட் வந்ததால் அன்று ரூ. 54.50க்கு விற்ற யூரியாவை எங்கள் ஊரில் விவசாய அலுவலின் துணையோடு வியாபாரிகள் ரூ. 125.00க்கு விற்றனர். இன்றும் ரூ. 104.50 விலை என்றால் ரூ.145-க்குக் குறையாமல் கள்ள மார்க்கெட் நிலவுகிறது. யூரியா அவசியமான பொருள். பெர்மிட் அவசியமில்லை என்பது என் கருத்து. அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைமையை பெர்மிட் முறை ஏற்படுத்துகிறது.

மற்றொன்று: கல்கியில் 'விமலா ரமணி' எழுதிய போட்டிக் கதையில் இந்தியில் லேக் என்றால் 'ஏரி' என்று எழுதியுள்ளார். லேக் என்பது ஆங்கில வார்த்தை அல்லவா?

1-11-74, குடியாத்தம் நா. கருணாமூர்த்தி

''வாழ்க்கை வரலாறு'' இலக்கியத்தில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் கந்தாவின் ''போனனியின் புதல்வர்'' படைப்பு முதன்மை ஸ்தானம் பெறுகிறது.

வாழ்க்கை இலக்கிய வரலாறுகள் சாதாரணமாக ஒரே மிகையாகவும் அமிதமாகவும் அமைவதும். அதற்கு மாறாக கந்தா மிகுந்த பிரயாசை எடுத்துக் கோவையாகவும் ஆதாரத்துடனும் அதிகாரபூர்வமாகவும் ஆணித்தரமாகவும் எளிய கருத்துச் செறிவுடன் எழுதி வருகிறார்.

இந்த வாரம் பிரத்தியேகமாக, எனக்குக் கண்களில் நீர்முட்டிவிட்டது. சகோதரர்கள் சந்தித்துக் கொண்ட விதமும் அவர்கள் பரிமாறிக்கொண்ட ரத்த பாசமும் என்னை நெகிழ வைத்து விட்டன.

நான் கல்கிதாசன். என்னை உருவாக்கியவர் அவர். அவருடைய வரலாற்றை ஆங்கில இலக்கியத்துக்குச் சமமாகப் படைத்து வருவது பற்றி எனக்கு அளவிலா மகிழ்ச்சி. நம்ப மாட்டீர்கள். நான் பாராயணமே செய்து வருகிறேன்.


1-11-74, புதுடில்லி-21 கப்புடு

டாக்டர் ராதாகிருஷ்ணன், அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யர், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், டாக்டர் ஏ. ராமசாமி முதலியார், டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார் ரஸிகமணி டி. கே. சி., ஆர். கே. ஷண்முகம் செட்டியார், எஸ். சத்தியமூர்த்தி போன்ற பலப் பல பெரியோர்களை நாட்டுப் பணிக்கு அனுப்பி வைத்த பெருமை சென்னை கிறிஸ்தவக் கல்லூரிக்கு உண்டு. 140 ஆண்டுகளுக்குமுன் தொடங்கப்பெற்ற இக்கல்லூரி தொடர்ந்து பலப் பல அறிஞர்களை ஈந்து வருகிறது. தற்போது மிக கெட்டிக்காரர்களான மாணவர்களுக்கு உயர்தரப் படிப்புக்கான உபகாரச் சம்பளம் வழங்கவும், கல்லூரிப் பேராசிரியர்களின் ஆராய்ச்சிகளுக்குப் பண உதவி செய்யவும் ஒரு நிரந்தர நிதி உருவாக்க இந்தக் கல்லூரி யோசித்து வருகிறது.

இதை உத்தேசித்து நவம்பர் 30ந் தேதி திரு எம். எஸ். விசுவநாதனின் மெல்லிசை நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். பல்கலைக் கழக நூற்றாண்டு அரங்கத்தில் நடக்கும் இந்த நிகழ்ச்சிக்கு டிக்கெட் வாங்குவதன் மூலமோ அல்லது நன்கொடை வழங்குவதன் மூலமோ நாங்கள் ஏற்ற பணி சிறக்கச் செய்யக் கோருகிறோம்.

சென்னை—59 வி. எஸ். சங்கர்

11-11-74 தலைவர், பெற்றோர் ஆலோசனைக் குழு, சென்னை கிறிஸ்துவக் கல்லூரி.


மிகமென்மையான பிளேடு-களையும், விண்வெளி பிளேடு-களையும் உபயோகித்துப் பார்த்தேன்.
கத்திமுனைபோல கூரான பிளேடுகளையும் விதவித-மான விநோத உலோகங் களடங்கிய பிளேடுகளையும் உபயோகித்துப் பார்த்தேன்.
வெட்டுக்காயங்களும், கீறல்களும், எரிச்சலும்தான் மிச்சம்.
கடைசியாக சில்வர் ப்ரின்ஸை உபயோகித்துப் பார்த்தேன். முகக்ஷவரம் மழமழப்பாகவும், சுத்தமாகவும் இருந்தது... நிறைவேற்றமுடியாத உறுதி மொழிகளல்ல.
சில்வர் ப்ரின்ஸ்
சுத்தமான, மழமழப்பான க்ஷவரத்தைத் தரும்...
உறுதிமொழியை நிறைவேற்றிடும் பிளேடு.
SILVER PRINCE
STAINLESS
சில்வர் ப்ரின்ஸ்–சுகமான க்ஷவரம்...சோகுசான க்ஷவரம்
நீங்கள் சில்வர் ப்ரின்ஸ் கொண்டு மழமழப்பாகவும், சுத்தமாகவும் க்ஷவரம் செய்து கொள்ளலாம். ஏனெனில் இறக்குமதி-யான மிகச் சிறந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீலில். இந்தியாவில் அதி முன்னேற்ற-
SILVER
PRINCE
STAINLESS
மான தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப் படுகிறது சில்வர் ப்ரின்ஸ். நீங்களும் சுகமான க்ஷவரத்தைப் பெறுகிறீர்கள். எனவேதான் சில்வர் ப்ரின்ஸ முகக்ஷவரத்தை சுகக்ஷவரம் என்கிறோம்.
Gant.S.TM


101
ஒற்றர் ஜாக்கிரதை
கதை: நாடோடி
சித்திரம்: ராஜு
ஜெர்மன் பத்திரிகையின் டோக்கியோ நிருபர் சார்ஜ், ஒரு ஸ்திரீ லோலன். மது, மங்கை என்று அவன் காலத்தைச் செலவிட்டதால்....
கம் ஆன், டார்லிங்!
... அவனை ஒரு ருஷ்ய ஒற்றன் என்று யாரும் சந்தேகிக்கவில்லை!
ஜப்பான் நிச்சயமாக ருஷ்யாவைத் தாக்காது. அவர்கள் நோக்கமெல்லாம் சீனாவும் இதர ஆசிய நாடுகளும் தான்.
ரகசிய ரேடியோத் தகவலை அறிந்த ஸ்டாலின்....
சார்ஜ் ருஷ்யாவைக் காப்பாற்றி விட்டான்!
ஜப்பான் நம்மைத் தாக்காது என்பதால் கிழக்கு சைபீரியாவில் உள்ள இருபது லட்சம் துருப்புக்களை நாம் மேற்கு முனையில் முன்னேறி வரும் ஜெர்மானியரைத் தடுத்து நிறுத்தப் பயன் படுத்தலாம். மாஸ்கோவைக் காப்பாற்றி விடலாம்!
டோக்கியோவில் சார்ஜின் உதவியாளர்:
கிளாசன் – ஜெர்மானியன். ரகசிய ரேடியோத் தொடர்பில் நிபுணன்.
ஓஸாக்கி – ஜப்பானியன். பத்திரிகை நிருபர். ஜாப் பிரதமருக்கு உறவு. பல ரகசியங்களை அறிந்து வந்து கூறினான்.
ஜெர்மன் தூதராலயத்திலும் சார்ஜுக்குப் பல நண்பர்கள். ஒற்றன் என சந்தேகியாமல் பார்ட்டிகளில் சார்ஜிடம் பேசினார்கள். எல்லாத் தகவல்களும் ருஷ்யாவுக்குப் பறந்தன.

''ராமகப்பு! இனிமேலும் உன் கல்யாணத்தைத் தள்ளிப் போடுவது உசிதமில்லே. இந்த வருடம் நடத்தியே ஆகவேண்டும். நமக்கு அவசரம் இல்லே யென்றாலும், பெண்களைப் பெற்றவர்கள் பொறுமையாக இருப்பார்களா? என் அண்ணாவும், உன் அத்தையும் என்னை நெருக்குகிறார்கள். பிரேமாவா, கௌரியா என்பதைத் திட்ட வட்டமாக யோசித்துச் சொல்லிவிடு, அப்பா'' என்று அலமேலு தன் மகனிடம் கேட்டபோது, 'பிரேமாவைத்தானம்மா பிடித்திருக்கிறது' என்று சொல்ல மாட்டானா என்கிற துடிப்பும், 'கௌரியைப் பிடித்திருக்கிறது' என்று சொல்லாமல் இருக்க வேண்டுமே என்கிற தவிப்பும் அவள் குரலில் கலந்திருந்தன.

அலமேலுவின் அண்ணா பெண் பிரேமா. கௌரியோ அவளுடைய கணவரின் தங்கையின் மகள்.

அலமேலுவுக்குப் பிறந்த வீட்டில் சம்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்கிற ஆசை. ஆனால் பிரேமா படித்தவள். நாகரிகமான போக்கு உடையவள். கௌரியோ படித்திருந்தும் அடக்கமாக இருப்பவள். இந்த வித்தியாசம் தன் எண்ணத்தை ஈடேறாதபடிக்குச் செய்து விடுமோ என்று பயந்தாள் அலமேலு.


''பிரேமாவா, கௌரியா? சொல்லிவிடு'' என்று அவள் கேட்டதும், ''அம்மா! அவர்களில் எந்த ஒருத்திமீதும் எனக்கு அளவுக்கு அதிகமான விருப்பமோ, அனாவசியமான வெறுப்போ கிடையாது. ஆனால் ஒன்று மட்டும் சொல்கிறேன். ஊதாரிச் செலவுகளெல்லாம் செய்யாத, நம்போன்ற நடுத்தரக் குடும்பத்துக்கு ஏற்றவளாக எவள் இருக்கிறாளோ, அவளையே நீ மருமகளாகத் தேர்ந்தெடுத்துவிடு'' என்று ராமகப்பு சொன்னதும் அமலேலு கொஞ்சம் அயர்ந்துதான் போனாள்.

அவர்கள் இருவரில் இரண்டாமவளுக்குத்தான் அவன் சொல்லும் குணம் இருக்கக்கூடும் என்பதை அவர்களைப் பார்த்தவுடனேயே யாரும் சொல்லி விடுவார்களே!

அலமேலுவின் மனம் அலைபாய்ந்தது. சாதாரண அந்தஸ்துள்ள நாத்தனாரைச் சம்பந்தியாக்கிக்கொள்ள அவள் கௌரவம் இடம் தரவில்லை. பிரேமாவிடம் அந்தரங்கமாகப் பேசி, ராமகப்புவின் விருப்பத்துக்கேற்ற குணமுள்ளவள் அவள்தான் என்கிற எண்ணம் அவன் மனத்தில் உண்டாகும்படியாக அவளை நடந்துகொள்ளச் சொல்ல வேண்டும் என்று நினைத்தவளுக்குத் தெய்வாதீனமாக எந்த விதமான முயற்சியும் செய்யாமலேயே நல்லதொரு தீர்ப்புக் கிடைத்துவிட்டது.

''ராமகப்பு! அவ்விரு பெண்களில், நீ விரும்பும் குணமுடையவள் யார் என்பதைத் தெரிந்துகொள்ள ஒரு...'' என்று அவள் முடிக்கு முன், ''பரீட்சை வைக்கப் போகிறியா?'' என்று கேட்டுச் சிரித்தான் ராமகப்பு.

''அப்படித்தான் வைத்துக்கொள்ளேன். நாளைக்கு ஒருத்தி இங்கே வருவாள். அதற்கு மறுநாள் ஒருத்தி வருவாள். இந்த இரண்டு நாட்களும் நீ இங்கேயே இருந்து




எட்டு வருஷம் திறம்படச் செயலாற்றினான் சார்ஜ். ஒரு நாள் மேஜர் ஹிராகோ அழகி தியாமியை அழைத்தார்.
யாரோ தகவல்களை ரேடியோ மூலம் மாஸ்கோவுக்கு அனுப்புகிறார்கள். சார்ஜ் மீது சந்தேகம். உறுதிப் படுத்திக் கொள்ள உன் உதவி தேவை!
ஹோட்டல் ஜின்ஸானில் எழிலரசி தியாமியின் நடனம்...
என்ன அழகு! இவளை அடையாமல் விட மாட்டேன்!
பல நாள் முயற்சிக்குப் பிறகு சார்ஜ் வெற்றி கண்டான். அவளது மேக்-அப் அறையில்..
தியாமி!
சார்ஜ்! உனது கடற்கரை வீட்டுக்குப் போவோம்!
மேக்-அப் அறையை விட்டு வெளியேறும் போது ஓட்டல் பணியாள் சார்ஜ் மீது தவறி இடிப்பது போல் பாசாங்கு செய்ய, ஒரு கடிதம் கை மாறுகிறது.
ஸாரி!
கடற்கரை வீட்டில்... ஒஸாக்கி அனுப்பிய கடிதத்தைப் படிக்கிறான் சார்ஜ்.
என்ன கடிதம்?
உனக்கு ஒன்றுமில்லை!
அந்தக் கடிதம்:
ஜப்பான் பேர்ல் ஹார்பரைத் தாக்கப் போகிறது!
— ஒஸாக்கி
கடிதத்தைச் சுக்குச் சுக்காகக் கிழித்து ஜன்னல் வழியே எறிகிறான் சார்ஜ்.
டார்லிங்! அம்மா என்னைக் காணாமல் தவிப்பாள். காலை தான் வீடு திரும்புவேன் என்று ஃபோன் செய்து விடுகிறேன்.
வரவேற்பு அறையில் ஃபோன் இருக்கிறது. பேசி விட்டுச் சீக்கிரம் வா. என்னைக் காக்க வைக்காதே!

அவர்களைக் கவனித்து உன் கருத்தைச் சொல்ல வேண்டும், என்ன?'' என்றாள்.

''ஓகே!'' என்று தலையாட்டினான் ராமசுப்பு.

முதலில் கௌரியை அழைத்துக்கொண்டு வந்தாள் அலமேலு.

மூவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தபொழுது காய்கறிக்காரியின் கூவல் கேட்டது. அலமேலு அவளைக் கூப்பிட்டுக் கூடையை இறக்கி வைக்கச் சொன்னாள்.

''கௌரி! விலைபேசி முட்டைகோஸ் ஒரு கிலோ வாங்கும்மா. நான் உள்ளே போய்ச் சில்லறை எடுத்துக் கொண்டு வருகிறேன்'' என்று சொன்ன அலமேலு, உள்ளே போவதற்கு முன், மகனை ஜாடையாகப் பார்க்கத் தவறவில்லை.

பீரோவைத் திறந்து பணத்தை எடுத்துக் கொண்டு அவள் திரும்புவதற்குள் கௌரியே உள்ளே வந்து விட்டாள், இரண்டு முட்டைகோஸ்களைத் தூக்கிக்கொண்டு.

''வாங்கிவிட்டாயா கௌரி? அவள் என்ன விலை சொன்னாள்? நீ என்ன கேட்டாய்?'' என்று விசாரித்தாள்.



''கிலோ ஒரு ரூபாய் என்று சொன்னாள். இருபது பைசா குறைத்துக் கேட்டால் கொடுத்திருப்பாள். அவளிடம் பேரம் எதற்கு என்று பேசாமல் வாங்கிக் கொண்டு வந்து விட்டேன்'' என்று அவள் சொன்னதும், ஆர்த்தத்துடன் மகனைப் பார்த்தாள் அலமேலு. அவனும் முறுவலித்தான்.

அன்று மாலை ராமசுப்பு கௌரியை அவள் வீட்டில் கொண்டுபோய் விட்டு விட்டு வந்ததும், அவனிடம் அவளைப் பற்றிப் பேச அலமேலு வாயெடுத்தபோது, ''உஸ்ஸ்... முழுப் பரீட்சையும் முடிவதற்குள் எதுவும் பேசக் கூடாது'' என்று உதட்டில் விரலை வைத்து விளையாட்டாக எச்சரித்தான் ராமசுப்பு.

''அதுவும் சரிதான்'' என்று ஒப்புக்கொண்டாள் அலமேலு.

மறுநாள் பிரேமா வந்தாள். அதன்பின் மற்ற நிகழ்ச்சிகளெல்லாம் முந்தைய தினத்தைப் போலவேதான் நடந்தன. ஒரே ஒரு சின்ன மாற்றம். முதல் நாள் காய்கறிக்காரி; மறுநாளோ சாத்துக்குடிப் பழக்காரன். இன்னொரு வித்தியாசம், முதல் நாள் அலமேலு பீரோவைத் திறந்து பணத்தை எடுத்துக் கொண்டு வருவதற்குள், கௌரி காய்கறியுடன் வந்து விட்டாள். இன்றோ அலமேலு பணத்துடன் திரும்பி வந்து உட்கார்ந்து பதினைந்து நிமிடங்கள் ஆகியும்கூட வியாபாரம் முடியவில்லை. ஒரே பிடிவாதமாகப் பேரம் பேசினாள் பிரேமா. ராமசுப்பு பிரமிப்புடன் அவளைக் கவனித்துக் கொண்டிருந்ததைப் பார்த்த அலமேலுவுக்கு வயிற்றில் பால் வார்த்தது போலிருந்தது.

அன்று மாலை பிரேமாவை அழைத்துக் கொண்டு போய் அவள் வீட்டில் விட்டு விட்டுத் திரும்பி வந்த ராமசுப்புவை ஆர்வத்துடன் நோக்கினாள் அலமேலு.

''அம்மா! உன் மூளைக்கு நோபல் பரிசுதான் கொடுக்க வேண்டும்'' என்று புன்னகையுடன் ஆரம்பித்தான் ராமசுப்பு.

''அப்படி என்னடா செய்து விட்டேன் நான்?'' என்று பெருமிதத்துடன் கேட்டாள் அலமேலு.

''சாதாரணக் காரியமா செய்திருக்கிறாய் நீ? எத்தனை பெரிய பிரச்னையை எவ்வளவு சுலபமாகத் தீர்த்து வைத்து விட்டாய்! அம்மா! உண்மையிலேயே சொல்கிறேன். அவ்விருவரில் யாரை மணந்து கொள்வது என்று புரியாமல் மனத்துக்குள்ளேயே நான் ரொம்பவும் குழம்பித்தான் போயிருந்தேன். மேலெழுந்தவாரியாகப் பார்த்து ஒரு முடிவுக்கு வந்துவிடக் கூடாதே என்கிற பயம் வேறு எனக்கு. இப்போது எந்தவிதக் கலக்கத்துக்கும் இடமின்றி, என் மனத்துக்கேற்றபடி, நம்போன்ற நடுத்தரக் குடும்பத்துக்கு அனுசரணையாக, அதிக செலவு செய்யும் மனப்போக்கு இல்லாதவள் யார் என்பதை எத்தனை அழகாகக் கண்டுபிடித்துக் கொடுத்து விட்டாய் நீ!'' என்று அம்மாவுக்கு ஒரேயடியாகப் புகழ்மாலை சூட்டினான் ராமசுப்பு.

ஆனந்த மிகுதியில் ஆகாயத்தில் பறந்தது அலமேலுவின் உள்ளம். ''ஏதோ வேலையும்

வெள்ளையா, கறுப்பா ?



பழைய காலத்து அரசன் ஒருவனது பெண்ணை ஓர் ஏழை இளைஞன் காதலித்தான். ராஜகுமாரியும் அவனைக் காதலித்தாள். ஆனால், அரசனுக்குத் தன் பெண்ணை ஒரு சாதாரண மனிதனுக்குக் கொடுக்க இஷ்டமில்லை. எனினும் தன் பெண்ணைத் திருப்தி செய்ய விரும்பினான். அதற்காக அவன் ஒரு பரீட்சை வைத்தான்.

ராஜ சபையில் ஒரே கூட்டம். அரசன், ஒரே மாதிரியான இரு பெட்டிகளைக் காட்டினான். "ஒன்றில் ஒரு வெள்ளை மணியும் மற்றொன்றில் ஒரு கறுப்பு மணியும் வைத்திருக்கிறேன். நீ உனக்குத் தோன்றிய பெட்டியைத் திற. அதில் வெள்ளை மணி இருந்தால் என் பெண்ணைக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன். கறுப்பு மணி இருந்தால் உன்னை உடனே சிரச்சேதம் செய்துவிடுவேன்" என்று இளைஞனைப் பார்த்துக் கூறினான்.

அரசன் இரண்டு பெட்டிகளுக்குள்ளும் கறுப்பு மணிகளையே வைத்திருந்தான். அதைத் தெரிந்து கொண்ட ராஜகுமாரி தன் காதலனுக்கு ஏதோ சைகை செய்தாள்.

இளைஞன் புரிந்துகொண்டான். கடவுளை வணங்கி ஒரு பெட்டியைத் திறந்தான். அதிலிருந்த மணியை யார் கண்ணிலும் படாதபடி உள்ளங் கையால் மறைத்து எடுத்தான். கையை மூடியபடியே வாய்ப் பக்கம் கொண்டு போனான். மணியை வாய்க்குள் போட்டு விழுங்கி விட்டான்.

அரசனும், சபையினரும் இந்த எதிர்பாராத செய்கையைக் கண்டு திகைத்தார்கள்.

"அரசர் பெருமானே! மற்றப் பெட்டியைத் திறந்து பாருங்கள்!" என்றான் இளைஞன்.

அரசன் அதைத் திறந்தபோது அதில் கறுப்பு மணி இருந்தது.

"ஆகையால், நான் விழுங்கியது வெள்ளை மணி" என்று இளைஞன் கூறினான்.

அரசன் இதைக் கேட்டு விழித்தான். அவன் "இல்லை, இல்லை. நான் இரண்டு பெட்டிகளிலும் கறுப்பு மணியைத்தான் போட்டேன்" என்று ஒப்புக் கொள்வதற்கில்லையல்லவா?

போதும் கூடி வந்தது. எனக்கும் யோசனை தோன்றியது. அவ்வளவுதான்'' என்றவள் ''ஆமாம், பிரேமாவை விட்டு விட்டு வந்த போதே, அவள் அப்பா, அதுதான் உன் மாமாவிடம் உன் விருப்பத்தைச் சொல்லி விட்டு வந்திருப்பதுதானே!'' என்றாள்.

''நானும்கூடச் சொல்லத்தான் நினைத்தேன். ஆனால் எனக்கென்னவோ வாய் வரவில்லை. பேசாமல் வந்து விட்டேன்'' என்று அவன் சொன்னதும், அவளுக்குச் சிரிப்பு வந்தது.

''என்னடா ராமகப்பு, பெண் பிள்ளையைப் போல் வெட்கப்படுகிறாயே! இதில் என்ன தயக்கம்?'' என்றாள்.

''அப்படியில்லை அம்மா. இப்போ அடுத்தாற்போல் கௌரியின் வீட்டுக்குப் போய் அத்தையிடம் சொல்லிவிட்டுத்தானே வந்திருக்கிறேன். கௌரியை மணக்கச் சம்மதம் என்று நான் சொன்னதும் அவர்களுக்கெல்லாம் ஏக சந்தோஷம். அப்படியில்லாமல் மணக்க முடியாது என்கிற செய்தியை முகத்துக்கு எதிராகச் சொல்லக் கொஞ்சம் தயக்கமாகத்தானே இருக்கிறது?'' என்று அவன் சொன்னதும், அலமேலுவுக்கு நெஞ்சை அடைத்தது. ''டேய் ராமகப்பு, நீ....நீ... என்னடா சொல்கிறாய்?'' என்று திகைப்புடன் கேட்டாள்.

''ஓ. கடைசியாக நான் இந்த முடிவெடுத்ததற்கு முக்கியமான காரணத்தை உன்னிடம் சொல்லவே யில்லையல்லவா?'' என்று ஆரம்பித்த ராமகப்பு, தொடர்ந்தான்: ''நான் நேற்று கௌரியை அவள் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனேனல்லவா? அப்போது, வழியில் உள்ள ஒரு பெரியஹோட்டலுக்குக் காப்பி சாப்பிட அவளைக் கூப்பிட்டேன். அவளும் வந்தாள். காப்பி சாப்பிட்டானதும் பில்லை ஒரு பீங்கான் தட்டில் வைத்தான் சர்வர். நான் ரூபாயை அதில் வைக்கப் போனதும், 'சட்'டென்று அதைக் கையில் எடுத்துக்கொண்ட கௌரி, 'பில்லையும் பணத்தையும் நீங்களே கொண்டு போய்க் கௌண்டரில் கொடுத்துவிடுங்கள்' என்றாள். 'கௌரி! நீயா இப்படிச் சொல்கிறாய்? காலையில் காய்கறிக்காரியிடம் நீ....' என்று நான் இழுத்ததை அவள் புரிந்து கொண்டு, 'அவள் காய்கறி விற்கும் காசில் அவள் குடும்பம் நடக்கிறது. குழந்தைகள் வளர்கின்றன. மேலும் இருபது பைசா நமக்குப் பெரிய இழப்பில்லை. ஆனால் இங்கே நாம் காப்பி சாப்பிட்டேயாக வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. மேலும் நாம் கேட்பதைக் கொடுப்பதற்காகத் தான் இங்கே சர்வர் சம்பளம் வாங்குகிறான். இதில் 'டிப்ஸ்' வேறு எதற்கு? அதுவும் தவிர இப்படிப்பட்ட ஆடம்பரமெல்லாம் நம்மைப் போன்றவர்களுக்குக் கட்டுப்படியாகுமா?' என்றாள்.

''இன்று பிரேமாவையும் அதே ஹோட்டலுக்கு அழைத்துக் கொண்டு போனேன். நேற்று மாதிரியே காப்பி குடித்தோம். சர்வர் பீங்கான் தட்டில் பில்லை வைத்தான். காலையில் சாத்துக்குடிக்காரனிடம் நாலணாவுக்குப் பேரம் பேசினவள் இப்போது 'டிப்ஸ்' கொடுத்தால் என்ன சொல்வாளோ என்று பில்லை நான் கையில் எடுத்ததும், 'வெடுக்' கென்று அதைப் பறித்து, மீண்டும் தட்டின் மீது வைத்த பிரேமா, 'அத்தான்! இந்த மாதிரி இடங்களில் நமக்குக் கௌரவம்தான் முக்கியம். பேசாமல் ஒரு ரூபாயைத் தட்டு மீது வைத்துவிட்டு வாருங்கள். நம் சிக்கனத்தை யெல்லாம் வாசலில் விற்றுக்கொண்டு வருகிறார்களே, அவர்களிடம்தான் காட்ட வேண்டுமே தவிர, இங்கு இல்லை' என்றாள்.

''அம்மா! அதைக் கேட்டதும் எனக்கு எப்படி ஆகிவிட்டது தெரியுமா? நான் உடனேயே ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். என் முடிவு சரிதானே?''

ராமகப்புவுக்கு அலமேலு என்ன பதில் சொல்வாள் ?



ஒரு மெய் சிலிர்க்கும் அனுபவம்!

“வாழ்க்கையில் யாருமே ஏற்றத்தைத் தான் விரும்புவார்கள். இறக்கத்தை விரும்பவே மாட்டார்கள். ஆனால் ஏற்றத்தைப் போலவே இறக்கமும் மகிழ்ச்சியைத் தரும் நிலைமை எங்காவது உண்டா என்று கேட்டால், 'பாரா ட்ரூப் டிரெயினிங்'கில் உண்டு என்று உறுதியாகச் சொல்வேன்'' என்று மிஸ் கே. கௌசல்யா உற்சாகமாகக் கூறினாள். விமானத்திலிருந்து குதிக்கும் பயிற்சியில் சேர (Para Troop Training) பாண்டிச்சேரியிலிருந்தும், தமிழ் நாட்டிலிருந்தும் முப்பத்தைந்து என். ஸி. ஸி. பயிற்சியாளர்கள் விண்ணப்பித்துக் கொண்டனர். இவர்களில், மாணவி குமாரி கே. கௌசல்யாவும், ஐந்து மாணவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுக்கு ஆக்ராவில் ஐந்து வார காலத்துக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

''பயிற்சிக் காலம் கொஞ்சமாகத் தோன்றினாலும் மிகவும் கடினமானது. தினசரி பன்னிரண்டு கிலோமீட்டர் ஓட வேண்டும். பிறகு விமானத்திலிருந்து அதிவிரைவில் இறங்குவதற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இறங்கிய வேகத்திலேயே உடனே செயல்பட்டு பாராசூட்டை வான வீதியிலேயே திறந்து கொள்ளச் செய்ய வேண்டும். மிகவும் சிரமமான காரியம். திறந்துகொண்ட பாராசூட்டுடன் கீழே இறங்குவதுதான். ஆயிரத்து ஐந்நூறு அடிகள் இறங்க வேண்டும்.''

''பாராசூட்டில் இறங்கும் முதல் அனுபவம் எப்படி இருந்ததென்று கூறமுடியுமா?''

''ஒரே 'த்ரில்'லா யிருந்தது. மேனி முழுவதும் ஒரே சிலிர்ப்புத்தான். இப்போதுகூட அதை நினைத்தால் எனக்கு உடம்பு சிலிர்க்கிறது!''

திருச்சி சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி பெண்கள் கல்லூரியின் பி.ஏ. இறுதியாண்டு மாணவியான குமாரி கௌசல்யா 'ஸ்வீட் நைன்டீன்' காலகட்டத்தில் இருப்பவர். உமன்ஸ் லிப் என்று பிரமாதப்படுத்துகிறதே இன்று அமெரிக்காவில், அதை. ''எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை காண்'' என்று பாரதி அன்றே பாடிவிட்டார். அதைப் பல விதங்களில் மெய்ப்பித்து வருகின்றனர் நமது பெண்கள்.

''இந்தப் பயிற்சியில் தேற எத்தனை முறைகள் பாராசூட்டிலிருந்து குதிக்க வேண்டும்?'' — என்று கேட்டேன்.

''ஐந்து தடவை பாராசூட்டிலிருந்து குதித்தால் போதும்!'' என்றார் கௌசல்யா.

''ஐந்து தடவையும் நீங்கள் அலுத்துக் கொள்ளாமல் குதித்தீர்களா?''

''அலுத்துக்கொள்வதா? நானா? நன்றாய்க் கேட்டீர்கள்! ஐம்பது தடவை குதிக்க வேண்டும் என்பதே என் ஆசை. மேலும் நேராகக் குதிப்பதற்குப் பதில் பனிச் 'சறுக்கல் போல் காற்றில் (Sky diving) தவழ்ந்து சென்று குதிக்க வேண்டும் என்று ரொம்ப ஆசைப்பட்டேன்!'' என்று உற்சாகத்துடன் சொன்னார் கௌசல்யா.

''உங்கள் பெற்றோர் இந்தப் பயிற்சிக்கு இலேசில் ஆதரவு தந்திருக்க மாட்டார்களே?'' என்று கேட்டேன்.


''என் தகப்பனார் ராணுவத்தில் சேவை புரிந்தவர். அம்மாவும் அப்பாவின் வழி நடப்பவர். ஆகவே, எனக்குப் 'பர்மிஷன்' மிகவும் சுலபமாகக் கிடைத்து விட்டது...''

கௌசல்யாவுடன் 'பாரா ட்ரூப் ட்ரெயினிங்'கில் பயிற்சி பெற்ற மற்றத் தமிழ்நாட்டு மாணவர்கள்: காப்டன் கே. சுரேந்திரன் (டாகூர் ஆர்ட்ஸ் காலேஜ், பாண்டிச்சேரி); கே. விஜயகுமார் (பி. எஸ். ஜி. கல்லூரி, கோவை); மேஜர் ஜான் டி பிரிட்டோ (லயோலா, சென்னை); சார்ஜண்ட் ஏ. பலராமன், (பிரஸிடென்ஸி காலேஜ், சென்னை); சார்ஜண்ட் கே. கணேசன் (அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்).

எத்தனையோ பெருமைகளைப் பெற்றிருக்கும் தஞ்சை ஜில்லாவுக்கு வடுவூரைச் சேர்ந்த குமாரி கௌசல்யா மேலும் பெருமை கூட்டியிருக்கிறார்.

— லோமாஸ்

புகைப்படம்: பி. வி. பதி



20. சங்கத்தின் தீர்மானம்

அன்றிரவு நளினிக்குத் துணையாகச்சென்ற சம்பத், அவளுடைய வீட்டையும் வீட்டைச் சுற்றியிருந்த தோட்டத்தையும், முன்னால் அமைந்திருந்த வெல்வெட் போன்ற புல் தரையையும் வீட்டின் அமைப்பையும் கண்டு பிரமித்தான். அன்றுதான் முதன் முதலாக அவளுடைய வீட்டுக்குச் சென்றான். அங்கு சென்ற பிறகுதான் பணத்தினால் ஒரு மனி தன் எந்த அளவுக்கு வசதியாகவும், படா டோபமாகவும், ரசனையாகவும் வாழ முடி யும் என்பதே அவனுக்குப் புரியலாயிற்று. அவனை வீட்டுக்குள் அழைத்துச் சென்று முன் பக்கத்தில் இருந்த வரவேற்பு அறையில் சோபாவில் அவள் அமரச் செய்தபோது அவனுடைய பரபரப்பு அதிகமாயிற்று. அறை யிலிருந்த ஸ்டீரியோகிராமைப் பாட வைத்து விட்டு நளினி வீட்டுக்குள் சென்றதும் சம்பத் ஆவலோடு எழுந்து அந்த அறையைச் சுற்றிப் பார்த்தான். வாழ்ந்தால் அப்படி ஒரு மாளிகையில் அம்மாதிரி சுகபோகங்களுடன் வாழ வேண்டும். நானூறு ரூபாய் வரும்படி யில் வாழ்வதைவிடச் செத்துத் தொலைக்க லாம் என்ற எண்ணம் எழுந்தது.

நளினி ஒரு டிரேயில் இரண்டு கண்ணாடித் தம்ளர்களில் பழரசம் கொண்டு வந்தாள். ஒரு தம்ளரைச் சம்பத்திடம் கொடுத்துவிட்டு மற்றொன்றைத் தான் எடுத்துக்கொண்டாள்.

''நீங்கள் எப்படிப் போவீர்கள்? பத்து மணிக்கு மேல் ஸிட்டி பஸ் இருக்குமா?'' என்று கேட்டாள்.

''ஸிட்டி பஸ் பதினொரு மணி வரை இருக் கும்'' என்று கூறியபடியே பழரசத்தை உறிஞ்சி னான், சம்பத். அதன் குளுமையும் ருசியும் அவ னைக் கவர்ந்தன. பானத்தின் ருசியிலிருந்து அது என்ன பழத்தின் ரசம் என்று அவனால் தெரிந்துகொள்ள முடியவில்லை. அதைப்பற்றிக் கேட்கவும் வெட்கமாக இருந்தது. முக்கால் அளவு குடித்துவிட்டுத் தம்ளரை டிரேயில் வைத்தான். முழுவதையும் குடிக்க வேண் டும் என்ற ஆசையில் தவித்தாலும், மீதம் வைப்பதுதான் நாகரிகம் என்று நினைத்தான்.

வாசலில் கார் சத்தம் கேட்டது. ''அப்பா வந்து விட்டார். கொஞ்சம் பொறுங்கள். காரிலேயே நீங்கள் போய்விடலாம்'' என்றாள் நளினி.

ராகவன், சோர்வுடன் வீட்டுக்குள் வந் தார். சம்பத்தை அவருக்கு அறிமுகப்படுத்தி னாள், நளினி.

''உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கி றேன், ஆவுடையப்ப பிள்ளை சொல்லியிருக் கிறார்'' என்றார் ராகவன்.

சம்பத், பெருமையால் பூரித்தான்.

''டிரைவர் இருக்கிறாரா? இவர் போக வேண்டும். எனக்குத் துணையாக வந்தார்'' என்றாள் நளினி.

''ஓ.... இருக்கிறானே, காரில் கொண்டு போய் விட்டு வரச்சொல்'' என்றார் ராகவன்.

அந்த இடத்துச் சூழ்நிலையும், அவனுக்குக் கிடைத்த மரியாதைகளும் அவனைத் திணற அடித்தன. சற்று நேரத்துக்குப் பிறகு படகு போன்ற 'கேடிலக்' காரில் அவன் சென்று கொண்டிருந்தான். அந்த மாதிரியான விலை உயர்ந்த காரில் செல்வோம் என்று அவன் கனவுகூடக் கண்டதில்லை. கார் மெத்தையின் சுகமும், காருக்குள்ளேயே அமைந்திருந்த ஏர்கண்டிஷன் சாதனமும், ஸ்டீரியோ ரேடி யோவும் அவனை மயக்கின.

அந்த மாதிரி அனுபவம் அவனுக்குச் சொந்தமாக வேண்டும். அதற்கு ஒரே வழி நளினியை மணந்து கொள்வதுதான்.

அவனுடைய கரிய நிறமும், சப்பை மூக்கும் அவனுடைய ஆசைகளுக்கு அணை போட முடியவில்லை. அவனுடைய இளமையும் பண மும் போதும் அவனுக்கு. ஆனால் அவனை

நளினி விரும்ப வேண்டுமே. அதுவரை அவள் வெளிப்படையாக எந்த அறிகுறியையும் காட்டிக்கொள்ளவில்லை. அவள் அவனை விரும்பினாலும் அவளுடைய தந்தை அவனை அவளுக்கு மணம் முடிக்கச் சம்மதிப்பாரா? கஜேந்திரா மில்லின் சொந்தக்காரர், நானூறு ரூபாய் வரும்படிக்கு நாயாக அலையும் சம்பத்தை மருமகனாக ஏற்க முடியுமா? அவர் வீட்டிலிருந்த ஸ்டீரியோகிராமை வாங்கும் அளவுக்குக்கூட அவனுக்குச் சொத்துக் கிடையாதே.

இரவு வெகுநேரம் யோசித்தான். யோசித்து யோசித்து மூளையே அவனுக்குக் கலங்கி விட்டது. கடைசியில், ஒரு முடிவுக்கு வந்து விட்டான்.


அவனை நளினி ஏற்றுக் கொண்டே தீர வேண்டும். அவனுடைய திட்டத்தை நிறைவேற்ற ஒரு நல்ல சந்தர்ப்பம்தான் தேவை. அது ஆபத்தானது என்பதை அவன் உணர்ந்திருந்தாலும், ஆசை அவனை ஊக்குவித்தது. 'கேடிலக்' காருக்காகவும், அழகிய பங்களாவுக்காகவும், எந்த ஆபத்தையும் எதிர்நோக்கும் துணிவு அவனுள்ளே ஏற்பட்டு விட்டது.

மறுநாள் காலை பத்து மணிக்கு வக்கீல் சங்கத்தில் நளினியைச் சம்பத் சந்தித்தான். அப்போது அவனுடைய கண்களுக்கு அவள் அழகியாகவே தோற்றம் அளித்தாள். அவள் உடுத்தியிருந்த பாணியும், நல்லலங்காரமும் அன்று அவனுக்குப் பிரமாதமாகத் தோற்றமளித்தன. இளமை தரும் கவர்ச்சி அவளிடம் இருப்பதை அப்போதுதான் உணரத் தொடங்கினான். அவள் தனக்குக் கிடைத்தே தீர வேண்டும் என்னும் வெறி அவனை ஆட்கொண்டு விட்டது.

வக்கீல் சங்கக் கூட்டம் ஆரம்பமாக இன்னும் சிறிது நேரமாகலாம் என்று தெரிந்ததும் நளினியும் அவனும் கஸ்தூரி ஹோட்டலுக்குச் சென்றார்கள். பில்லுக்கு வழக்கம் போல் நளினியே பணம் கொடுத்தாள். ஹோட்டலை விட்டு வெளியே வந்தபோது, சம்பத் சொன்னான்: ''தினமும் நீதான் உபசரிக்கிறாய். உன்னை உபசரித்து விருந்து நடத்த வேண்டும் என்று ஆசை.''

''ஒரு நாள் அதற்கு ஏற்பாடு செய்து விட்டால் போகிறது'' என்றாள், நளினி.

''அதற்கு இப்போது சந்தர்ப்பம் வந்திருக்கிறது.''



''என்ன?''
''நாளை எனக்குப் பிறந்த நாள்.''
''ஓ... விஷ் யூ ஹாப்பி பெர்த் டே...''
''தேங்க்ஸ்.. நீ கட்டாயம் வரவேண்டும்!'' சம்பத் குழைந்து கெஞ்சினான்.
''எப்போது வரவேண்டும்?''
''உனக்கு எப்போது சௌகரியப்படுமோ அப்போது.''
''என்றால் நாளைக்கு வர முடியாதே.. அப்பாவோடு பக்கத்து ஊருக்கு ஒரு கல்யாணத்துக்குப் போக வேண்டியிருக்கிறதே'' என்றாள் நளினி.

''நீ இல்லையென்றால், பிறந்த நாளைக் கொண்டாடவில்லை.''

''ஐயோ, எனக்காக நிறுத்த வேண்டாம்.''

''நோ நோ... என்னுடைய பிறந்த நாளை எந்த வருடமும் நான் கொண்டாடியதேயில்லை. நீயும் வந்தால் நன்றாக இருக்குமே என்பதால் தான் இந்த வருஷம்...''

''சாயங்காலம் ஆறு மணிக்குத் திரும்பி விடுவேன். அதற்குப் பிறகு வரலாமா?''– நளினி கேட்டாள்.

''ஓ. ஏழு மணிக்குள் வந்தால் போதும்'' என்றான் சம்பத், உற்சாகமாக.

''சரி'' என்று தலையை அசைத்தாள் நளினி.

''உனக்காகக் காத்திருப்பேன். நான் கொண்டாடுவதே உன்னை உத்தேசித்துத் தான்.''

''கட்டாயம் வந்து விடுவேன். வேறு யாரெல்லாம் வருகிறார்கள்?''

''ஒன்றிரண்டு நண்பர்களை அழைத்திருக்கிறேன்'' என்றுபொய் சொன்னான். ''நீதான் பிரதம விருந்தாளி'' என்றான். நளினி சம்மதத்தோடு தலையை அசைத்தாள். சம்பத் திருப்தியோடு பெருமூச்சு விட்டான். இருவரும் வக்கீல் சங்கக் கட்டடத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தனர். ஒரு திருப்பத்தில் திடீரென்று ஒரு கார் உறுமிக்கொண்டு அவர்களைக் கடந்து சென்றபோது, இருவருமே திடுக்கிட்டனர். அது கருணாகரனுடைய கார்.

''ஆள்மீது மோதுவது மாதிரியல்லவா கார் வந்தது'' என்றாள் நளினி பத்தற்றத்தோடு.

''புரட்சிக் கட்சித் தலைவர் ஆயிற்றே. கார் ஓட்டுவதிலேயும் புரட்சி செய்கிறார் போலிருக்கிறது'' என்றான் சம்பத்.

''இப்படி அஜாக்கிரதையாக ஓட்டி ஆளைக் கொல்வதா புரட்சி?''

''அவர்களுடைய பிரதான தலைவர் மாசேதுங், அதிகாரம் என்பது துப்பாக்கிக் குழாயிலிருந்துதான் வெளிப்படும் என்று போதித்திருக்கிறார்.''

''இவரால் அப்பாவுக்குத் தலைவேதனை.''
''என்ன?''



''எங்கள் மில் தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யும்படி தூண்டுகிறார்.''
''இந்தியாவின் அமைதியும் சுபிட்சமும் இந்த மாதிரி ஒருசிலருடைய பிடியில் சிக்கித் தவிக்கின்றன. ஜட்ஜ் மீது கண்டனத் தீர்மானம் போடுவதற்கும், இவர்தான் காரணம்'' என்றான் சம்பத், எரிச்சலுடன்.
''தீர்மானம் கொண்டு வருவதாகக் கொடுக்கப்பட்ட நோட்டீஸில் இவருடைய கையெழுத்து இல்லையே!'' என்று வியப்போடு கேட்டாள், நளினி.
''இவருடைய வேலையே இதுதானே. எதிலும் நேரடியாகத் தலையிட மாட்டார்.

மற்றவர்களைத் தூண்டி விட்டுப் பின்னால் இருந்து கொள்வார்'' என்றான் சம்பத்.

நளினி வெறுப்பினால் முகத்தைச் சுளித்தாள். சற்றுத் தூரத்திலிருந்த வக்கீல் சங்கக் கட்டடத்தின் அருகில் காரை நிறுத்தி விட்டுக் கருணாகரன் கட்டடத்தின் படிகளில் ஏறுவது தெரிந்தது. வழக்கமாக அவரிடம் காணப்படும் மிடுக்கான நடை இல்லை. சோர்வுடன் தளர்ந்து செல்வது போலிருந்தது.

நளினியும் சம்பத்தும் சங்கக் கட்டடத்துக்குச் சென்றபோது, பிரதான அறையில் கூட்டம் நிரம்பி யிருந்தது. சங்கத்தின் தலைவரான ஆவுடையப்ப பிள்ளை இன்னும் வரவில்லை. கூட்டம் ஆரம்பமாக இன்னும் பதினைந்து நிமிடங்கள் இருந்தன. அறைக்குள் வக்கீல்களின் இரைச்சல் நிரம்பியிருந்தது. கருணாகரன் ஒரு மூலையில் நாற்காலியில் கண்களை மூடியவாறு அமர்ந்திருந்தார். அவருடைய முகம் களையிழந்திருந்தது. கவலையும் சிந்தனையும் முகத்தில் அப்பியிருந்தன. முந்தின இரவு முழுதும் அவர் தூங்கவே இல்லை. இமைகள் கனத்துக் கிடந்தன. திடீரென்று வெளி நாட்டுப் பௌடரின் வாசனை வீசியது. கண்களைத் திறந்தார். அவருடைய ஜூனியர் சிங்காரம் அவரை நோக்கி வந்ததைப் பார்த்ததும் அவருடைய உள்ளத்தில் தீ மூண்டது.

(தொடரும்)

ருஷ்ய ராமர்

நமது கலாசாரத்தையும் பண்பையும் விளக்கும் ராமாயண காவியத்தை வேற்று நாட்டவரும் விரும்புவதில் வியப்பில்லை.

மாஸ்கோ மத்திய குழந்தைகள் நாடகக் குழுவினர் நம் ராமாயணத்தை மேடை நாடகமாகத் தயாரித்துக் கடந்த பதினொரு ஆண்டுகளாக ருஷ்யாவில் நடத்தி வருகிறார்கள். இதைத் தயாரித்தவர் நதால்யா குலேவா என்ற பெண்மணி. இந்தத் தயாரிப்புக்காக இவர் நேரு பரிசைப் பெற்றவர்.

ருஷ்யக் குழுவினர் ராமாயணத்தை மிகவும் பக்தி சிரத்தையுடன் தயாரித்திருக்கிறார்கள். உடைகள், காட்சி அமைப்புக்கள் ஆகியவைகளில் மிக்க கவனமும் ஆராய்ச்சியும் செய்திருக்கிறார்கள். மேடையிலே காட்ட முடியாத காட்சிகளை சூத்ரதாரி இடையிடையே விளக்கம் கொடுத்து நாடகத்தைத் தொடருவது கதைத் தொடர்ச்சிக்கு உதவுகிறது.

எளிமையான ஆனால் ஏற்றமிக்க காட்சி அமைப்புகள். மேடையில் விளக்குகளை அணைக்காமலேயே அரங்க நிர்மாணத் திரையை இருவர் திருப்பி வைக்கும்போது வேறு காட்சிக்கு உரிய சூழ்நிலை உருவாகி விடுகிறது. நம் கண்கள் வியப்பாலும் மகிழ்ச்சியாலும் விரிகின்றன.

மாரீசன், ஜடாயு, ஹனுமான், கூனி முதலிய பாத்திரங்களின் அமைப்பும் நடிப்பும் பொதுமக்களின் பலத்த கைதட்டல்களைப் பெறுகின்றன. குரங்குச் சேஷ்டைகளைத் தத்ரூபமாகக் காட்டுகிறார்கள். நாடகத்தின் சிரிப்புப் பகுதி அதுதான்.

எல்லாக் கதாபாத்திரங்களும் ருஷ்ய மொழியே பேசுகிறார்கள். மொழி புரியாது போனால் என்ன? மொழிக்கு அப்பாற்பட்ட நடிப்புத் திறனால் நம்மைக் கவர்கிறார்களே!

—கௌசிகன்





வாய்மையே வெல்லும்!

அருந்ததி

ஒரு நாட்டிலே ராஜா ஒருவர் இருந்தார். தம் நகரத்துக்கு யார் எந்தப் பொருள் விற்பனை செய்ய வந்தாலும், அந்தப் பொருள் விற்பனை யாகாமல் போனால் இரவோடு இரவாக அதனை விலைக்கு வாங்கி அரண்மனையில் சேர்த்து விடுவார்.

விற்பனை செய்ய வந்தவர்கள் வெறுங் கையோடு போகக் கூடாது. பொருள் விற்பனை ஆகவில்லையே என்று வருந்தக் கூடாது. மகிழ்ச்சியோடு திரும்ப வேண்டும்.

ஓர் ஏழைக் குடியானவன் நகரத்துக்கு வந்தான். அவனிடம் தகரப் பெட்டி யிருந்தது. அதில் நிறையத் தெருப் புழுதியை நிரப்பி எடுத்துக் கொண்டு விற்பனை செய்ய வந்தான். விற்க முடியவில்லை.

இரவு அரண்மனைச் சேவகர்கள் வந்தனர். அவன் விற்கக் கொண்டு வந்த பொருளைக் கேட்டார்கள்.

"இது தெருப் புழுதி. இதன் விலை ஆயிரம் வராகன்" என்றான். அரண்மனைக்குப் போய் நடந்த விவரத்தைச் சொன்னார்கள்.

"அவன் நம் நேர்மையை நம்பி வந்தவன். ஆயிரம் வராகன் கொடுத்து அந்த ஓட்டைப் பெட்டியையும் ஒன்றுக்கும் உதவாத புழுதியையும் அரண்மனையில் கொண்டு வைத்துவிடுங்கள்!" என்றான் மன்னன்.

அரசன் உத்தரவுக்குப் பணிந்து வாங்கினார்கள். அரண்மனையில் கொண்டு வந்து வைத்தார்கள். புழுதியை விற்ற ஏழை தன் ஊருக்கு மகிழ்ச்சியுடன் போய்ச் சேர்ந்தான்.

அன்றிரவு! நடுநிசியில் அரசர் எழுந்து பார்த்தார். தமது அரண்மனை வாயில் பக்கம் அழகான பெண் நிற்பதைக் கண்டார். நெருங்கிப் போய், "தாயே! நீ யார்? உனக்கு என்ன கவலை?" என்று கேட்டார்.

"என் பெயர் லட்சுமி தேவி! இந்த அரண்மனைக்குள் வரக்கூடாத குப்பையும் புழுதியும் வந்து விட்டன. நான் இங்கிருந்து வெளியேறுகிறேன்" என்றாள் லட்சுமி.

"தேவி! நான் கொடுத்த வாக்கும் பொய்த்துப் போகக் கூடாது. எனவே மன்னிக்க வேண்டும்."

"நான் குடியிருக்க மாட்டேன். அரண்மனையிலிருந்து வெளியேறுகிறேன்." - இவ்வாறு விடைபெற்று லட்சுமிதேவி போய்க் கொண்டிருந்தாள்.

சில விநாடி நேரம் சென்றது. அழகான வாலிபன் ஒருவன் கண்ணைப் பறிக்கும் அழகுடன் அரண்மனை வாசலைக் கடந்தான்.

"தேவா! யார் நீ?"

"நான்தான் தருமத்தின் தேவன்! லட்சுமி வெளியேறிய பின்பு எனக்கு இங்கு வேலை இல்லை. போகிறேன்."

"தரும தேவனே! நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றினேன். இனி உன் இஷ்டம்" என்றான் அரசன்.

தருமத்தின் தேவன் அங்கிருந்து போய்விட்டான். இன்னும் சில விநாடிகள் சென்றன. இளம் புயவன் ஒருவன் அங்கிருந்து போவதைக் கண்டான் அரசன். "புயவனே! நீ யார்?"

"என் பெயர் நேர்மை. லட்சுமி தேவியும் தரும தேவனும் போன பின்பு நான் வாழ முடியாது!"

"இனி உன் இஷ்டம் தேவா!" என்று அரசன் சும்மா இருந்தான்.

நேர்மையும் போய்க் கொண்டிருந்தான். அடுத்து கீர்த்திதேவனும் போய்ச் சேர்ந்தான்!

அரசன் முன்னால் தள்ளாடிக் கொண்டு பழுத்த பழமாக ஒரு முனிவன் வந்தான்.



"தேவனே! தாங்கள் யார்?"

"அரசே! இந்த அரண்மனைக்குள் நீ புழுதியைக் கொண்டு வைத்தாயாம். லட்சுமி தேவி சொன்னாள். அவள் போனாள். அவளைத் தொடர்ந்து தருமம் போனது. தருமம் போனால் நேர்மை கெடும். நேர்மை கெடக் கெடக் கீர்த்தியும் போய்விடும்."

"எல்லாரும் போனதைப் பற்றி நான் கவலைப்படவில்லை!"

"நீ கவலைப்படவில்லையா?"

"இல்லை தேவா. நீங்கள் யார்?"

"என் பெயர் வாய்மை!"

அரசன் 'கோ'வென்று அழுதான். தொழுதான். காலில் விழுந்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

"மற்றவர்கள் போகும்போது தடுத்தாயா?"

"இல்லை!"

"என்னை ஏன் தடுக்கிறாய்?"

"என்னிடம் இருப்பது வாய்மை. நான் வாய்மையைக் காத்தவன். எந்த நபர் எதை விற்பனை செய்யக் கொண்டு வந்தாலும் இரவிலே அவர்கள் கவலையின்றி வீடு திரும்ப வேண்டும். விற்பனை ஆகாத பொருள்களை வாங்குவதாக வாக்குக் கொடுத்தேன். யாரை நம்பி அவர்கள் விற்பனை செய்ய வந்தார்கள் தேவா?"

"உன் வாய்மையை நம்பி!"

"அது ஒன்றுதான் என் சொத்து. நீயும் என்னைக் கைவிடலாமா?"

வாய்மை சற்றுத் தள்ளாடியது. அரசனுக்கு மகிழ்ச்சி பொங்கியது.

சில விநாடிகள் சென்றன. வாய்மையைத் தேடி நேர்மை வந்தது. நேர்மையைத் தேடிக் கீர்த்தி வந்தது. கீர்த்தியைத் தேடி லட்சுமி வந்தாள்.

யாவரும் அரசனைச் சுற்றி நின்றார்கள்.

"எங்கே வந்தீர்கள்?" என்றான் அரசன்.

"எங்களுக்கு உயிர் தருவது வாய்மை. வாய்மைக்கு நாங்கள் உடல்!"

"இப்போது நீங்கள் எங்கே போகப் போகிறீர்கள்?"

"வாய்மையை நாடி நாங்கள் வந்தோம். வாய்மை உனக்குள் அடக்கம். மீண்டும் நாங்கள் அரண்மனைவாசிகள்!" என்றனர்.

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. .ajendran

வளரும் குழந்தைகளுக்கு வாய்ப்பான துணை இன்க்ரிமின்* !



துள்ளித் திரியும் கன்றுப் பருவம்... ததும்பி வழியும் சக்தி... பொங்கிப் பெருகும் பூரிப்பான ஆரோக்கியம்!
இதுதான் வளரும் பருவம் உடலும் உள்ளமும் ஓங்கி வளரும் இச் சமயத்தில் உங்கள் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் வழங்கி வாருங்கள். பலனளிக்கும் வைட்டமின்கள், இரும்புச் சத்து, அதி முக்கிய அமினோ அமிலம்–வளரும் பருவத்தில் அத்தியாவசியமான இவை அனைத்தும் அடங்கியது இன்க்ரிமின் டானிக்



இன்க்ரிமின்*

இன்க்ரிமின் டானிக் வளரும் பருவத்தினருக்கு ஒரு வரப்பிரசாதம்

Registered as a Newspaper in Ceylon

